
# பாலாயி



ஜோசப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

H. H. Wickramasinghe
Coordinating Secretary to State Minister
State Ministry of Plantation Industries
8th Floor, "Sethsiripaya", Stage II,
Battaramulla.

# பாலாயி

## மூன்று குறுநாவல்களின் தொகுதி

தெளிவத்தை ஜோசப்

H. H. Wickramasinghe
Coordinating Secretary to State Minister
State Ministry of Plantation Industries
8th Floor, "Sethsiripaya", Stage II,
Battaramulla.

வெளியீடு :

85, இரத்தின ஜோதி
சரவணமுத்து மாவத்தை
கொழும்பு - 13
தொலைபேசி : 331596

20A/9, கோபாலகிருஷ்ண தெரு
தியாகராய நகர்
சென்னை - 600 017.
தொலைபேசி : 8283391

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரைவி வெளியீடு: 3

முதற்பதிப்பு : ஜூலை 1997

©

விலை : 100/0


| | | |
|---|---|---|
| Title | : | PAALAYI |
| Subject | : | Three Short Novels |
| Author | : | THELIVATHTHAI JOSEPH |
| No. of Pages | : | 160 |
| Paper | : | 11.6 Kg MAPLITHO |
| Price | : | 40 |
| Size | : | 12.5 x 18 cm |
| Publisher | : | DURAIVI<br>20A/9, Gopalakrishna Street<br>T.Nagar<br>Chennai - 600 017. |
| Printer | : | *Page* Offset,<br>6/2, Devarajan Street, (Next to Rathna Cafe), Chennai - 600 005. |
| Laser Typeset | : | Sumathi Lasers, Chennai-6<br>Phone: 044-8523424 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



ஆஞா
**சந்தனசாமிப்பிள்ளை**



அம்மா
**பரிபூரணம்**

தேயிலைத் தோட்டத்துக்கு வாத்தியார்கள்
தேவையென்று
திருச்சி ஸ்டேஷனில் தொங்கிய
'போர்ட்' கண்டு.
சித்திக்கும் சொல்லாமல்
திருட்டுத் தனமாய் ரயிலேறி
ஊவாக்கட்டவளை என்னும்
தோட்டத்துக்கு ஓடிவந்து
வாத்தியாராகித் திரும்பவும்
திருச்சி சென்று
திருமணம் முடித்து அம்மாவுடன் திரும்பிவந்து
ஊவாக்கட்டவளையையே தனது
ஊர் உலகமாக்கிக் கொண்டு.
மலைநாட்டான் என்னும் என்
பெருமைக்கும் அதன்பின்
தெளிவத்தை என்னும் என்
பெயருக்கும் மதிப்புக்கும்
வித்தாய் இருந்து இன்று
தெய்வமாகிப் போய்விட்ட
எனதருமை
ஆஞா சந்தனசாமிப் பிள்ளைக்கும்
அம்மா பரிபூரணத்துக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

தெளிவத்தை ஜோசப் அவர்கள் மலையக எழுத்தாளர்களின் முன்னோடிகளில் ஒருவர். கடந்த 45 ஆண்டுகளாக நாவல், சிறுகதை, நாடகம், கட்டுரைகள் எழுதி வருபவர். இலங்கையின் சாகித்திய மண்டலப் பரிசு உட்பட பல்வேறு பரிசுகளும் பாராட்டுகளும் பெற்றவர்.

இத் தொகுதியிலுள்ள **ஞாயிறு வந்தது** என்ற குறுநாவல் கலைமகளில் வெளிவந்து சிறப்படைந்தது. மாதந்தோறும் 10ம் திகதியை ஆவலோடு திருவிழாப் போல எதிர்பார்க்கும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கையில் கிடைக்கும் சிறு கூலித் தொகையை வல்லூறுகள் போலப் பறித்தெடுக்கும் அறவட்டிக்காரன், கொள்ளை விலையில் பண்டம் விற்கும் மளிகைக் கடைக்காரன் பறித்தெடுக்க, எஞ்சும் பணத்தில் குடித்து விட்டு துன்பங்களை மறக்க முயலும் தொழிலாளர்களின் அவல வாழ்வை நினைவூட்டும்.

**மனம் வெளுக்க** என்ற கதை தேயிலைத் தோட்டங்களில் நிலவும் குரூரமான அதிகாரத்துவ மலையில் அறியாமையுடன் முட்டித் துன்புறும் தொழிலாளரின் குடும்பச் சிதைவை யதார்த்தமாகப் படம் பிடிக்கும்.

பாலாயி என்ற தலைப்புக் கதை தேயிலைத் தோட்டங்களை நிர்வகிக்கும் துரைகளின் தர்பாரையும், மரணப் படுக்கையிலுள்ள தாயை தமிழ்நாட்டில் பார்த்துவர மனைவியைப் பிரிந்து செல்லும் கணவனின் சோகக் கதையையும் கூறும்.

இம்மூன்று குறுநாவல்களுமே கூட்டு மொத்தமாக தேயிலைத் தோட்டங்களில் இலங்கையின் வளம் பெருக்க கொத்தடிமை போல உழைக்கும் மக்களின் துன்ப வாழ்வை யதார்த்தமாகப் படம் பிடிப்பன.

இலங்கையின் தலைசிறந்த படைப்பாளர்களில் ஒருவரான தெளிவத்தை ஜோசப்பின் மூன்று குறுநாவல்களை நூலாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்நூலை வெளியிடுவதில் உதவிய நண்பர் செ.கணேசலிங்கனுக்கு என் அன்பு, நன்றி.

*சென்னை*
*8.7.1997*

**துரை விசுவநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கையில் பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்டப் பயிர் செய்கைக்கு உழைப்புச் சக்தியாக விளங்கியவர்கள் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட தொழிலாளர்களே.

தேயிலை, ரப்பர் முதலிய பெருந்தோட்டத் துறையிலடங்கும் சகல தோட்டங்களிலும் 90 சதவீதமானவர்கள் இந்திய வம்சாவழித் தமிழர்களே.

18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் (1795) இலங்கையின் பல பாகங்களை தங்கள் வசம் கொண்டு வந்து விட்ட ஆங்கிலேயர்கள் 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே (1815) கண்டி ராஜ்யத்தைக் கைப்பற்றினர். இப்படி முழு இலங்கையையும் தம் வசப்படுத்திய பிறகே பெருந்தோட்ட அறிமுகத்தின் மூலம் இலங்கையின் பொருளாதார வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினர்.

கண்டியும், கண்டியைச் சூழ்ந்த -அண்மித்த - மலைப் பகுதிகளும் மனித சஞ்சாரமற்ற - காடுகள் அடர்ந்த - பிரதேசங்களாக இருந்தன. காடுகளை அழித்து பயிர் செய்கைக் கேற்ற பகுதியாக இம்மலைப் பிரதேசத்தை மாற்றவும்; மலைகளைக் குடைந்து பாதைகள் போடவும் நிரந்தரமான பெரிய அளவிலான ஒரு தொழிலாளர் கூட்டம் தேவைப்பட்டது.

விவசாயிகளாய் இருந்த் பெரும்பான்மை சிங்கள மக்கள் தங்களது கிராமிய சமூக அமைப்பிலிருந்து முற்றாக விடுபட்டு புதிய இடங்களில் குடியேறவும் கடினமான பணிகளில் தங் களை ஈடுபடுத்திக் கொள்ளவும் தயாராய் இருக்கவில்லை. நிலத்தாலும் சமூகக் கட்டுப்பாட்டு முறைகளாலும் கிராமத்துடன் பிணைக்கப்பட்டிருந்த இவர்களுக்கு அதற்கான அவசியமும் இருக்கவில்லை. ஆகவே பெருந்தோட்டத்துறை தமிழர்கள் எனக் கூறப்படும் இந்திய வம்சாவழியினரின் வரலாறு இந்நாட்டின் சரித்திரத்தில் இடம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தேயிலைத் தோட்டங்களுக்கே இம்மக்கள் கூட்டி வரப்பட்டாலும் ''கண்டிச் சீமைக்குப் போவதாகவே'' கூறிக் கிளம்பி வந்தனர். மலைநாடு என்னும் பிரதேசம் 'கண்டிச்சீமை' என்றே குறிக்கப்பட்டு வந்துள்ளதை வரலாறு காட்டுகின்றது.

இப்படிக் கூட்டி வரப்பட்ட இம்மக்கள் சுற்றியுள்ள கிராமிய மக்களுடனேயே வாழ்ந்தாலும், சுமூகமாகவே பழகினாலும் இந்த நாட்டை சுரண்ட வந்த அன்னிய ஆங்கிலேயர்களின் நடவடிக்கைகளுக்குத் துணைபோக வந்த இன்னுமொரு அன்னியர்கள், என்னும் மனப்போக்கே பெரும்பான்மை சிங்கள மக்களிடம் காணப்பட்டது. இவர்கள் தொழில் புரியும் தோட்டங்கள் ஏழை சிங்கள விவசாயிகளிடம் இருந்து ஆங்கிலேயர்களால் அபகரிக்கப்பட்டவை என்னும் ஆத்திரமும் இம் மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்தேயுள்ளது.

தென்னியந்தியர்கள் சிங்கள மக்களின் பாரம்பரிய எதிரிகள் என்ற ரீதியிலேயே ஒரு சில சரித்திர ஆசிரியர்களும் எழுதுகின்றனர். புத்தி ஜீவிகள் சிலரே இப்படிக் கூற முன்வரும் போது சாதாரண ஒரு சிங்கள கிராமியனின் மனநிலை எப்படியானதாக இருக்கும்!

இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை 1931ல் வழங்கப்பட்டது. 1928 லிருந்தே இந்தியத் தோட்ட மக்களுக்கு வாக்குரிமை வழங்கக் கூடாது என்னும் கோஷம் பலமாய் ஒலித்தது. சிங்கள அரசியல் வாதிகளினதும் இலங்கைத் தமிழர்களின் மேல்மட்டப் பிரதிநிதிகளினதும் ஏகோபித்தக் குரலாய் இதுவே ஒலித்தது. இந்தியத் தமிழர்களின் இலங்கை வரவைத் தடை செய்வதில் இலங்கைத் தமிழர்கள் காட்டிய ஆர்வமும், கல்வித் தகுதி; வருமானத்தகுதி என்பனவற்றின் அடிப்படையிலேயே வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை ஆதரித்த வேகமும் இவர்களுடைய இந்தியத் தமிழர் விரோத உணர்வை பறைசாற்றி நின்றன.

1948ல், இலங்கை சுதந்திரம் அடைந்த கையோடு இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டம் அமுலாக்கப்பட்டது. பெருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகையான தோட்ட மக்களை நாடற்றவர்களாகவும் வாக்குரி மையற்றவர்களாகவும் ஆக்கி விடுவதே இந்தச் சட்ட அமுலாக் கலின் முக்கிய குறிக்கோள்.

அரசியல் உரிமைகள் இல்லாதவரை தங்களது அடிமை நிலையில் இருந்து இம்மக்கள் விடுபட முடியாது என்பதை உணர்ந்தே இச் செயல்பாடுகள் நடந்தேறின.

ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேலாக இந் நாட்டின் வளத்துக்காக ரத்தம் சிந்தி உழைத்து உடல் நலிந்த இம் மக்கள், அரசியல்; பொருளாதாரம்; கல்வி; போன்ற சகல மட்டத்திலும் நெருக்குதலுக்கும்; அசட்டைகளுக்கும்; அந்நியப் படுத்தலுக் கும் முகம் கொடுத்தாலும் மிகவும் பொறுமையுடனும் அசாத் திய சகிப்புத் தன்மையுடனும் நின்று போராடித் தம்மை ஒரு தேசிய சிறுபான்மை இனமாக இந்நாட்டுடன் ஐக்கியப்படுத் திக் கொண்டு; ஆளும் வர்க்கத்தினருக்குத் தங்களது முக்கியத்து வத்தை உணர்த்தியே வந்துள்ளனர்.

பெருந்தோட்ட மக்களின் பின்தள்ளப்பட்ட அரசியல் பொருளாதார சமூக நடவடிக்கைகளால் இவர்களின் கலை இலக்கியத் திறமைகள் புறக்கணிக்கப்பட்டிருந்தன. இம்மக்க ளைப் பற்றிய இலக்கியங்கள் பரவலாக வெளிவராமையும், அதன்மூலம் இம்மக்களைப் பற்றி மற்றவர்கள் அறிந்து கொள் ளாமையும் கூட இம்மக்களின் பின்னடைவுக்கான ஒரு முக்கிய காரணியாகும்.

தமது சமூகத்தை மதித்து அதன் குறைபாடுகளை உணர்ந்து; அவைகளைக் களையவும்; அரசியல் சமூக உணர்வு களை உருவாக்கவும் மலையகத்தின் படித்த இளைஞர்கள் மேற்கொண்ட பணிகள் மகத்தானவை. சஞ்சிகை வெளியீடு கள்; ஒன்றுகூடல்கள், கலந்துரையாடல்கள்; கல்வி, மற்றும் கலை இலக்கிய மகாநாடுகள் என்று அறுபதுகளின் பின் மலையகத்தை உலுப்பி எடுத்தனர் - உசுப்பியும் விட்டனர். இம்மக்களைப் பற்றிய இலக்கியங்கள் வெளிவரத் தொடங் கின!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரல் விட்டு எண்ணிவிடும் அளவிலேயே நூல்கள் வெளிவந்திருக்கின்றன என்றாலும் அவைகள் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் கோடிட்டுக் காட்டக் கூடியன.

மலையகம் என்னும் கோஷத்தை முன்வைத்து இம் மக்களுக்கு ஒரு அடையாளத்தைத் தேடித்தர முயன்ற இவ்வெழுத்துக்கள் மலையக இலக்கியம் என்னும் மகுடத்துடன் ஈழத்து இலக்கியத்துக்கு ஒரு செழுமையையும் பூரணத்துவத்தையும் சேர்த்துக் கொண்டிருக்கின்றன.

இந்த வரலாற்றுப் பின்னணியுடன் இந்த நூலில் இடம் பெறும் படைப்புக்கள் வாசிக்கப்படும் போது தான் அதன் முக்கியத்துவம் புலனாகும். இதில் உள்ள மூன்று குறுநாவல்களும் இந்த மக்களின் 'அவலமான வாழ்வை; அவர்கள் சுரண்டப்படும் விதத்தை; அரசியல் கெடுபிடிகளினால் அனாதரவாய்ப் போய்விடும் நிலைமைகளை எடுத்துக் காட்டுகின்றன.

''ஞாயிறு வந்தது'' என்னும் குறுநாவல் வீட்டையும், ''மனம் வெளுக்க'' தோட்டத்தையும், 'பாலாயி' நாட்டையும் தொட்டுக்காட்டுகின்றன.

இம்மக்களுக்கு வீட்டிலும் பிரச்சனை! தோட்டத்திலும் பிரச்சனை! சட்ட மூலங்களால் நாட்டிலும் பிரச்சனை!

மலையக சமூகத்தின் குடும்ப அமைப்பில் கணவன்-மனைவி இருவருக்கும் பொருளியல் சூழ்நிலை சமமான வாய்ப்பையே ஏற்படுத்திக் கொடுக்கிறது. இருவருமே குடும்பத்துக்கான வருமானத்தைத் தேடுகின்றனர். சில வேளைகளில் கணவனை விட மனைவி கூடுதலான சம்பளம் பெறுபவளாகவும் இருப்பாள். இருந்தும் கணவனின் செல்வாக்கும் தலைமையுமே குடும்பத்தில் பேணப்படுகின்றது. தாங்கள் குடிபெயர்ந்துவந்த தென்னிந்திய கிராமிய சமூகக் கட்டுமானங்கள் இவர்களிலிருந்து விடுபடுவதாக இல்லை.

சன்னாசி குடிகாரன் தான் என்றாலும் குடும்பத்தின் தலைவனாயிற்றே என்று ஊற்றும் மழையையும் பொருட்படுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமல் அந்த இருட்டில் அவன் மயங்கி விழுந்து கிடக்கும் இடம் தேடி ஓடுகின்றாள், காத்தாயி.

தோட்ட மக்கள் மத்தியில் கணவன்-பொதுவாக ஆண்கள் - குடிகாரர்களாகவும், முழுக் குடும்பத்தின் பாரங்களையும் சுமப்பவர்களாகவும் பெண்களே இருப்பதும் வழமையான தொரு அம்சம். மதுவின் தீமைபற்றிய தீவிரமான பிரச்சாரங்கள் எதுவும் மேற்கொள்ளப்படாத ஒரு சூழலில் இம் மலையக மக்களின் கூடுதலான சீரழிவுக்கு ஒரு முக்கிய காரணியாக இருப்பது இந்தக் குடிப்பழக்கம்.

அரசியல், பொருளாதார ரீதியில் உரிமைகளைப் பெற்று தோட்டத் தொழிலாளி வசதியடைந்தாலும் தத்தம் குடும்பங்க ளைக் கவனிக்கும் பொறுப்புள்ள கணவனாய்; தகப்பனாய் இருக்கத் தவறின் அந்தக் குடும்பத்தின் எதிர்காலம் பிரச்சினைக் குரியதாகவே இருக்கும். சமூக ரீதியில் குடும்பத்தின் நிலைமை களும் சீர்படுத்தப்படும் போதே இவர்களின் வாழ்வு உயர்ந்த தாக அமையும்.

குடியின் கொடுமையைக் காட்டும் இந்த "ஞாயிறு வந்தது" குறுநாவல் 1966-ல் கலைமகளில் வெளிவந்தது. கலைமகள் போன்ற பத்திரிகை, இலங்கையின் ஒரு முடுக்கில் மிகவும் பின்தள்ளப்பட்டுள்ள நிலையில் வாழ்ந்து கொண்டி ருக்கும் இம்மக்களைப் பற்றிய படைப்பிற்கு இடம் கொடுக் கும் என்று நான் கருதவில்லை. இங்கே எழுதுவதற்கு ஏடுகள் போதாத ஒரு சூழ்நிலையில் அங்கே அனுப்பிப் பார்த்தேன். வெளியிட்டதுடன் அதுபற்றி வந்த கடிதங்கள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து எனக்கு அனுப்பியிருந்தார்கள். நாவலாசி ரியை திருமதி ராஜம் கிரஷ்ணனின் கடிதமும் அதற்குள் இருந்தது. எனது படைப்பு கலைமகளில் வெளிவந்த போது இருந்த மகிழ்வையும் விடக் கூடுதலாக இருந்தது. திரு. கி.வ.ஜ. அவர்களின் பெருந்தன்மை என் மனதில் உறைந்திருக் கிறது.

குடும்பம் என்னும் கட்டுக்கோப்பிலிருந்து வெளியே வந்ததும் தோட்டம் என்னும் வேலிக்குள் கட்டப்பட்டுக் கிடப்பவர்கள் இம்மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் கதி என்று இவர்கள் கிடக்கும் இந்தத் தோட்டங் களுக்குள்ளும் எத்தனை எத்தனைப் பிரச்சினைகள். பெரியவை கள் சின்னவைகள் என்றில்லாமல் அத்தனைக்கும் அவர்கள் முகம் கொடுத்தே தீர வேண்டியவர்களாகின்றார்கள்.

தோட்ட நிர்வாகம் கொண்டு நடத்தும் 'வங்கிக் கணக்கு கள்' பொதுவாக சகல தோட்டங்களிலும் நடைமுறைப்படுத் தப்படுவதில்லை. ஒரு சில தோட்டங்களில் மக்களின் நன்மை கருதி மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கைகள் இம்மக்களைச் சுரண்டியே வாழப் பழகிக் கொண்டோரால் எவ்வளவு நாசுக் காக தவறான வழியில் பயன்படுத்தப்படுகின்றன.

தோட்டத் தொழிலாளர்கள் அந்நியர்களாகக் கருதப்பட்ட தால் இலங்கையின் மரபு ரீதியான சட்டங்களுக்கு அப்பாற்பட் டவர்களாகவே இருந்தனர். அவர்களுக்காகவே புதுப்புதுச் சட்டங்கள் அவ்வப்போது பிரச்சினைகளுக்கேற்ப இயற்றப்பட் டன. அப்படி இயற்றப்படும் சட்ட திட்டங்களும் மறைமுக மாக மீறக்கூடியவைகளாகவே இருந்தன. இச்சட்டங்கள் கடைப்பிடிக்கத் தவறப்படும் பட்சத்தில் சட்டத்தை மீறுபவர் கள் அதற்கான தண்டனையை ஏற்கவேண்டிய நிலையும் இருக்கவில்லை!

'மனம் வெளுக்க' என்னும் குறுநாவல் தினகரனில் வெளி வந்தது.

நான்கு வாரத் தொடராக தினகரன் வார மஞ்சரியில் வெளிவந்த இப்படைப்பே தினகரனில் வெளிவந்த எனது முதல் படைப்பாகும். தினகரனுக்கு எழுதி எழுதி அனுப்பி அனுப்பி சோர்ந்து விட்ட நான் தினகரனைத் தவிர்த்து மற்ற அனைத்து ஈழத்து ஏடுகளிலும் எழுதினேன். திடீரென ஒருநாள் என்னை அழைத்த தினகரனின் அப்போதைய பிரதம ஆசிரியர் ஆர்.சிவகுருநாதன் அவர்கள் ''ஏதாவது எழுதுங்களேன்'' என் றார். நானும் வேண்டுமென்றே கூறினேன் ''எழுதிக்கொண்டு தானே இருக்கிறேன்'' என்று.

''தினகரனுக்கு எழுதுங்கள்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் அதைத்தான் அவர் வாயாலேயே எதிர்பார்த்தேன்.

''சிறுகதை என்றால் ஒன்றும் கையில் இல்லை. குறுநாவல் ஒன்று இருக்கிறது. ஐந்து வாரம் போல் வரும் என்றேன்.''

''உடனே அனுப்புங்கள்'' என்றவர் அடுத்தவாரமே அறிவித்தல் போட்டு, அதற்கடுத்த வாரமிருந்து நான்கு வாரங்கள் வெளியிட்டார். அதன்பின், இலக்கியக் கட்டுரைகள், நூல் அறிமுகங்கள், விமர்சனங்கள், என்று தினகரனில் நிறையவே எழுதி வருகின்றேன். இருப்பினும் 'புனைகதை' என்று நான் முதன்முதல் தினகரனில் எழுதியது இந்தக் குறுநாவல் ஒன்றே.

தினகரனுடனான எனது எழுத்துத் தொடர்புகள் அனைத்துக்கும் இந்தக் குறுநாவல் மூலம் ஆரம்ப விழா நடத்தி வைத்த திரு. ஆர்.சிவகுருநாதன் அவர்களை என் மனம் என்றும் நினைத்திருக்கும்.

குடும்பம்; தோட்டம்; இரண்டையும் கடந்த பின் இவர்கள் முன் பயங்கரமாக எழுந்து நிற்பது இந்த நாட்டு அரசியல்! இவர்களுக்காகவே இயற்றப்படும் அரசியல் சட்டங்கள்!

தொழிலாளர்களின் வெளியார் தொடர்பு தொழிலைப் பாதிக்கிறது என்பதால் இயற்றப்பட்டது 'சேவை ஒப்பந்தக் கட்டளைச் சட்டம்.'

வெளியாரின் வரவால் அரசியல் சமூக செல்வாக்கு தோட்டத்துக்குள் ஏற்பட்டு விடுவதைத் தடுக்க இயற்றப்பட்டது 'அத்து மீறல் தடைச் சட்டம்.'

இந்திய வம்சாவழித் தோட்ட மக்களின் குடியுரிமையைப் பறிப்பதற்காக இயற்றப்பட்டது 'இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டம்' என்று ஒவ்வொன்றும் இவர்கள் மென்னியைப் பிடித்துத் திருகிக் கொண்டிருந்தது.

இலங்கை இந்தியா இரண்டுமே ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் இருந்தபோது இம்மக்கள் தங்கள் குடும்பத்தின் நல்லவை கெட்டவை அனைத்திற்காகவும் அடிக்கடி தமிழகம் சென்று வந்து பழகியவர்கள். சுதந்திரத்தின் பின் — அதிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாகப் பிரஜா உரிமைச் சட்டத்தின் பின் — இவர்களது இந்தியப் பயணங்கள் முற்று முழுதாகத் தடை செய்யப்பட்டன; கட்டுப்படுத்தப்பட்டன. இந்தியாவுக்கு ஐந்து லட்சம் இலங்கைகக்கு மூன்று லட்சம் என்று சிரிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம், அம்மா இங்கே பிள்ளை அங்கே, என்றும் அல்லாடிப் போனார்கள்.

கோவில் கொடியேற்றம் திருவிழா என்று காரணம் காட்டி அவர்களை அங்கிருந்து கச்சத்தீவுக்கு வரச்சொல்லி இவர்கள் இங்கிருந்து கச்சத்தீவு போய் உறவுகளைப் பார்த்துப் பேசிச் சிரித்து அழுது அனுப்பிவிட்டு திரும்பி வந்த சம்பவங்கள் ஏராளம்.

இம்மக்களின் வரலாற்றிலேயே மிகவும் துர்ப்பாக்கிய மான நிகழ்ச்சி இவர்களின் கன்னிப் பயணம்தான்.

படகுகள் மூலம் அவர்கள் வந்தபோது பட்ட அவலங்கள் ஏட்டிலடங்காது. ஏறியவர்கள் அனைவருமே தலைமன்னார் கரையில் இறங்குவதில்லை. செத்துத் தூக்கிக் கடலில் எறிந்த வர்கள் போக மிகுதியே இறங்கும். இறங்கியவர்கள் அத்தனை பேருமே தோட்டம் போய் சேர்ந்ததில்லை. இவர்களின் பிற் கால வாழ்க்கைப் போராட்டங்களுக்கு அந்த ஆரம்பப் பய ணமே நல்ல உதாரணம். பிரஜா உரிமை சட்டத்தினால் கப்பலேறி, இந்தியாவில் சாகக் கிடக்கும் தாயைப் பார்த்துவிட வேண்டும் என்னும் மகனின் வெறியே 'பாலாயி'யின் மையக் கரு.

கடல் காத்து வீசயில கண்ணு ரெண்டும் சுத்துதடி என்று வந்தது போலவே தோணியேறினான். ஆனால் ஏறியது கள்ளத் தோணி.

பாலாயி குறுநாவல் கதம்பம் என்னும் இதழில் வெளிவந் தது. வீரகேசரியின் ஆசிரியரும் ஜனரஞ்சக நாவலாசிரியருமான கே.வி.எஸ்.வாஸ் அவர்களுடைய புதல்வன் மோகன் அவர்கள் நடத்திய ஏடு கதம்பம். தென்னிந்தியத் தமிழ்ச் சினிமாவில் தங்கி இருக்கும் ஒரு ஜனரஞ்சக ஏடு அது! இலக்கியம் என்பதெல்லாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால் தீபாவளிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் போடும் போது என்னிடம் ஒரு கதை கேட்பார். போலியாக அல்ல. கட்டாயம் வேண்டும் என்னும் கரிசனையுடன்.

''பாட்டி சொன்ன கதை'' என்னும் சிறுகதைக்கு வீரகேசரி முதல் பரிசு கொடுத்த 1963லிருந்து எனது கூடுதலான படைப்புகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது வீரகேசரி. இலக்கிய உலகில் என்னைப் பிரபல்யப் படுத்தியது வீரகேசரி. எனக்கும் வீரகேசரிக்குமான நெருங்கிய தொடர்பு வீரகேசரியின் ஆசிரியரான திரு. கே.வி.எஸ். வாஸ் மூலம் அவருடைய மகனுக்குப் போய் என்னிடம் கதை ஒன்று கேட்கும் நிலைமையை ஏற்படுத்தி இருந்திருக்கலாம்.

எனது நினைவு சரி என்றால் அவர் இரண்டு தீபாவளி மலர்கள் போட்டிருக்கின்றார். முதல் மலருக்கு 'மனிதர்கள் நல்லவர்கள்' என்னும் சிறுகதையையும் அடுத்த வருட மலருக்குப் 'பாலாயி' என்னும் குறுநாவலையும் எழுதிக் கொடுத்தேன். அப்படிப் பிரசுரம் பெற்ற குறுநாவல்தான் பாலாயி — இந்தத் தொகுதிக்கும் தலைப்பாகி நிற்கிறது.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் செயலாளராக நான் இருந்தபோது புதுமைப்பித்தன் விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்தோம். எங்கள் மன்றத்தின் அழைப்பினை ஏற்று புதுமைப்பித்தன் விழாவில் பங்கு கொள்ள அகமகிழ்வுடன் வந்திருந்தார் கு.அழகிரிசாமி அவர்கள். ''எங்கள் நாட்டிலேயே புதுமைப்பித்தனை மறந்து விட்டார்கள். இலங்கையின் ஒரு மூலையில் இந்த மலைநாட்டில் இருந்து கொண்டு நீங்கள் அந்த மகத்தான படைப்பாளிக்கு எடுக்கும் விழா என் மனதை பூரிப்படையச் செய்கிறது'' என்று கண்கலங்கிக் கூறினார் திரு. அழகிரிசாமி அவர்கள். (1967ல்)

அந்தச் சந்தர்ப்பத்தில்தான், அப்போது வெளிவந்திருந்த இந்தப் 'பாலாயி' பற்றியும் கூறினார். 'ஒரு சத்தியஜித்ரே படம் பார்ப்பது போல் இருந்தது என்று'. கதம்பம் மோகனுக்கு எனது நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் குறுநாவல் தொகுதியினை 'பாலாயி' என்னும் நான் விரும்பும் பெயருடனேயே நூலாக்கித் தந்திருக்கும் 'துரைவி' பதிப்பக உரிமையாளர் துரை விஸ்வநாதன் அவர்களுக்கு மனம் நிறைந்த என் நன்றிகள் உரித்தாகின்றன.

மலையகச் சிறுகதைகள் தொகுதி ஒன்று, மலையகச் சிறுகதைகள் தொகுதி இரண்டு என்று அல்லயன்ஸ் கதைக் கோவை போல் இரண்டு பாரிய நூல்களை வெளியிட்டு மலையக இலக்கிய உலகை உற்சாகப்படுத்தியுள்ள அவரது பணி மகத்தானது. இந்தத் தொகுதி அவருடைய 'துரைவி'யின் மூன்றாவது நூல் என்பதும் எனக்கு ஒரு விசேஷமே.

இப்படைப்புக்களில் வரும் கதை மாந்தர்கள் வானத்தில் இருந்து இறங்கி வந்தவர்கள் அல்ல.

இந்த மண்ணில் ஆழமாக ஊன்றி நிற்கத் துடிக்கும் வேர்கள்.

இவர்களை இந்த மண்ணில் ஆழமாக வேர் ஊன்றி அகலமாகக் கிளை பரப்பி உயர்ந்து நின்றால்தான் இந்த மண் செழிக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

உங்களுடைய சக ஜீவன்களான இம்மக்களின் கதைகளைக் கட்டாயமாக வாசியுங்கள். இம்மண்ணுடன் இணைந்த மக்களின் கதைகளை வாசிக்கப் பழகிக் கொள்ளுங்கள். கதை என்பது வெறுமனே சொல்லப்படும் கற்பனைகள் அல்ல, மக்களின் ஜீவிதம் அது என்பதை உணர்வீர்கள்.

மக்கள் செழித்தால்தான் மண் செழிக்கும் என்பதன் சத்தியத்தையும் உணர்வீர்கள்.

அன்புடனும் வணக்கங்களுடனும்
**தெளிவத்தை ஜோசப்**

35, N.H.S.
HEKITTA
WATTALA
SRI LANKA
JUNE 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...

பக்கம்

1. ஞாயிறு வந்தது (கலைமகள்) 17

2. மனம் வெளுக்க (தினகரன்) 68

3. பாலாயி (கதம்பம்) 116

## ஆசிரியரின் பிற நூல்கள்

1. நாமிருக்கும் நாடே - 1979
இலங்கை சாகித்திய மண்டல விருது பெற்ற சிறுகதைத் தொகுதி

2. காலங்கள் சாவதில்லை - 1974
நாவல் - வீரகேசரி வெளியீடு.

3. மலையகத்தில் சிறுகதை
ஆய்வுக் கட்டுரை (அச்சில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு வந்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

**ப**த்தாம் திகதி!

'அதில் என்ன விசேஷம்' என்கின்றீர்களா?

வேறு யாருக்கு அதில் விசேஷம் இல்லாவிட்டாலும் இலங்கைத் தீவின் உயர்ந்த பகுதிகளில் - மலை நாட்டில் - தேயிலைத் தோட்டங்களில் வாழும் தொழிலாளர் பெருமக்களுக்கு அது விசேஷ தினம் தான்.

கையில் ஒன்றும் வயிற்றில் ஒன்றுமாக இருந்தாலும், அதிகாலைக் குளிரையும் லட்சியம் செய்யாமல் பெறட்டுக்களம் போய் பிள்ளை மடுவத்துக் கிழவியிடம் கையில் உள்ளதைக் கொடுத்துவிட்டு, தலையில் கூடையுடனும் கையில் கணக்கப்பிள்ளை அய்யா கொடுத்த ஒரு அங்குலச் சதுரத்துண்டுடனும் மலையேறி மழைவெய்யில் பார்க்காமல் கொழுந்து எடுத்த ஒரு மாத உழைப்புக்குப் பலன் பெறும் தினம்.

ஆம் சம்பள நாள்!

ஈழத்தில் வாழும் இந்தியத் தமிழர்களில் பெரும்பான்மையோர் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களே. அவர்களுக்குத் தான் பத்தாம் திகதி சம்பள தினம்.

பெறட்டுக்களம் என்று பெயர்பெற்றுவிட்ட வேலை பிரிக்கும் தளத்தில் காலையில் ஆட்கள் எல்லோரும் கூடி நிற்கும் போது கணக்கப் பிள்ளை ஐயா சொல்லுவார் ''இன்று சம்பளம்'' என்று.

அன்று சம்பளம் என்பது அவர் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை. என்றாலும் அது ஒரு சம்பிரதாயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கத்துக்கு மாறாக அன்று மாலை சற்று முன்னதாகவே சங்கு ஊதுவார்கள். தோட்டத்தின் குறுகிய பாதையில் கார்கள் ஓடும். புதுப்புது மனிதர்கள் நடமாடுவார்கள்.

நடமாடும் புதுப்புது மனிதர்கள் பக்கத்துப் பட்டணத்துக் கடைக்காரர்கள். கடன் வசூலிக்க வருகிறவர்கள்!

ஓடும் கார்கள் பக்கத்துப் பட்டணத்தில் இருந்து சாமான் ஏற்றிக்கொண்டு வருபவை. சம்பளத்துவாசல் வியாபாரத் துக்கு!

வேலை முடிந்தவுடன் எல்லாரும் வீட்டுக்குப் போய் தங்களிடம் உள்ள நல்ல உடுப்புகளைப் போட்டுக் கொண்டு வரிசை வரிசையாக நடப்பார்கள் ஆபீசை நோக்கி. ஆண்கள் சிலர் காலணிகளும் போட்டுக் கொண்டு வந்து காரியாலயம் வந்ததும் தேயிலையடியில் மறைத்து வைத்துவிட்டு ஆபீஸ் படியருகே வெள்ளையும் சள்ளையுமாக நிற்பார்கள்.

சுருங்கச் சொன்னால் தோட்டமே திருவிழாக் கோலம் பூண்டிருக்கும்.

நன்றாக வேலை செய்யும் ஒரு ஆணுக்கு ஐம்பத்தேழு ரூபாயும் சதமும் கிடைக்கும். பெண்களுக்கு அதை விடக் குறைவு தான். என்றாலும் அவர்களுடைய சம்பளம் அவர்கள் எடுக்கும் கொழுந்தையும் பொறுத்திருக்கிறது. முதல் நம்பர் கொழுந்துக்காரி என்றால் புருஷனை விடக் கூடுதலாகவே வாங்குவாள்!

இந்த அரை நூற்றுக்கு அவர்கள் வெள்ளைக்காரத் துரையி டம் காட்டும் பயபக்தி! அதிகாரிகளிடம் வாங்கும் அதட்டல்! கங்காணிகளிடம் வாங்கும் ஏச்சுப் பேச்சு! எழுத்தில் அடங்காது.

ஈழத் தமிழர்களின் அவல நிலையைக் கண்டு இயற்கை அழத்தொடங்கியது

''சீச் சனியன் புடிச்ச மானம். காலம்பெறவே தொணதொ ணக்குது''. என்று முனகியபடி முதுகில் தொங்கும் கூடையுட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் கையில் பதினெட்டு மாதச் சிசுவுடனும் நடக்கின்றாள் காத்தாயி.

மண் செழிக்கப் பெய்யும் மழைதான்! இருந்தாலும் இராப்பகலாய் விடாமல் பெய்து கொண்டே இருந்தால் யார் தான் வாழ்த்துவார்கள்!

விடியற்காலை.

மழை தூறுகிறதே ஒழிய வானத்தில் மப்பு இல்லை. வாட்ட சாட்டமாய் வானளாவ நிற்கும் சவுக்கு மரங்களும், அவற்றைவிடக் குட்டையான முருங்கை மரங்களும் இந்த இரண்டு வகை மரங்களின் அடிப்பாகம் தெரியாமல் அடர்ந்து நிற்கும் தேயிலைச் செடிகளும் கண்கொள்ளாக் காட்சி.

ஊற்றும் மழையையும் உறுமியடிக்கும் காற்றையும் லட்சியம் செய்யாத நிலை.

தோட்டமே அலாதி அழகு வாய்ந்த இடம்.

பாடம் செய்யப்படும் தேயிலையின் வாசமும் பச்சை இலையின் பசுமை மணமும் கலந்த சுகந்தமான காற்று வீசும் சூழ்நிலை. சொல்லப்போனால் ஒவ்வொரு தேயிலைத் தோட்டமுமே ஒரு பூந்தோட்டம்தான். வெறும் மலர்ச்செடிகள் வளரும் இடம்தான் பூந்தோட்டம் என்பது நியதி இல்லையே!

பதவிக்காக - அரசியலில் ஈடுபடுகிறவர்கள் அடிக்கடி கட்சிகளை - கொள்கைகளை மாற்றிக் கொள்வது போல் காற்றும் திசை மாறி அடித்தது.

காற்று திசைமாறவே மழையும் கோணம் மாறிப் பெய்தது. பெற்றவளின் அணைப்புச் சூட்டில் கிடந்த சிசு தன்மேல் விழுந்த நீர்த்துளியால் துள்ளிப் புரண்டது.

மார்புச் சேலைக்குள் சிசுவைப் பதுக்கிக் கொண்டவள் பற்றாத இடத்துக்கு தலைத்துணியை இழுத்துச் சுற்றிக் கொண்டு விரைந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைத் துணியை இழுத்து குழந்தையைப் போர்த்தியதால் தலை இலேசாக நனைந்தது.

ஈரமான சேலையின் கீழ்ப் பகுதி நடையைப் பின்னித்த டுக்க விசுக், விசுக் கென்று அடி வைத்து வேகமாக நடக்கின் றாள்.

சுற்றி நின்ற மரங்களைப் போலவே பச்சையாய் நனைந்து மின்னும் மலைகளைப் போலவே அவளும் அந்த மழையைக் கண்டு கலங்கவில்லை.

இவர்களிடம் இரண்டு முக்கியமான குணங்கள் உண்டு. ஒன்று உழைப்புத் திறன். மற்றது சகிப்புத் தன்மை.

''இன்னைக்கு சம்பளம்தானே'' அவளுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த பக்கத்து வீட்டுப் பெண் அவளை முந்திக் கொண்டு போகும் போது கேட்ட கேள்வி இது.

நிமிர்ந்த நடையுடனும் நேரான பார்வையுடனும் நடக் கும் அந்த இளம் பெண்ணிடம் பெண்மைக்கே உரிய அடக்கத் தின் அழகுடன் உறுதியுடன் திண்மையும் இருப்பது தெரிகிறது.

'இந்த வீசு நடையும் வேகமான பார்வையும் என்னைப் போல் ஆவதற்குள்ள ஆரம்ப அறிகுறிகள்' என்று எண்ணிய வள் டக்கெனக் குனிந்து குழந்தையைப் பார்த்துக் கொண்டாள்.

தன்னுடைய தளர்ச்சிக்குக் காரணம் அதுதான் என்று எண்ணினாளோ!

அவளுடைய கேள்விக்கு அவள் பதில் கூறவும் இல்லை. இவளுடைய பதிலை அவள் எதிர்பார்க்கவும் இல்லை. பக் கத்து வீட்டுக்காரி என்பதற்காக பழகிய தோஷத்துக்காக ஏதோ கேட்டு விட்டு அதோ போய்க்கொண்டிருக்கின்றாள் அவள்.

தெரிந்தவர் என்பதற்காக ஒப்புக்காக குளித்துக்கொண்டி ருப்பவரைப் பார்த்து குளிக்கிறீங்களா என்று கேட்டுக் கொண்டே போவதில்லையா? அதைப் போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தேதி தான் பத்தாச்சே சம்பளமுன்னு சொல்லியா தெரிய ணும்'' என்று தனக்குள்ளாகவே முனகிக் கொண்டாள்.

''என்ன காத்தாயி புள்ளே நனையுதில்லே.''

இன்னொருத்தி கூறிக்கொண்டே அவளைத் தாண்டி நடந் தாள்.

''ஒனக்கென்னய்யா கையில் புள்ளை இல்லை நீ மட்டும் நனையிறே... என் கையில் புள்ளை இருக்கே!'' முணு முணுத்த படி முன்னே போகிறவளைப் பார்த்தாள்.

இருவருக்கும் ஏறக்குறைய சம வயதுதான் இருக்கும். நேற்றுத் 'தொக்கான் தொக்கான்' என்று கிழட்டு நடை போட்ட வளின் இன்றைய நடையிலே இந்தத் துள்ளல் எப்படி வந்தது?

இன்று சம்பளம் என்ற இனிய நினைவு கொடுத்த சுறுசுறுப்புத் தானோ இந்தத் துள்ளல் நடை.

மனிதன் படைத்தது தான் இந்தப் பணம். அவனையே என்னமாய் அது ஆட்டிப்படைக்கிறது. தான் படைத்த மனிதன் தன்னையே விரட்டத் தொடங்குகிறான் என்பதை உணர்ந்ததும் அவனையே ஒன்றைப் படைக்க விட்டு அவனது படைப்பே அவனைப் பாடாய்ப்படுத்தும் படி செய்து வேடிக்கை பார்க்கி றானே இறைவன்! இருக்கலாம்.

ஈஸ்வர லீலைகளை யாரறிவார்!

பிள்ளைமடுவத்துக் கிழவியிடம் குழந்தையைப் போட்டு விட்டு ஐயா கொடுத்த துண்டை சேலைத்தலைப்பில் முடிந்து பத்திரப் படுத்திக் கொண்டு தேயிலை ஓரத்தில் வந்து நின்றாள். அன்று கொழுந்தெடுக்க வேண்டிய மலை அதுதான்.

எல்லாப் பெண்களுமே பாதை ஓரத்தில் வரிசையாக நிற்கின்றனர். இடுப்புச் சேலைக்கு மேல் படங்கைச் சுற்றி சணல் கயிற்றால் இறுக்கக் கட்டிக் கொண்டு நிற்கின்றனர் சிலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைத்துணிக்கு மேல் மழைக்காகக் கம்பளியோ மெழுகுத் துணியையோ மடித்துக் கொங்காணியாகப் போட்ட வண்ணம் நிற்கின்றனர் சிலர்.

உதடு துடிக்கும் அந்தக் குளிர் காலையில் சொட்டச் சொட்ட நனைந்து நிற்கும் தேயிலைச் செடிகளை நீவி நெறித்துக் கொண்டு இறங்கவும் ஓர் அசாத்தியத் துணிச்சல் வேண்டும்.

குளிரின் வேகத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளவென்று கொட்டானை எடுத்து வெற்றிலையை வாய் நிறையப் போட்டு மெல்லுகின்றனர் சிறிது வயது முதிர்ந்தவர்கள்.

'நச் நச்' சென்று மெல்லும் வெற்றிலையும் சூடு கொடுக்கத்தான் செய்கிறது.

வாய் சிவக்க வெற்றிலை போடும் பழக்கம் வயதுப் பெண்களிடம் இல்லை. வாலிபம் வந்ததும் புகை குடிக்க வேண்டும் என்னும் ஆசை ஆண்பிள்ளைகளுக்கு ஏற்படுவது போல் வெற்றிலை போட வேண்டும் என்னும் எண்ணம் இவர்களுக்கு ஏற்படுவதில்லை.

வெண் முத்துப் பற்களில் வெற்றிலைக் காவி படிந்து விடும் என்னும் பயமாக இருக்கலாம்.

சிரிப்பும், சிரிக்கும் போது உதட்டிடையே மின்னி நெளியும் வெண்முத்துப் பல் வரிசையும் வாலிப் பெண்களின் சொத்தாயிற்றே! வெற்றிலைச் சுகத்துக்காக அதை இழக்கத் துணிவார்களா!

மலை முகட்டைத் தாண்டி; ஓங்கி நிற்கும் மரங்களின் மறைப்பையும் தாண்டிச் சூரியன் எழுகின்றான்.

மழை இலேசாகப் பெய்து கொண்டிருக்கிறது. மெல்லிய தூறலும், மெதுவாக வீசும் காற்றும்; அதிகாலைச் சூரியனின் அடக்கமான - ஆனால் கம்பீரமான - ஒளியும் சேர்ந்து அந்தத் தேயிலையில் படும்போது அவை எப்படி மின்னுகின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடித் துண்டங்கள் போல!

கற்பனை செய்து காணமுடியாத சௌந்தர்யத் தோற்றம் அது.

''என்ன புள்ளைங்களா! குளுரா காயுறீங்க.''

கங்காணியின் கத்தல் அவர்களைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுகிறது மலைக்குள்.

இறங்கிய வேகத்தில் இரண்டு கைகளும் இயந்திரமாய் இயங்குகின்றன - தேயிலைச் செடிகளில்.

இனிச் சோம்பலுக்கோ குளிரின் கெடுபிடிக்கோ இட மில்லை.

கூடை நிறைய வேண்டும் - நிரை முடிய வேண்டும்!

''உன் புருஷன் வீட்டுல இல்லியா காத்தாயி?''

பக்கத்து நிரையில் கொழுந்தெடுக்கும் பெண் - பக்கத்து வீட்டுக்காரி - கேட்டாள்.

''ஏன்... இருந்துச்சே..!''

''இல்லே புள்ளைங்க கயே புயேன்னு அடிச்சிக்கிட்டு கெடந்துச்சுக... அதான் கேட்டேன்..''

''அப்பா இருக்கேன்னு அத்தினி பயம்; புள்ளைங்களுக்கு. அப்பா அப்பாவா இருந்தாத்தானே அதுக பயப்படும்...'' அடுத்தவளுக்குச் சொல்லவில்லை. தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

அயலாருக்கு எதைச் சொல்லுவது எதைச் சொல்லக்கூடாது என்றும் இருக்கிறதே!

வாய் ஏதேதோ பேசினாலும் ; மனம் ஏதேதோ எண்ணினாலும் விரல்கள் மட்டும் மொட்டையும் அதற்கருகில் இருக்கும் இரண்டு இலைகளையும் சீராகக் கொய்யும். இயங்கியே பழகிவிட்ட இயந்திர ஓட்டம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போன சம்பளத்தன்னைக்கும் இதே மலைதான் எடுத்தோம் இல்லியா."

அடுத்தடுத்து கொழுந்தெடுக்கும் இரண்டு இளம் பெண்கள் பேசிக் கொண்டனர்.

கடந்து போன மகிழ்வில் மனதை லயிக்கவிட்டிருப்பதும் இனிமைதான்!

ஆனால் காத்தாயிக்கு?

நறுக்கென்று காலில் முள் இறங்குவது போல் சுருக்கென்றது அவளுக்கு.

உன் புருஷன் வீட்டில் இல்லியா என்ற கேள்வியும்; போன சம்பளத்தை நினைவூட்டிய பெண்களின் பேச்சும் ஒன்றோடொன்று இணைந்து அவள் மனசைக் குடைந்தன.

கைகள் தேயிலைக் கொழுந்து பறிப்பதில் முனைந்திருக்க உள்ளம் அவளை எங்கேயோ இழுத்துச் சென்றது. கங்காணியின் கத்தல் எங்கோ தூரத்தில் கேட்பதுபோல் இருக்கிறது. கள் குடித்தவனைப் போன்றதொரு மயக்க நிலை.

போன மாதம்...!

★★★

# 2

நாளைக்குச் சம்பளம் என்னும் நல்ல நினைவுடன் தோட்டத்தில் வேலை செய்யும் ஆண்களில் பெரும்பாலானவர்கள் கிளுகிளுப்புடன் நாட்டுக்கு நடக்கின்றனர்.

தேயிலைத் தோட்டங்களைச் சுற்றியுள்ள - சிங்கள மக்கள் வசிக்கும் - கிராமங்களே நாடு எனப்படுபவை.

நாட்டில் வசிக்கும் இவர்களை மொத்தமாக விவசாயிகள் என்று கூறி விட முடியாது என்றாலும் ஒவ்வொரு குடும்பத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் ஒரு சிறு அளவு வயலோ சேனையோ இருக்கும். ஆனால் அதையே நம்பி இருக்கவும் முடியாது.

மலைநாட்டுத் தமிழர்கள் தேயிலையை நம்பி இருப்பது போல் இவர்கள் நம்பி இருக்க நிரந்தர வருமானத் தொழில் கிடையாது என்பதுவும் தமிழர்கள் மேல் இவர்கள் பொறா மைப் படுவதற்கு ஒரு காரணம்.

வயல்வேலை சேனை வேலை முடிந்து விட்ட நாட்களில் அருகே உள்ள தேயிலைத் தோட்டங்களுக்கு சென்று வேலை கேட்டார்கள்: கிடைத்தால் செய்வார்கள்.

இல்லாவிட்டால்...!

கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்னும் நிர்ப்பந்தத்து டன் பதிவுத் தொழிலாளர்களாகத் தோட்டத்திலேயே வசிப்ப வர்களுக்கே கொடுக்க வேலை இல்லை என்னும் நாட்களில் இவர்களுக்கெங்கே வேலை கிடைக்கப் போகிறது!

அவனுக்கிருக்கிறது எனக்கில்லை என்னும் நிலை உருவா கிவிட்டால் முன்னவன் மேல் பின்னவன் குறை காண்பது சகஜந்தானே!

ஏறிப்பறிப்பதைவிட கல்லால் அடித்துப் பெறுவது சுல பம் என்று நம்பும் சில குறுக்குவழி அரசியல்வாதிகள் இத் தமிழ் மக்களுக்கு எதிராக கிராமத்துச் சிங்கள மக்களை ஏவி விடுவதற்கான முக்கிய. காரணங்களில் இதுவும் ஒன்று - 'எங்கிஇருந்தோ வந்த அவனுக்கு இருக்கிறது உங்களுக் இல்லை.'

சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளின் இந்த இனத்துவத் தூண்டுதலுக்கு இந்த கிராமத்து சிங்கள மக்கள் பலியாகும் மோசமான நிலைக்கு வருவார்கள் என்றோ வரமாட்டார்கள் என்றோ அடித்துக் கூற முடியாது.

நாற்பது வயதுக்கு மேலும் கவுன் போட்டுக் கொண்டு சாடைத்தனம் பண்ணி ஊரைக் குழப்பும் பட்டணத்துக் கெட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணம் இவர்களிடம் கிடையாது. இருக்கும் இடம் போலவே இவர்களும் அமைதியானவர்கள். ஒரு சிலரைத் தவிர.

இந்தக் கிராமங்களில் மா; பலா; கொய்யா; ஆரெஞ்சு; தென்னை; திப்பிலி முதலிய மரங்கள் ஒழுங்கில்லாமல் ஆனால் செழிப்பாக வளர்ந்திருக்கும்.

அடர்ந்து வளர்ந்திருக்கும் இந்த மரங்களின் அடியில் இவர்களுடைய வீடுகள் இருக்கின்றன. சூரிய வெளிச்சம் தரையில் விழுவது வெகு அரிது.

அரிசிச் சோறும் பலாவுமே இவர்களுடைய பிரதான உணவு.

பல்லாவின் காயை பிஞ்சு முதல் முற்றிய பழத்திலிருந்து பிதுங்கும் பலாக்கொட்டை வரை ரகத்துக்கு ஏற்றவாறு விதவிதமாய் ருசி குன்றாமல் குழம்பாக்குவதில் சிங்களப் பெண்களுக்கு நிகரே இல்லை. சமைக்கும் போது பார்க்காதவர்களுக்கு இது பலாக்காய் தானா என்ற சந்தேகம் எழும்.

கூரைக்கு மேல் உயர்ந்து நிற்கும் பலாமரத்திலிருந்து காயைப் பறிக்கவோ; கோடரியால் பிளந்து அதை சீராக்கவோ இவர்கள் ஆண்களின் உதவியை எதிர்பார்ப்பதில்லை.

வேட்டிபோல் ஒரு சீத்தையை இடுப்பில் சுற்றிக் கட்டிக் கொண்டு மேலே இறுக்கமான வெறும் ரவிக்கையுடன் அழகோவியமாக நடமாடும் சிங்களக் கன்னியர்களின் கவர்ச்சியால் இழுக்கப்பட்டோ, அவர்களது பலாக்குழம்பு வீசும் மயக்கும் மணத்தினால் ஈர்க்கப்பட்டோ அல்ல தோட்டத்து ஆண்கள் நாள் தவறாமல் நாட்டுக்கு நடப்பது.

தென்னை இத்துள் முதலிய மரங்களின் பாளை வடிக்கும் கள்ளுக்காகத்தான்.

ஆமாம்! ஒவ்வொரு சிங்கள வீட்டிலும் வீட்டைச் சுற்றி ஆறேழு தென்னை மரமாவது நிற்கும். எல்லாருமே கள் வடிக்காவிட்டாலும் எல்லா மரங்களிலுமே கலையங்கள் தொங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாராவது ஒருவன் எல்லா மரங்களையும் பேசிக் குத்தகை எடுத்துக் கொள்வான். மரத்துக்கு மாதத்துக்கு இவ்வளவு என்று.

இதனால் மரத்தில் ஏறிக் கள் வடிக்காதவர்களுக்கும் காசு கிடைத்து வருகிறது. நாணயமற்ற தொழில்தான்; என்றாலும் நம்பி இருக்கும் தொழிலும் அது தான்!

ஏறி வந்த பகலவன் இறங்கத் தொடங்கிவிட்டான் என்றால் தோட்டத்திலிருந்து ஒவ்வொருவராக நாட்டுக்கு நடை போடுவார்கள்.

இருட்டிய பிறகும் ஏழு எட்டு மணி வரையில் தோட்டத்தையும் நாட்டையும் இணைக்கும் அந்த ஒற்றையடிப்பாதை சந்தடி மிகுந்ததாகவே இருக்கும்.

நூற்றுக்கு எழுபத்தைந்து பேர் நாட்டைப் பார்க்காமல் நாளை முடிப்பதில்லை.

காற்று அடித்தாலும் சரி! கடுமழை ஊற்றினாலும் சரி பெரும்பாலானோர்கள் அருந்தாமல் இருக்க மாட்டார்கள்.

உழைப்பினால் ஏற்பட்ட உடற்சோர்வுக்கு மருந்தென்று எண்ணித்தான் முதலில் ஆரம்பிப்பார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அதற்கே அடிமையாகிச் சோறு இல்லாவிட்டாலும் 'அது' இருந்தால் போதும் என்று மாறிவிடுகின்றனர் - பாவம்!

மஞ்சள் வெய்யில் மலையில் மோதும் மாலை நேரம். மணிப்பிரகாரம் சொல்லப் போனால் பிற்பகல் நாலரை. நாட்டில் வியாபாரம் களைகட்டி நிற்கிறது.

''என்ன பண்டையா இன்னிக்குச் சுத்த மோசம்! பச்சைத் தண்ணிதான் போங்க!''

பண்டாவின் வாடிக்கைக்காரர்களில் ஒருவனாகிய மாரிமுத்து குறைபட்டுக் கொண்டான்.

''ஓய் போன மாதத்தோட ரெண்டு மாசம் பாக்கி நிக்குது. கிராக்கி பண்ணுறதா? வாய் மூடிக் குடுத்ததைக் குடிச்சுட்டுப் போ''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரிமுத்துவின் கடன் பாக்கியைச் சுட்டிக்காட்டி தன் சீனித்தண்ணீரின் மதிப்பை உயர்த்திக் கொண்டான் பண்டா.

அரைப்போத்தல் கொள்ளக் கூடிய சிரட்டையில் நாலு சிரட்டையைக் குடித்து முடித்த மாரி முத்து ''நாளைக்குத்தான் சம்பளமாச்சே வண்டையா பாக்கியில்லாமெ வச்சிடுறேன் இன்னும் ஒண்ணு போடுங்க. கொஞ்சம் கொடச் 'சூரே' காணும்'' என்று அலுத்துக் கொண்டான்.

''ரெண்டு போதும் போ வரவேண்டிய ஆளு இன்னும் நெறைய இருக்கு'' என்றவன் இடுப்புச் சாரத்தின் அரையடி அகல கறுப்புப் பெல்ட்டிலிருந்து ஒரு சிறு நோட்டுப் புத்த கத்தை எடுத்துப் பார்த்தான். பிறகு மாரிமுத்துவை முறைத்தான்.

''நீ என்ன வெளையாடுறதா? அறுவத்தி அஞ்சு ரூபா நிக்குது.'' என்றான். பிறகு ஏதோ நினைவுக்கு வந்தவனாய் ஒரு கணம் யோசித்து விட்டு கேட்டான்.

''அது சரி மாரி எங்கே நம்ம சன்னாசியைக் காணோம் ஒரு கௌமயா? ஆசுபத்திரில இருக்கானா?''

ஆஸ்பத்திரியில் இருந்தால் மட்டும்தான் கள் அருந்த வரமாட்டார்கள் என்று நினைத்தானோ அல்லது நான் கொடுப் பதைக் குடித்தால் ஆஸ்பத்திரிக்குப் போகாமல் வேறு எங்கே போவார்கள் என்று நினைத்தானோ என்பது தெரியவில்லை.

சட்ட விரோதமாகக் கள் குடிப்பதைவிட ஏதோ பயங்கர ரகசியம் கூறப்போவதைப் போல் விழிகளைச் சுழற்றி சற்று முற்றும் பார்த்தான் மாரி. அவனது பார்வையிலிருந்தே சொல் லப் போவது ரகசியம் என்பதை உணர்ந்த பண்டா முதலில் கொடுக்க மறுத்து ஒதுக்கித் தள்ளிய சிரட்டையை இழுத்து இன்னும் ஒன்று ஊற்றி மாரியிடம் நீட்டினான் - பிகு பண்ணிக் கொள்ளாமல்.

சிரட்டை வழிய நின்ற மது சவர்க்கார நீர் போல் நுரைவிட்டது. நுரைத்துக் கிடந்த மட்டத்தில் ஈ, கொசு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பெயர் தெரியாத பூச்சி வகையறாக்கள் மிதந்தன! நுரையுடன் அவற்றை ஊதி ஒதுக்கி வாய் வைக்குமளவு இடம் பண்ணிக்கொண்ட மாரி சிரட்டை ஓரத்தில் உதட்டை வைத்து ஒரே உறிஞ்சலாக அதை உறிஞ்சினான். ஒரு வினோதக் களைப்புடன் தன் தொங்கு மீசையைத் தட்டிவிட்டான். சிலிர்த்து நின்ற மீசையில், ஒட்டிக்கிடந்த பூச்சி பொட்டுக்கள் எகிறி விழுந்தன.

''இந்த சன்னாசிப்பய வண்டையா எனக்குத் தெரிய பொறந்த பய. எங்கிட்டயே சொல்றான் பாருங்க இந்த பண்டா பெரிய மோசம் பாதிக்குப் பாதி தண்ணியக் கலக்குறான்.. இனி மேக்கொண்டு நான் அவங்கிட்டப் போகப் போறதில்லை; அப்படீன்னுட்டு ஒரு கௌமயா கிரிவந்தே கிட்டல்ல போறான்!''

''என்னது? கிரிபண்டா கிட்டயா!''

பண்டய்யாவின் ஈ மீசை படபடத்தது. பழுத்த மிளகா யாய் மின்னிப் புடைத்தது நாசி. கறுத்த முகம் கோபத்தால் சிவந்து அசிங்கமாகியது. ''மூனுமாசமா எனக்கு ஒத்தச் சதம் தரல்லே'' உறுமினான் பண்டா. கண்கள் அனலைக் கக்கின.

''அது மட்டுங்களா! பாக்கி கீக்கின்னு நீங்க ஏதும் தொந்தரவு பண்ணினா போலீசுல பத்த வச்சிடுவானாம்...''

தான் வைத்த வத்திக்கு ஓர் அரை கிடைத்த மகிழ்வில் இடத்தை விட்டு எழுந்தான் மாரிமுத்து.

'ஆறு போத்தல் போட்டாத்தான் அரை போத்தல் சூர் வரும் போல் இருக்கு. சன்னாசி சொன்னதுலேயும் மிஷ்டேக் இல்லை' என்று முனகியவாறு நடந்தான்.

பண்டாவுக்கும் - கிரிபண்டாவுக்கும் உள்ளூறப் பகை. தனக்குப் போட்டியாக அவனும் கடை வைத்திருக்கின்றானே என்னும் பொறாமைதான்.

பண்டாவின் வீட்டை ஒரு நாள் திடுதிப் பென்று போலீஸ் சோதனை போட்டது. இதெல்லாம் பண்டாவுக்கு சர்வ சாதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணம். காக்கித் தொப்பியைக் கண்டதும் கால் நடுங்கும் காலமா இது! போலீஸ் வருகிறது என்றால் அவனுக்கு எப்படியாவது மூக்கில் வியர்த்து விடும். கள் முட்டிகளை எல்லாம் பதுக்கி விடுவான். அடக்கமாகப் பதில் கொடுப்பான். பத்திரமாக அவர்களை ஜீப்பில் ஏற்றி அனுப்பி வைப்பான்.

கிரிபண்டா தான் போலீசைத் தூண்டி விட்டான் என்பது பிறகு தெரிய வந்தது. காடு வெட்டும் கத்தியைத் தீட்டி வைத்துக் கொண்டான் ''இதுதான் அவனுக்கு'' என்று.

இருவருக்கும் இப்படி இருக்கும் போது சன்னாசி இவனை விட்டு அவனிடம் போனால்! அதுவும் இரண்டு மூன்று மாதப் பாக்கியுடன்.

பண்டா பிசாசாய் எழுந்து நின்றான்.

''இது என்ன பண்டய்யா?''

குரல் கேட்டுத் திரும்பினான். அங்கே நின்றவன் சுட்டிக் காட்டிய இடத்தைப் பார்த்தான்.

கழுத்துவரை குறைந்துவிட்ட அந்தப் பெரிய கள் கலையத் தினுள்ளே நொதித்துக் கிளம்பும் நுரையின் மறைவில் செத்து மிதந்து கொண்டிருக்கிறது எலி ஒன்று.

பண்டாவின் கோபம் மறைகிறது. துணியைப் போட்டு டக்கென்று பானையின் வாயைக் கட்டி மூடி விட்டு ''நீங்க வா கங்காணம் இப்படி'' என்று தோளில் கைபோட்டு எலி மிதப்பதைப் பார்த்துவிட்ட ஆசாமியை வீட்டுக்குள் அழைத் துச் சென்றான்.

இது போன்ற வேளைகளில் பண்டாவின் பத்துவயது மகன் பானையின் அருகே நின்று கொள்வான். வேறும் யாரும் பானைக்குள் பார்வையை செலுத்தாவண்ணம் பார்த்துக் கொள்ள!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே கூட்டிச் சென்றவனை கயிற்றுக் கட்டிலில் அமுக்கி உட்காரச் செய்துவிட்டு "நீங்களுக்கு நான் அது குடுக்குறதா? அய்யாவுக்கு பெசல் சாமான் இங்கே இருக்கு" என்றபடி உள்ளே இருந்து எடுத்து கண்ணாடிக் கிளாசில் ஊற்றிக் கொடுத்தான். "கேட்டுக் குடிங்க" என்றவாறு "மெனிக்கே கங்காணமட்ட பொலஸ் சம்பல் தீப்பான்" என்று மனைவிக்கும் குரல் கொடுத்துவிட்டு வெளியே வந்தான்.

உறைக்க உறைக்க பலாச் சம்பல்; உட்கார்ந்து கொள்ள கயிற்றுக் கட்டில், ஊற்றிக் குடிக்க கண்ணாடி கிளாஸ் பிறகு என்ன!

எலி மிதப்பதை அவன் கண்டான் பண்டாவிடம் காண்பித்தான். ஆனாலும் எலி என்ற பேச்சு வெளிவரவில்லை. ஆகவே எலி செத்துக்கிடக்கும் விஷயம் சுற்றியுள்ளவர்களுக்குத் தெரிய நியாயமில்லை.

பண்டா ஊற்றிக் கொடுக்கிறான்
அவர்கள் குடிக்கின்றார்கள்

பறவைகளின் பல விதமான ஒலிகள் இந்தக் கிராமங்களில் கேட்டுக் கொண்டே இருக்கும். பட்சிகள் வசிக்க அடர்த்தியாக மரங்கள் வளர்ந்திருப்பதாலும் பெரும்பான்மையான மரங்கள் பழ மரங்களானபடியால் அவைகளின் உணவுக்கும் சிரமம் ஏற்படுவதில்லை. ஆகவே பலவிதமான பறவைகள் கூட்டம் கூட்டமாய் இங்கு காணப்படுகின்றன.

வண்ண வண்ணமான பட்சிகள் வகை வகையாகப் பறப்பதைப் பார்க்க மிகவும் அழகாக இருக்கும்.

தோட்டமும் நாடும் இணையும் இடத்தில் ஓர் பலசரக்குக் கடை இருக்கிறது.

சீனி தேங்காயிலிருந்து சோப்பு பவுடர் வரை; அரிசி; மாவிலிருந்து தேங்காய் எண்ணெய் லாம்பெண்ணை வரை சகலதும் அந்தக் கடையில் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பளம் போட்டதும் பட்டணம் சென்று ஒரு மாதத்துக் குத் தேவையான சாமான்களை மொத்தமாக வாங்கி வைத்துக் கொள்ளும் திறமைசாலிகள் போக மற்றவர்களுக்கெல்லாம் இந்த ஒற்றைக் கடை தான் ஈடு கொடுக்கிறது.

மொத்தமாக சாமான் வாங்கி வைத்துக் கொள்ளும் புத்திசா லிகள் கூட தட்டுப் பட்டால் ஓடி வருவது இந்த ஒற்றைக் கடைக்குத்தான்.

தமிழர் சிங்களவர் அனைவருமே இதை 'ஒத்துக்கடை' என்றே அழைக்கின்றனர். நிலைமை மாறி மேலும் ஒன்றிரண்டு கடைகள் தோன்றிவிட்ட பிறகும் கூட 'ஒத்தைக்கடை' என்ற பெயரே நிலைத்து நிற்கிறது.

இந்த ஒற்றைக் கடைக்காரர் கொடுப்பது தான் சாமான்! சொல்வது தான் விலை! பேரமே கிடையாது. வேண்டாமென் றால் வேறு எங்கே போவது.

கடைத்தெருவில் ஒரு றாத்தல் சீனி அறுபது சதம் என்றால் இங்கே தொண்ணூறு சதம். அதுவும் சரியாக பதினாறு அவுன்ஸ் இருக்காது. முக்கால் ராத்தலுக்கு கொஞ்சம் கூடும்.

''என்னங்க முதலாளி வெலை கூட மாதிரி இருக்கே'' என்பவர்களுக்கு அவருடைய ஒரே பதில் ''போயேன் போய் அங்கே கொஞ்ச வெலைக்கு வாங்கியாவேன்'' என்பது.

''என்னங்க முதலாளி ஒரு றாத்தல் இருக்காது போலிருக் கே'' என்பவர்களுக்கு அவருடைய ஒரே பதில் ''இந்தா கல்லைப் பாரு கவண்மெண்ட் சீல் இருக்கு'' என்பது.

இருந்தும் யாரும் முனகாமல் போவது கிடையாது. தராசில் காகிதச் சுருள் இருக்கும்போதே குறையுது மொதலாளி என்பார்கள்.

''இன்னும் மூக்கு முட்டக் குடிச்சிட்டு வா அளவு தெரியும்'' என்று கூறுவதுடன் ''ம்ம் இந்தா போய்ச்சேரு'' என்னும் சலிப்புடன் சுண்டு விரலை நீக்கி மற்ற நான்கு விரல்களால் நாசுக்காக கொஞ்சம் அள்ளிப் போட்டு ஆளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்திபடுத்தி அனுப்புவார். ஒட்டகத்துக்கு பாரம் இறக்குவது போல.

சீனியோ, உப்போ, அரிசி பருப்போ, ஏதாயிருந்தாலும் நாலு அள்ளிப் போட்டுத்தான் காகிதத்தைச் சுருட்டுவார். அதனால் ஒத்தைக் கடை என்னும் பெயருடன் 'அள்ளிப் போட்டான் கடை' என்னும் பெயரும் வழங்கி வருகிறது.

இதுபோன்ற ஒத்தைக் கடை ஏமாற்றுக்கள் தோட்ட மக்களுக்கு தெரியாததல்ல வேறு வழி இல்லாத நிலைதான்.

''ஒத்தைகடையில் சாமான் வாங்குறவனும் ஒண்ணாம் தேதி சீக் இருக்கிறவனும் உருப்பட மாட்டான்' என்னும் பழமொழியொன்றும் தோட்ட மக்களிடையே வழங்கி வருவதில் இருந்து 'வேறு வழியில்லாத நிலையினாலேயே இவ் ஏமாற்றுகளுக்கு இவர்கள் பலியாவது புரிகிறது!

ஒற்றைக் கடையில் ஒரே கூட்டம். நாட்டுக்குப் போவோரும் சென்று திரும்புவோரும் அங்கே வந்து குழுமியே ஆக வேண்டும்.

''என்னங்க மொதலாளி இது அனியாயம். தேங்காண்ணை ஊத்தச் சொல்லி போத்தலை வச்சிட்டுப் போனா லாம் பெண்ணை ஊத்தி வச்சிருக்கீங்க. வெலை மட்டும் தேங்காண்ணைக்குப் போட்டுறு வீங்க...''

போத்தலைத் தூக்கிக் காட்டியபடி கத்தினான் சன்னாசி. காத்தாயியின் கணவன்.

ஒற்றைக் கடை முதலாளி நெற்றியைச் சுழித்தார். நெற்றி மேட்டில் நின்ற கண்ணாடி பொட்டென்று மூக்கில் விழுந்தது. இடது கையால் கண்ணாடியை ஆட்டி அசைத்து சரி பண்ணியபடி சன்னாசியை முறைத்துப் பார்த்தார்.

''நீ என்ன வெளையாட்டா பண்ணுறே? ஒந்தோட்டம் தொறக்கு முந்தி கடை தொறந்தவன் நான்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் அனுபவத்தைக் காட்டி 'தேங்கயெண்ணைக் கேட்டிருந்தால் தேங்காயெண்ணை தான் ஊற்றியிருப்பேன்' என்பதை நிரூபிக்க முதலாளி முயன்றாலும் தவறு நேர்ந்திருக்கலாமோ என்ற தடுமாற்றமும் அவருடைய முகத்தில் தெரிந்தது!

''அடே அது என்னுதுடா... இதோ இருக்கு உன்னோட தேங்காண்ணைப் போத்தல்'' என்று மாரிமுத்து கூறியதும் சண்டைக்கோழி போல் சிலிர்த்துக் கொண்டார் முதலாளி.

தன் பக்கம் கனம் ஏறிய களிப்பு முதலாளியின் முகத்தில் ஆத்திரமாய் தெறித்தது.

ஒ''கோவிச்சுக்காதீங்க மொதலாளி.. ரெண்டும் ஒரே சாதி சாராயப் போத்தலாச்சா..'' என்று சன்னாசி குழைந்தான்.

போத்தலை சன்னாசியிடம் நீட்டிய படி தன்னுடைய லாம்பெண்ணைப் போத்தலை வாங்கிக் கொண்ட மாரிமுத்து ''எனக்கு என்னங்க பாக்கி நிக்குது... நாளைக்கு சம்பளமாச்சே..'' என்று கேட்டான்.

நாலு புத்தகம் எடுத்து ஆறேழு ஏடு புரட்டிப் பார்த்து விட்டு முதலாளி கூறிய தொகை நாற்பத்தெட்டும் சதக்கணக்கும்.

பண்டாவின் பாக்கி அறுபத்தைந்துக்கும் 'நாளைக்கு சம்பளமாச்சே தந்திடறேன்.' கடை பாக்கி நாற்பத்தெட்டுக்கும் 'நாளை சம்பளமாச்சே தந்துடறேன்? இன்னும் எத்தனை பேரிடம் இந்த நாளைக்கு சம்பளமாச்சே பாட்டோ?''

அவனுக்கு சுமார் அறுபது ரூபாய் சம்பளம் வரலாம். யாருடைய கடன் தீர்க்க போதும் அது?

அதை மட்டும் சிந்திக்கும் திறன் இருந்திருந்தால் நாளைக்கு சம்பளம் என்னும் நினைவு எப்படி குளிர்ச்சியாக இருக்கும்.

கொதிக்கும் எண்ணைய் தெறிப்பாகவல்லவா இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைப் பற்றி ஒரு நிமிடம் உட்கார்ந்து சிந்திக்காத எவனும் - சிந்திக்கத் தெரியாத எவனும் உருப்படுவதே இல்லை.

★★★

# 3

லை அடுக்கில் சூரியன் விழுந்து எத்தனையோ நேரமாகி விட்டது. மஞ்சள் அரைத்த அம்மியாய்க் கிடக்கிறது வானம். மாலைக் கதிரவன் அள்ளித் தெளிக்கும் மஞ்சளில்; மஞ்சள் மஞ்சளாய் பலாப் பழத்தின் அளவு பருமனாய்ப் பழுத்து நிற்கும் அன்னாசிப் பழத் தோட்டத்தின் ஓரமாக நடந்து கொண்டிருக்கின்றான் சன்னாசி.

கொழும்பு போன்ற பெரு நகரங்களுக்குச் சென்று விலை யாக வேண்டிய பழங்கள். நன்றாகச் சிவந்த செம் பழங்களின் மணம் மனத்தைக் இரங்கச் செய்கிறது. நிறம் கண்ணைக் கவர்கிறது.

ஒரு பழம் ஒடிச்சுக்கிட்டுப் போனா நல்லது! புள்ளைங்க கிட்ட குடுக்கலாம் என்று எண்ணியவன் ஒரு கணம் நின்றான்.

நின்ற சன்னாசியைப் பார்த்துச் சிரித்தது அன்னாசிச் சேனைப்பொம்மை. காவற்காரன் குடிசை கண்ணில் பட்டது. 'கிடக்குது சனியன்' என்றவாறு மலைக்குறுக்கில் இறங்கினான்.

கால் கொஞ்சம் தடுமாறியது. 'போதை ஏறுகிறது' என்று திருப்திப்பட்டுக் கொண்டான்.

'கிறிவந்தையின் கள் மோசமில்லை' என்ற நினைவு எழுந்தது. 'நான் கிரிவந்தையிடம் போய்விட்டதைக் கேள்விப் பட்ட பண்டா கொதிச்சுத்தாண்டுனானாம் ஒத்தைக் கடையிலே ருந்து வரயில இப்பத்தான் மாரிமுத்து சொல்லிட்டுப் போனான். நல்லது பொல்லாதது யோசிக்காம காட்டுத்தனமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாவது செய்துட்டான்னா? என்ற பயம் அவனை ஆட்கொண்டது.

பண்டாவுக்கு பாக்கி கொடுபடாமலே நின்று விட்டது. பண்டா கள் ஊற்ற மறுத்தான். மூன்று மாத பாக்கி நின்றுவிட்ட காரணம்! இடம் மாற நேரிட்ட நினைவின் நிழல்! அவனுடைய பயந்த மனசில் கோலமிட்டது..

சம்பளம் போட்டதும் தோட்டத்து இளவட்டங்கள் அன்றிரவே பட்டணம் போய்விடுவார்கள் படம் பார்க்க. அதுவும் கார்பிடித்துக் கொண்டு. ஒத்தைக்கடை முதலாளியின் கார் ஓடுவதே இவர்களை நம்பித்தான்!

அடுத்தநாள் மலையில் ஒரே சினிமாக் கதைதான். கங்காணி கத்துகத்தென்றுக் கத்துட்டுமே யார் கவனிப்பார்கள்.

சண்டையைப் பற்றிக் கதைப்பான் ஒருவன். சிருங்காரத்தைப் பற்றிக் கதையளப்பான் ஒருவன். நகைச்சுவை பற்றி கூறிச் சிரிப்பான் மற்றொருவன். கேட்டுக்கொண்டு 'ஆ' வென்று நிற்போரில் சிலர் அன்றே போய்விடத் துடிப்பர். அடுத்த நாள் பேச்சில் தாங்களும் கலந்து கொள்ளவேண்டும் என்ற வெறியில்.

சன்னாசிக்கும் ஆசைதான் என்றாலும் பயம் ஒரு பக்கம்.

பாத்திமா மாதாவின் சொரூபம் வந்தபோது - எப்போது என்றுகூட நினைவில்லை - ஒரு தடவை பதுளைக்குப் போயிருக்கின்றான்.

இப்போது எப்படிப் போவது? எங்கே போய்ப் படம் பார்ப்பது என்று சன்னாசி தயங்கியபோது தான் அழைத்துப் போவதாக முன்வந்தான் ஒருவன்.

''இந்தா பாரு சன்னாசி இது தான் டிக்கட் வாங்குற எடம்! இது அம்பத்தைஞ்சு சதம் கியூ - இது ஒரு ரூபா பத்து சதம் - இது ரெண்டேட கால் ரூபா - அதோ அது மெத்தை: மூணோ நாலோ ரூபா - நமக்கெல்லாம் தெரியாது..'' என்று இடங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைக் காட்டி விட்டு ''இன்னும் 'ஷோ'வுக்கு 'டயம்' இருக்கு போய் தேத்தண்ணி கீத்தண்ணி குடிச்சிட்டு வா'' என்று பட்டணம் வந்தால் செய்ய வேண்டியவற்றைச் சொல்லிக் கொடுத்தான் கூட்டி வந்தவன்.

'இங்கே சாராயம் விற்கப்படும்' என்று கொட்டை கொட் டையாக சிவப்பில் எழுதியிருந்த போர்டின் அடியில் நுழைந் தான் சன்னாசி.

சூரியன் ஏறிவரும் காலைப்பொழுது. இதற்கெல்லாம் காலம் நேரமா இருக்கிறது!

சன்னாசி தியேட்டருக்கு வரும் போது பத்தேகால் மணி. காலைக்காட்சி பத்து முப்பதுக்குத்தான் என்றாலும் க்யூ பிதுங்கி வழிகிறது. அதனுள் நுழைந்து சமாளிப்பதென்பது அவனால் முடியாத காரியம். அதே நேரத்தில் ஒரு ரூபாய் பத்து சதம் கொடுக்கவும் மனம் இடம் தர மறுக்கிறது. 'எங்கேயிருந்து பாத்தாலும் அதே படம் தானே'' என்ற நினைவுடன் கலரி வரிசையிலேயே விழித்துக் கொண்டு நின்றான்.

''மொக்கத கங்காணி டிக்கட் ஓணத?''

'டிக்கட் வேணுமா கங்காணி' என்று சிங்களத்தில் கேட்ட படி சன்னாசியின் அருகில் வந்து நின்றான் ஒருவன்.

பெருந்துடைக்கு மேல் சுருட்டிநிற்கும் சாரத்தடியில் கறுப்பு நிற அரைக்கால் சட்டை; வரிப்புலிபோல் கோடு போட்ட அரைக்கை டிசேட் கழுத்திலே ஒரு வெள்ளித் தாயத்து; வலக்கையிலே கடிகாரம்; சவரம் செய்து பளபளக் கும் முகம் - பட்டணத்து ரவுடி டைப் என்பதை இத்தனையும் பறை சாற்றுகின்றன.

அவன் தன்னை விட்டுப் போனால் போதும் என்றிருக்கி றது சன்னாசிக்கு. 'வேண்டாய்யா' என்று நழுவப் பார்த்த வனை மற்றவன் விடுவதாக இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்தா டிக்கட்.. எம்பது சதம் குடு'' என்றவாறு ஒரு ஐம்பத்தைந்து சதம் டிக்கட்டை நீட்டினான்.

''என்னய்யா அநியாயம் இது! எம்பது சதம் கேக்குறே'' என்றவனை முறைத்தான் அவன்.

''இந்த நெறிசல்ல ஒன்னால் டிக்கட் எடுக்க முடியுமா? அதுக்குப் போனா ஒரு ரூபா பத்து சதம். ஒரு ரூபா பத்து சதம் குடுக்கறதுக்கு எம்பது சதம் குடுக்க வலிக்குதோ!'' என்றவனிடம் வேண்டா வெறுப்புடன் ஒரு ரூபாவை நீட்டி னான். அவன் தன்னை விட்டுப் போனால் போதுமென்றிருந் தது அவனுக்கு.

டிக்கட்டையும் இருபது சதத்தையும் சன்னாசியிடம் நீட்டி விட்டு நடந்தான் அவன். இன்னும் நாலு பேரைப் பிடிக்க வேண்டுமே!

நாலு டிக்கட் விற்றால் ஒரு ரூபாய் இருக்கிறது அவனுக்கு!

கையிலே டிக்கட் இருந்தும், உள்ளே போக முடிய வில்லை சன்னாசியால்.

சட்டையை கழற்றி கக்கத்தில் இடுக்கிக் கொண்டு; வேர்வை ஒழுகும் வெற்றுடம்புடன் 'ஆஸ் ஊஸ்' என்று சப்தமிடும் கூட்டத்தை எப்படி நீவி நெறித்துக் கொண்டு போவது. மலைத்துப் போய் நின்றான். ஏன் தான் இந்தத் தொல்லையோ!

பயனற்ற செலவுகள் எல்லாமே இப்படிதான்! நன்மை தான் செய்வதில்லை என்றாலும் தீமை செய்யாமலாவது இருப்பதில்லை - மரியாதையும் கொடுப்பதில்லை. இருந்தும் நாம் அதைப் பொருட்டுப்படுத்துவதில்லை.

இப்படிச் சிரமப்பட்டேன் அப்படிச் சிரமப்பட்டேன் என்று பேசிக்கொள்வதில் ஒரு பெருமை. சிறுமை உணராத ஒரு போலிப் பெருமை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழித்துக் கொண்டு நின்ற சன்னாசி மனதைத்திடப் படுத்திக்கொண்டு கூட்டத்தில் இணைந்தான்.

'ஆய் ஊய்' என்று ஒரே கூச்சல். ஒரு நிமிசம் ஊசி நிற்கும் இடத்தில் அவன் உடல் நின்றது. அடுத்த நிமிசம் இரும்பு கேட்டுக்கும் உள்ளே நின்றான்.

இத்தனைக்கும் அவன் நடக்கவில்லை. நகரவில்லை. இதோ உள்ளே வந்து விட்டான்.

காட்டாற்று வெள்ளத்தில் விழுந்த இலைபோல.

இரும்பு கேட்டுக்கு உள்ளே நெரிசல் இல்லை. நின்று நிதானமாக மூச்சுவிட்டு, ஆசுவாசமாக நடந்து திரைக்கும் அருகே பெஞ்சில் அமர்ந்து கொண்டான்.

படம் பார்த்துவிட்ட திருப்தி அப்போதே அவன் முகத்தில் தெரிந்தது!

வரிசை வரிசையாக வாங்குகளில் அமர்ந்திருந்தவர்கள் ஏதேதோ வாங்கினார்கள். பீடி; சிகரெட்; டொபி; கடலை என்று சில்லரைக்குத் தகுந்தாற் போல்.

உழைப்பவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கலாம். உண்ப வர்களைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

நாமும் ஏதாவது வாங்குவோமே என்ற நினைவு உள்ளே ஊற்றிய சாராயத்தின் நெடியுள் ஏப்பமாக வெளிவர, மிளகாய்த் தூள் போட்டு பொரித்த காரமான கடலைப் பொட்டலம் ஒன்று வாங்கிக் கொரித்தால் அந்த நேரத்துக்கு அருமையாக இருக்கும் என்ற மகிழ்வுடன் சட்டைப் பாக்கெட்டில் கை போட்டான். பகீரென்றது! பர்ஸ் மட்டுமா இல்லை. டிக்கட்டே இல்லை!

தனக்கு டிக்கட் விற்ற ரவுடியின் முகம் - தன்னை தள்ளிக் கொண்டு வந்த கரை சேர்த்த கும்பலின் நெரிசல் அத்தனையும் ஒரு கணம் ஓடி மறைந்தன மனசில். வீடும் நாடும் ஒரு வினாடி தோன்றின. அடுத்துப் பய முறுத்தியது பண்டாவின் முகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்தில் யதேச்சையாகச் சுற்றிவருவது போல் பட்ட ணங்களில் முடியாது.

தோட்டத்து மக்களின் வாழ்க்கை முறையே அலாதியா னது. சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கும் சிங்கள மக்களையும் ஓரளவு சேர்த்துக் கொள்ளலாம்.

இவர்கள் அதிகம் படிக்காதவர்கள். அதிகச் செல்வம் இல்லாதவர்கள். அனாவசிய ஆடம்பரங்கள் பற்றி அறியாதவர் கள். நகரத்தின் நாகரீகச் சொகுசுகளை அனுபவிக்கும் சமூகத்தி னரின் பார்வை படாதவர்கள். ஆனால் அமைதியுடன் கூடிய அடக்கமான வாழ்வு வாழ்கின்றவர்கள். தான் உண்டு! தன் உழைப்புண்டு! வாழ்க்கை உண்டு! என்னும் வாழ்வு.

அந்த அடக்கமான வாழ்விலேயே பழகிவிட்ட கட்டு பெட்டித்தனம் தான் இன்று சன்னாசியை இந்த நிலைக்கு ஆளாக்கியுள்ளது.

பஸ் ஏறக்கூடக் காசில்லாமல் கால் நடையாகவே தோட் டம் வந்து சேர்ந்தவனை கடுகடுத்த முகத்தடன் வரவேற்றாள் காத்தாயி.

அவனுக்கு இருந்த ஆத்திரத்தில் சக்கையாக நகர்த்திவிட் டான் மனைவியை.

வெளியிலிருந்து வரும் ஆண் எப்படி எந்தவிதமான மன நிலையில் வருகின்றான் என்பது தெரிந்து மனைவி நடந்து கொள்ளவில்லையானால் இதே கதிதான்.

அடிபட்ட காத்தாயி ஆறு நாள் படுத்துவிட்டாள் தோட் டத்து ஆஸ்பத்திரியில். குடும்பம் என்றால் என்ன என்றே தெரியாத சன்னாசி பிள்ளைகளுடன் ஒரு வாரம் படாத பாடுபட்டான். அவனுக்கு அது நல்லதொரு பாடம்.

பெற்றவர்களைப் பிரிந்து தனிக் குடும்பமான பிறகு ஏழையாக இருந்தாலும் பணக்காரனாக இருந்தாலும் ஆணை விடப் பெண்ணுக்குத்தான் பொறுப்பும் சுமையும் அதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை அந்த ஒரே வாரத்தில் உணர்ந்தான். ஒப்புக் கொள்ள மனம் துணியாவிட்டாலும்.

என்ன நடந்தாலும் இனி அவளைக் கைநீட்டி அடிப்ப தில்லை என்று மானசீகமாய்ச் சத்தியம் செய்து கொண்டான்.

ஒரு நாள் கூத்துப் பாக்கப் போன லட்சணம் பண்டாவின் பாக்கி துண்டு பட்டது.

பழைய பாக்கியுடன் இதுவும் இணைந்து முறுக்கிக் கொண்டது காட்டுக் கொடிபோல்.

கடனைக்காட்டி பண்டா கள் ஊற்ற மறுப்பான். மற்றவர் கள் முன்னிலையில் அவமரியாதையாகப் பேசுவான். மது அருந்தப் போனாலும் மான உணர்ச்சி அவனைக் குத்தும்.

'கெட்டான் கழுதை! இந்தப் பண்டா இல்லாட்டி இன் னொரு கிரிவந்து' என்று இடத்தை மாற்றிக் கொண்டான்.

அது இப்போது உதைக்கிறது!

வானம் இருட்டிக் கொண்டது. பகலில் பலநிறம் காட்டும் எல்லாமே இப்போது ஒரு நிறம் காட்டுகின்றது.

இரவின் இருமையலே எல்லாமே ஒரே கறுப்புத்தான்.

காட்டுத்தனமாக வளர்ந்துள்ள மரங்கள் அடர்ந்த நாட் டைத் தாண்டி வரிசை வரிசையாகச் சீராக வளர்க்கப்பட்டுள்ள மரங்கள் அடர்ந்த தோட்டத்தின் ஒற்றையடிப் பாதையில் நடந்து கொண்டிருக்கின்றான் சன்னாசி.

ஓடிவிட்ட காலத்தின் நினைவுகளில் நடந்துகொண்டிருக் கிறது சன்னாசியின் மனம்.

ஒற்றையடிப்பாதை ஓடிக்கொண்டே இருக்கும். டக் கென்று முன்னே ஓங்கி வளர்ந்த சவுக்கு மரம்தான் நிற்கும். ஓடிவந்த ஒற்றையடிப்பாதை வேறு வேறு பக்கமாக பள்ளத் தில் இறங்கி ஓடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டு மந்தை ஓடிய வயல்போல் பாதை அப்படித்தான் இருக்கிறது. சேரும் சகதியுமாக.

சேற்றில் கால் வைத்து அந்தத் பிதுங்கும் மண் குழைவி லேயே நிதானமாக நடந்தால்தான் பிழைக்கலாம். ஒற்றைய டியை விட்டு இப்புறமோ அப்புறமோ காலை வைத்து விட்டால் தொலைந்தது. பச்சையாய்ப் பூத்துக்கிடக்கும் பாசி வழுக்கிக் கொண்டு போய்விடும். பனிக்கட்டியில் ஓடும் வழுக்கல் பந்தயம் போல்.

சன்னாசியும் வெகு நிதானமாக ஆனால் வேகத்துடனேயே நடந்தான். இன்று நேற்றா நடக்கின்றான் இந்தத் தோட்டத்துக் கும் நாட்டுக்கும்.

சமதரையில் ஓடி வந்த குறுக்குப் பாதை பள்ளத்தில் இறங்கியது. நனைந்து நிற்கும் தேயிலை சிலுசிலுவென்று உடலில் உராய குறுக்குப் பாதையின் பள்ளத்தில் கால் வைத் தான் சன்னாசி.

பள்ளத்தில் இறங்கினாலும் மேலே பறப்பது போல் இருக்கிறது அவனுக்கு. கிரிவந்தையின் கள் மோசமில்லை என்ற எண்ணம் மீண்டும் நினைவிலோடியது.

கணுக்கால் வரை உள்ள சகதியில் கால்கள் இலேசாகப் பின்னுகின்றன. தோளில் தொங்கிய குட்டிச் சாக்கில் கிடக்கும் போத்தல்கள் ஒன்றுடன் ஒன்று மோதி எழுப்பிய தாளம் சன்னாசியின் இசையறிவை உசுப்பிவிட்டது.

'சுருளைமலை மீதில் வாழும் சீலா உன்னை தோத்தரித் தேன் சுப்ரமண்ய வேலா.. என்னப்பனே வேலா..' என்று நீட்டி முழக்கிய சன்னாசி மறுகணம் பனிச் சருக்கல் பழகினான்.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

வழக்கம் போல் அன்றும் ஐந்து மணிக்கு லயத்துக்கு வந்தாள் காத்தாயி.

வேலைவிடச் சங்கூதுவது சரியாக மூன்றரைக்குத்தான். என்றாலும் எடுத்த கொழுந்தை நிறுத்து முடித்து வீடு வந்து சேர ஐந்து ஐந்தரை ஆகி விடும்.

பாதையோரத்தில் நடந்து கொண்டிருந்தவள் மேல் குழியில் கிடந்த சேற்று நீரை வாரி இறைத்துக் கொண்டு ஸ்டோரை நோக்கி ஓடுகிறது தோட்டத்து லொறி.

லயத்து வளைவில் பிறேக் போட்டு லொறி மெதுவாகத் தான் திரும்பும் என்ற தைரியத்தில் பின் கதவில் தொத்திக் கொண்டு வந்த இரண்டொரு இளவட்டங்கள் லாவகமாகக் குதித்து இறங்கிக் கொண்டனர்.

''நாளைக்கு தொத்திக்கிணு வந்தின்னா டிரைவர்கிட்டே சொல்லிறுவேன்'' என்ற லொறி ஆட்களின் குரல் எஞ்சினின் சத்தத்தில் தேய்ந்து மறைகிறது.

குதித்து இறங்கிக்கொண்டவனின் அண்ணனாகவோ; தம்பியாகவோ இருப்பான் லொறியாள். அவன் எங்கே சொல்லப் போகின்றான் டிரைவரிடம்.

பாதையைத் தாண்டி லயத்துச் சந்துக்குள் நுழைகிறாள் காத்தாயி.

அந்த இடத்தில் குறுக்கு நெடுக்காக நாலு லயங்கள். ஒவ்வொரு லயத்திலும் பத்துப்பன்னிரெண்டு அறைகள். முதல் இரண்டு லயங்களையும் தாண்டிப்போக வேண்டும் அவள்.

மூன்றாவது லயத்தின் கடைசிக் காம்பிரா அவளுடையது!

லேசாகத் தூறிய மழை வலுக்கத் தொடங்கியது. லயத்துக் கானுக்கு மேலாக வேகமாக நடக்கிறாள் காத்தாயி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூரையிலிருந்து குதிபோட்டுக் கொண்டு விழுகிறது மழை நீர்! லைசன் கல்லில் விழுந்து; விழுந்த வேகத்துடன் பந்து போல் துள்ளி மேலெழும் அழகு அலாதியானது. நனைகின் றோமே என்பதை மறந்துவிட்டால் நாளெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

ஒவ்வொரு காம்பிராவின் முன்னாலும் இரண்டாய் வெட் டப்பட்ட பாதி 'ட்றம்' நிறைந்து வழிந்து கொண்டிருக்கிறது. ட்றம் இல்லாதவர்கள் வீட்டில், ஒரு பெரிய கைவாளியோ - தவலையோ - செப்புக்குடமோ - நிரம்பி ஓடிக்கொண்டிருக்கி றது.

வெய்யில் காலத்தில் மட்டுமல்ல! மழைக்காலத்திலும் இவர்களுக்குத் தண்ணீர் தட்டுப்பாடுதான்!

வெயிற் காலங்களில் ஊற்றுக் கண் காய்ந்துவிடும். மழைக் காலங்களில் தண்ணீர்க் குழாய்களுக்குள் மண்ணும் சகதியும் போய் அடைத்துக்கொள்ளும். மீண்டும் பைப்பை சுத்தப்ப டுத்தி தண்ணீர் வரப் பண்ணும் வரை குடிக்க, கொள்ள இதோ நிறைகிறதே இந்த - மழை நீர் தான்!

நிறைந்தோடும் வாளிகளை ஒன்றொன்றாய்க் கடந்த காத் தாயி தன் வீட்டுக்கு முன்னால் நிறைந்தோடும் வாளி நீரை கையால் இறைத்துக் கொண்டாள், கால்களின் மேல்.

ஊறி வெளிறிய பாதங்கள் பனிக்குளித்த பஞ்சாய்த் தெரி கின்றன. கால் ஈரத்தை வாசற்படியில் துடைத்துக்கொண்டு வீட்டுள் நுழையப் போனவள் ஒரு கணம் நின்றாள்.

ஈரக்கம்பளியை இழுத்துருவி கயிற்றில் போட்ட கையு டன் இடையில் இறுகிக்கிடந்த படங்கையும் அவிழ்த்துப் போட்டாள். சேலையின் அடி ஈரத்தைப் பிழிந்து உதறிக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

லயத்தின் இந்த மூலை தொட்டு அந்த மூலை வரை அரைச் சுவற்றுக்கும் கூரைக்கும் இடையே கட்டியுள்ள கொடிக் கயிற்றில் வரிசையாகத் தொங்கும் ஈரக்கம்பளி - சாக்கும் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைத்துணி இத்தியாதிகள் எல்லாம் அன்று வேலைக்காட்டில் நனைந்து வந்து அவிழ்த்துப் போட்டவைதான்.

வீட்டுக்குள் நுழைந்த காத்தாயி சிறிசுகள் ஒன்றையும் காணவில்லையே என்று யோசித்தாள்.

''எங்காவது வெளையாடப் போன இடத்தில் கிடக்குங் கள் மழை விட்டதும் வரும்' என்று எண்ணியபடி அடுப்ப டியை அடைந்தாள்.

அடுத்த வீட்டுக் கோழி அவளுடைய அரிசிப் பெட்டிக் குள் தலையை விட்டு கழுத்தை மாட்டிக் கொண்டு கிடந்தது. கழுத்தைப் பிடித்து அதை வெளியே இழுத்து வீசி எறிந்தாள்.

பூ மயிரை உதிர்த்துக் கொண்டு அது போட்ட சத்தத்தில் பெட்டியில் கிடந்த சிசு அசைந்து கொடுத்தது.

அடுப்பங்கரை இருளில், வெந்த மண் சூட்டின் கதகதப் பில் சாக்கை விரித்துப் படுத்திருந்தாள் மூத்தவள்.

காத்தாயிக்கு பற்றிக் கொண்டு வந்தது ஆத்திரம்.

''அரிசிப் பெட்டியில கெடக்குற கோழி கூடத் தெரியா மல் அஞ்சு மணிக்கே என்ன தூக்கம்.''

...மூதேவி...'' என்றவாறு நீட்டியிருந்த மகளின் காலில் பளீரென ஒரு அறை வைத்தாள்.

''ஐயோ ஆயா'' என்று அலறித் துடித்துக் கொண்டு எழுந்தாள் மகள்.

அறைந்த கையில் எல்லாம் ரத்தம் பிசுபிசுவென்று.

துள்ளி எழுந்த சிறுமியை கட்டிப் பிடித்துக் கொண்டாள் காத்தாயி.

''அடிப்பாவி மகளே இது என்னடி..?'' என்று அலறி னாள். உதடுகள் துடித்தன.

அந்த ஒன்பது வயதுச் சிறுமியின் குஞ்சுப் பாதம் வெள்ள ரிப்பழமாய்ப் பிளந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மே மலையில் வெறகு பொறுக்கிக் கிட்டிருந்தேன்.. மழை வந்துடுச்சேன்னு வேகமா ஓடியாந்தேன். போத்தல் ஓடு வெட்டிப் புடிச்சி...''

அழுகையும் கேவலுமாகக் கூறிய சிறுமியை இறுக அணைத்துக் கொண்டாள் அன்னை.

அந்த நிமிஷத்தில் அவளால் மகளுக்குக் கொடுக்கக் கூடியது அந்த ஆறுதல்தான்.

அன்னையின் அந்த அணைப்பிலேயே மகளுக்கு வலி குறைந்துவிட்டாற்போல் தெரிகிறது.

அந்தத் தாயிடமிருந்து இப்படி ஒரு அணைப்பு - ஆதரவு - இந்த மகளுக்கு என்றைக்குத்தான் கிடைக்கிருக்கிறது?

அதற்கெல்லாம் எங்கே நேரம் இருக்கிறது இவர்களுக்கு!

வலி தெரியவில்லை என்றாலும் வாய் அழுகிறது! நெஞ் சுக்குள் கிடக்கும் அந்தப் பிஞ்சுத்தலையின் அசைவில் மகள் அழுவதை உணர்கிறாள் காத்தாயி.

அவளுக்கும் கதறி அழ வேண்டும் போல் இருக்கிறது.

வாய்விட்டு அழுதால் பொங்கி வழியும் துயரம் கொஞ்சம் குறையத்தான் குறைகிறது!

ஆனால் அவள் எதை எண்ணி அழுவது!

எது நடந்தாலும் கேட்க நாதியற்று அனாதைகளாக - தானே வளரும் இந்தப் பிள்ளைகளை நினைத்து அழுவதா?

ஊற்றும் மழையையும் சட்டை செய்யாமல் வீட்டை மறந்து நாட்டுக்குப் போய் குடித்து மயங்கும் தன் கணவனை நினைத்து அழுவதா?

தனது தலை விதியை நினைத்து அழுவதா? அல்லது இந்த சொர்க்க வாழ்வுக்காக சுய மரியாதையை இழந்து கடலில் மூழ்கி ஓடி வந்தார்களே அவர்களின் அக்கரைப் பச்சை புத்தியை நினைத்து அழுவதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்து லயத்து மைனர்ப் பையனிடம் மகளைத் தூக்கிக் கொண்டு ஓடினாள்.

தோட்டத்து டிஸ்பென்சரியில் ஒரு பிடி ஆளாக வேலை செய்பவன் அவன். கொஞ்சம் படித்தவனும் கூட.

பஞ்சு, பெண்டேஜ் துணி; அயடின் டெட்டால் என்று வைத்திருப்பான். மருந்து போட்டுக் கட்டியும் விடுவான்.

மகளுக்கு மருந்து போட்டுக் கட்டி தூக்கிக் கொண்டு வந்து படுக்கப் போட்டாள். எங்கிருந்தோ வந்து சேர்ந்த மற்ற நாலும் மூலைக்கு ஒன்றாக நின்றன.

'ஆயா கோபமா இருக்காள்' என்பதை உணர்ந்து கொண்ட இரண்டாவது பையன் தொட்டிலை ஆட்டத் தொடங்கினான்.

காத்தாயி அடுப்பைப் பற்ற வைத்தாள். சூடாகக் கொஞ் சம் தேனீரை வயிற்றில் ஊற்றினால் தான் வேலை நடக்கும்.

ரேஷனுக்கென்று - அதுவும் தோட்டத்துக்கென்று - ஒரு அரிசி கொடுக்கின்றார்களே மொச்சைக் கொட்டை மாதிரி! அது மூன்று மணிநேரம் வேகும். அதற்கு மட்டுமே ஒர கட்டு விறகு பத்தாது. மழைக்காலம் வந்தால் விறகு பாடே பெரும் பாடு!

அடுப்பில் இருக்கும் ஈயப் பானை 'உய்' யென்று ஒலி எழுப்பியது.

கொதிக்கும் நீரில் கொஞ்சம் எடுத்து தேனீர் கேத்தலில் ஊற்றிக் கொண்டு அரிசியைக் கழுவிப் போட்டாள். அடுப்பு நிறைய தேயிலை மாற்றைத் திணித்தாள். வீடு முழுவதும் புகை மண்டிக் கிளம்பியது.

தேனீரை வடி கட்டினாள்.

கோப்பைகளில் பகிர்ந்து பிள்ளைகளுக்குக் கொடுத்தாள். ஒரு கையில் கோப்பையும் மறுகையில் சீனியுமாக சுவரில் உரசிக்கொண்டு உட்கார்ந்தன நான்கும்.

தேனீரை ஊதி ஊதி ஆற வைத்து மூத்த மகளுக்கு ஒரு வாயும் தான் ஒரு வாயுமாக குடித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உஸ் அய்யாடா' என்று உட்கார ஒரு நிமிடம் உண்டா அவளுக்கு?

வெளியே கருங்கும்மென்று இருக்கின்றது. இருட்டும், மழையும் புகைமூட்டமுமாக!

யாரோ கூப்பிடுவது போல் இருக்கிறது.

சீனியை நக்கி முடித்துவிட்ட சிறிசுகள் தேனீரை வாயில் ஊற்றுவதும் பிறகு வாயிலிருந்து கோப்பையில் துப்புவதுமாக இருக்கின்றன.

பாதையோர லயத்துக் கொடியில் கையில் பந்தத்துடன் யாரோ நிற்பது தெரிகிறது. பலாமரத்தடியில். பந்தத்தில் இருந்து கிளம்பிய புகையால் ஈர்ப்பலா மரத்தில் தூங்கிக்கிடந்த வெளவால்கள் சிறகடிக்கின்றது. இலைகளில் இருந்து வடிந்த நீர் மரத்தடியில் நிற்பவர்களை இடம் மாற்றுகிறது.

''காத்தாயி...! ஏ.. புள்ளே காத்தாயி...'' பாதையோரத்தில் இருந்து இருட்டுக்குள் வந்த குரலுக்கு ''யாருங்க அது?'' என்று ஒரு கேள்வியையே பதிலாக நீட்டினாள் காத்தாயி.

இருட்டுத்தானே என்று அலங்கோலமாய் வெளியே வந்த வள் வெளிச்சத்துடன் நிற்பவர்களைக் கண்டதும் ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டு இரண்டடி எடுத்து வெளியே வைத் தாள்.

நிற்பவர் யாரென்று இப்போது தெரிகிறது.

'நொண்டி அப்பச்சியா! என்னஙகப்பா?'' என்று கேட்ட காத்தாயியின் குரல் நடுங்கியது.

மழைக்கால முன்னிரவில் கரிய அமைதியில் - நாட்டுக் குப் போய்த் திரும்பும் கீழ் லயத்து நொண்டியப்பச்சி நின்று இவளைக் கூப்பிடுகின்றார் என்றால் செய்தி நல்லதாக இருக்க முடியாதே!

மனிதர்கள் ஆண்டவனை எண்ணும் நேரம். காத்தாயியும் ஒரு வினாடி 'கடவுளே' என்று எண்ணிக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உன் புருஷன் ரெட்டைவாங்கிக் கிட்ட கானுக்குள்ளே விழுந்து கெடக்குறான் புள்ளே!''

சொல்லிவிட்டு அவர்கள் நடந்து விட்டார்கள். வெளிச்சம் நடந்து விட்டதும் இடத்தை இருள் கப்பிக் கொண்டது! வெளிச்சத்துடன் நின்றவர்கள் கூறிய செய்தியால் காத்தாயியின் மனத்தைப் பயம் கப்பிக்கொண்டது!

பதறிக்கொண்டு உள்ள ஓடினாள் காத்தாயி. குடிகாரன் தான் என்றாலும் குடும்பத் தலைவனாயிற்றே!

''படுத்திரு ஆத்தா'' என்று மகளுக்குக் கூறிவிட்டு பந்தத்தை கொளுத்தி எடுத்துக் கொண்டு வெளியே ஓடினாள்.

ஹரிக்கேன் விளக்கென்றால் மழை பட்டதும் சிம்னி வெடிக்கும். இதில் அந்தக் கவலை எல்லாம் கிடையாது.

அம்மா வெளியே போய்விட்டதைக் கண்ட சிறிசுகள் மெதுவாகச் சீனி போத்தலைத் திறந்தன.

உடல் பதற உள்ளம் துடிக்க வாரிச் சுருட்டிக்கொண்டு ஓடியவளின் கைப்பந்தம் உறுமிச்சாடும் காற்றுடன் ஒரு கணம் போராடி உயிரிழந்தது.

இருளின் கருமை கண்டு ஒரு கணம் திகைத்தவள் சுதாரித்துக் கொண்டாள்.

இடுப்பிலே இருந்தது நெருப்புப் பெட்டி. பந்தத்துடன் இளம் புகையில் தீப்பெட்டியையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பழகி விட்ட பழக்கம் துணை நிற்கிறது. அவளை அறியாமல் தீப்பெட்டியை எடுத்து வந்திருக்கின்றாள். வெளிச்சம் அணைந்ததும் தான் நெருப்புப் பெட்டியின் நினைவு எழுகிறது.

காற்றை ஏமாற்றி பவ்வியமாகப் பற்றவைத்துக்கொண்டு மீண்டும் விரைந்தாள்.

காற்றுக்குப் பறந்த கூந்தல் பந்தத்தின் தீயில் பொசுங்கி நாறுகின்றது. கையை நீட்டிக் கொள்ளுகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையோர வரகன்புல் வரிசையில் உள்ள தவளை இத்தியாதிகள் கிறீச் கிறீச் சென்று மண்டை வெடிக்கக் கத்துகின் றன.

பாதைக்கு மேல் உள்ள கண்டி முருங்கை மரம் அசைந்து ஆடுகிறது! திருட்டுக்குழை வெட்டும் யாரோ ஒருவன் வெளிச் சம் வருவதைக் கண்டதும் மலைக்காவல்காரனோ என்னும் பயத்தில் மரத்துடன் மரமாக பதுங்கிக் கொள்ள யத்தனிப்ப தால் தான் கண்டிமுருங்கை மரம் ஆடுகிறது என்பது அவளுக் குத் தெரியும்.

உரத்துக்கென்று தோட்டம் வளர்க்கும் இந்த கண்டிமுருங் கைக் குழைகளை மாட்டுக்குப் போட திருட்டுத்தனமாக சிலர் வெட்டுவதுண்டு. அதற்காகத்தான் மலைக்காவல்! பிடிபட் டால் பத்து ரூபாய் அபராதத்துடன் ஒரு வாரம் வேலை கிடையாது.

ஆல மரத்துப் பக்கமாக ஒரு நாய் ஊளையிடுகிறது. அங்கே தான் நடுநிசிக்கு மேல் பேய் உலவுவதாகப் பேசிக் கொள்கின்றனர்.

ஏதோ முனகல் சத்தம் கேட்கவே பந்தத்தை இறக்கிப் பிடித்துப் பார்க்கின்றாள்.

சேற்றுக்குட்டையில் கிடக்கும் எருமை போல் கிடக்கி றான் சன்னாசி.

எங்கிருந்தோ ஒழுகிய இரத்தம் இலேசாகக் காய்ந்து கழுத்தடியில் கறுப்பாய்த் தெரிகிறது.

அவனுக்கு உடலில் எங்கோ காயம் பட்டிருக்கிறது என் பது அவளுக்குத் தெரிகிறது!

வெறி இறங்கிய பிறகுதான் அவனுக்குத் தெரியும்!

இமைகளை ஒரு கணம் மூடி வரம்பு கட்டியிருந்த கண்ணீரை வழிய விடுகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சு மெத்தைக்குள் அமிழ்ந்து கிடப்பது போல் சேற்றுக் குள் புதையுண்டு கிடப்பவனை இழுத் தெடுக்கின்றாள்.

''டேய் விட்று'' என்று குழறிய சன்னாசி காத்தாயியை இனம் கண்டு கொண்டான்.

''இந்தா புள்ளே விடு என்னை... குடிச்சிட்டு வர்றேன்னா நெனைச்சே...''என்றபடி தட்டுத்தடுமாறி எழுந்தான்.

''சரி சரி வா.. நான் ஒன்னும் அப்படி சொல்லலே..'' என்றவாறு கைத்தாங்கலாகக் கூட்டிச் செல்கின்றாள்.

அவளால் முடிகிறதா அவனைத் தூக்க! எடுக்க!

கழுவித்துடைத்து அவனைப் படுக்க வைக்கின்றாள். பக்கத்து காம்பிரா ரேடியோவில் எட்டு அடித்தது.

ரசம் தாளிக்க தேங்காயெண்ணெய் இல்லை. போத்த லையே காணவில்லை. கரண்டியை மகனிடம் கொடுத்து பக்கத்து காம்பிராவுக்கு அனுப்பினாள்.

இந்த அழகில் அவனுக்கு ஆறு பிள்ளைகள் - எட்டு ஜீவனின் சுமையும் இவள் தோளில்தான்!

நாலு மாதத்துக்கு ஒரு தடவை இருபதோ முப்பதோ அவளிடம் நீட்டுவான். மற்றதை எல்லாம் ஆணாய் நின்று அவள் தான் சமாளிக்க வேண்டும். எலும்பைத் தவிர அவள் உடம்பில் என்ன இருக்கிறது.

தொட்ட கைக்கு பொட்டென்று தட்டுப்படுவது ஒரு எலும்பாய்த் தான் இருக்கும்.

பிள்ளைகளும் அதே மாதிரி தான். நெருப்புக்குச்சி மரம் போன்ற ஊசி உடல், சடைச்சவுக்கு மரம் போன்ற பரட்டைத் தலை. சவுக்கு மரம் போன்ற சொர சொரத்த தோல்-

குழந்தைகளை ஆற்றவும் தேற்றவும் அடிக்கவும் அணைக் கவும், கதை சொல்லவும், சிரிக்கப் பண்ணவும்; ஊட்டவும் உடுத்து அழகு பார்க்கவும் பெற்றவர்களுக்கு நேரம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளின் சுயதேவை பூர்த்தி செய்யப்படுவதில்லை. ஆகவே எல்லாக் குழந்தைகளும் ஆரோக்கியமற்று நோஞ்சான் களாகவே இருக்கின்றன.

தாய் தந்தையின் அன்போ அரவணைப்போ கண்டிப்போ, கவனிப்போ இன்றி அனாதரவாய் வளரும் குழந்தைகளிடம் அழகோ வசீகரமோ எப்படி இருக்க முடியும்.

★★★

# 5

அன்று சம்பளம்!

சம்பளத்துவாசல் ஜே ஜே என்றிருக்கிறது!

ஒவ்வொரு லயத்திலிருந்தும் ஆட்கள் வரிசை வரிசையாக நடக்கின்றனர் ஆபீசை நோக்கி.

தங்களை அழகுபடுத்தியே பாத்திராத - அதற்கு நேரமோ - வாயப்போ இல்லாத பெண்கள் கூட அன்று பவுடர் பூச்சும் நெற்றிப் பொட்டுமாய்த்தான் நடை போடுகின்றனர்.

தலையில் கூடையும் இடுப்பில் சாக்குப்படங்கும் இல்லா மல் அவர்கள் ஆடி ஆடிச் செல்வதே ஒரு தனி அழகு.

சமதரையில் நதியோடும் நளினம்!

ஆறேழு நாள் தொடர்ச்சியாகப் பேய் மழை பெய்து நின்றவுடன் ஊர் மக்களின் முகத்தில் தோன்றும் ஒரு பொலிவு இவர்களுடைய நடையில் தோன்றுகிறது.

தோட்டத்துப் பாடசாலையில் அன்று பாடம் நடக்காது. பிள்ளைகள் ஒருவரும் வரமாட்டார்கள் என்பதால். எல்லாப் பிள்ளைகளும் சம்பளம் கொடுக்கும் இடத்தில்தான் நிற்பார் கள் கூட்டமாக! வேடிக்கை பார்த்துக் கொண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொட்டி, மிட்டாய், கடலை என்றும் வெற்றிலை பாக்கு, புகையிலை என்றும், சோப்பு சீப்பு பவுடர் என்றும், சாரம் சட்டை, சேலை என்றும் எல்லாவிதமான பொருட்களும் பாதையின் இரு மருங்கிலும் கடை பரப்பப் பட்டிருக்கும்.

அந்தக் கடைகளின் அருகே அடுத்த வளைவில் தெரியும் பச்சைக் கூரைப் பங்களா துரையினுடையது.

ஒரு நாட்டுக்கு ராஜா போன்றவர் தோட்டத்துக்குத் துரை!

வேலைக்காரர்களின் சிற்றறைகளையும் குசுனி குளியல றைகளையும் சேர்க்காமல் பதினெட்டு அறைகள் கொண்டது அந்தப் பங்களா!

வசிப்பவர் துரையும் அவருடைய மனைவியுமே. பிள் ளைகள் லண்டனில் படிக்கின்றனர்.

பங்களாவின் பூந்தோட்டத்தில் எல்லாவிதமான பூஞ்செடி களும் இருக்கின்றன. கண்டிப் பூந்தோட்டத்துக்குக் கூட தன் பங்களாவில் இருந்து பூங்கன்றுகள் அனுப்பியுள்ளார் துரை.

பங்களாவின் அருகே சம்பளத்தன்றைக்கு மட்டுமே கூட் டம் கூடும். பூக்களையோ, பூஞ்செடிகளையோ யாரும் பறித்து விடாமல் - மிதித்து விடாமல் - பார்த்துக் கொள்வதே அன்று மட்டும் தோட்டக்காரனுக்குப் பெரும்பாடு.

தோட்டத்து ஆட்களைப் பற்றிப் பயமில்லை. அச்சமெல் லாம் கடைபோட வந்திருக்கும் அயலவர்களைப் பற்றியும் வேடிக்கை பார்க்க வந்திருக்கும் குழந்தைகளைப் பற்றியும் தான்.

பூந்தோட்டத்தின் ஓரத்தில் வாங்கியை ஒட்டினாற்போல் ஒரு பலாமரம் இருக்கிறது.

எட்டிப் பறிக்கும் உயரத்திலிருந்து ஏறினாலும் பறிக்க முடியாத உச்சி வரை சிறிது பெரிதாக காய்கள் காய்த்துத்தொங் குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமரத்துக் காய்களை சாக்கால் மூடிக் கட்டியிருக்கிறான் தோட்டக்காரன். கேட்டால் 'கண்திருஷ்டி பட்டுவிடும்' என்பான். அடிமரத்தைச் சுற்றி 'காட்டுண்ணி' முற்செடியைப் புதர் போல் சுற்றி வைத்திருக்கின்றான். கேட்டால் 'ராவுலயும் எனக்கு மரத்தடில நிக்க முடியுமா?' என்பான்.

முன்பெல்லாம் என்றால் பங்களா சூழல் என்றதுமே ஒரு பயம் வந்து விடும். அந்தப் பாதையில் நடக்கக் கூட மாட்டார்கள். அப்படியே நடக்க நேர்ந்துவிட்டாலும் கோவிலினுள் செல்வதுபோல் பயபக்தியுடன் நடப்பார்கள்.

இப்போது எல்லாமே தலைகீழ்தான்! ''துரைக்கு என்னா கொம்பா மொளைச்சிருக்கு'' என்று கேட்கின்றார்கள்.

பூப்பாத்திகளைச் சுற்றி; பலாமரத்தினடியில்; பாதையோரத்தில்; ஆபீசுக்கிறங்கும் படிக்கட்டில் என்று அங்கிங்கெணாதபடி எங்கும் ஆட்கள் உட்கார்ந்திருக்கின்றனர்.

துரை இன்னும் பங்களாவை விட்டு ஆபீசுக்கு வரவில்லை.

கிளாக்கரய்யா செக்றோலை விரித்து வைத்துக் கொண்டு சம்பளம் வாசிக்கத் தயாராக இருக்கின்றார். அறுநூறு எழுநூறு ஆட்களுக்குச் சம்பளம் வாசிப்பது என்றால் இலேசா?

மோட்டார் சைக்கிளில் ஓடி வந்த இரண்டு 'பாய்கள்' கீழ் வளைவிலேயே சைக்கிளை மறைவாக நிறுத்தி விட்டு சம்பளத்து வாசலை நோக்கி நடந்தனர்.

மோட்டார் சைக்கிளைச் சுற்றி சிறுவர்கள் வந்து மொய்த்துக் கொண்டனர்.

படியேறிய பாய்களில் ஒருவன் சிறுவர்களை விரட்ட இறங்கி வந்தான்.

மேலே ஏறும் மற்றவனின் தலை தெரிந்ததும் இரண்டொருவர் நழுவி மறைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அரே கந்தசாமி நீ இன்னா ரெண்டு மாசம் வட்டி தர மறந்து போனே..'' என்று அகப்பட்டுக்கொண்ட கந்தசாமியைப் பிடித்துக் கொண்டான் அவன்.

அவனுடைய தமிழும் அவன் அணிந்திருக்கும் கால் சட்டை மேல் சட்டை போலவே 'தொள தொள' வென்றிருக்கிறது.

''ஆயா கிட்ட சொல்லி அந்த மிட்டாய் வாங்கணும்''

''போன தடவை வந்த கடலைக்காரன் வரலைடா''

''ரெண்டு பாய் வந்திருக்காண்டோய்.''

''நல்ல படமாமே...''

''இன்னைக்குத்தான் ஸ்டார்ட்டுன்னா கும்பல் கூட இருக்குமே..''

''கார் கெடைக்குமா...''

''நாட்டுக்குப் போய்ட்டு வந்திருக்கலாம்டா... இவனுக் கிட்ட சம்பளம் வாங்கிட்டுப் போவங் காட்டிலும் இருட்டிடும்.''

''கடையில் போனா களனித்தண்ணிதான் கெடைக்கும்.''

இவை சம்பளத்து வாசலில் கேட்கும் சில சம்பாஷணைகள். வயதுக்கேற்றாற் போல்.

டக்ட டக் கென்று பூட்ஸ் சப்தம் கேட்கிறது. பங்களாவிலிருந்து துரை படியிறங்கி வருகின்றார்.

அரைக்கால் சட்டை, அரைக்கை சட்டை. முழங்கால் வரை உயர்ந்து நிற்கும் காக்கிநிற மேல்சோடு; இத்தியாதி உத்தியோக உடையுடன் சம்பீரமாக இறங்கி வருகின்றார் துரை. பட்டாளத்து வீரன் போல்.

முழுக்கால் சட்டை முழுக்கைச் சட்டை 'டை' சகிதம் கிளம்பினார் என்றால் தோட்டத்தை விட்டு வெளியே போகின்றார் என்பதைக் கண்டு கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரை இறங்கி வருவது தெரிந்ததும் சளசளத்த பேச்சுக்கள் ஒரு கணம் தேய்ந்து அடங்கி மறுகணம் தொடங்கியது.

ஆபீசுக்குள் நுழைந்த துரை இரும்புப் பெட்டியைத் திறந்து ஒரு கோணிப்பையை இழுத்து மேசைமேல் வைக்கின்றார்.

தோட்டம் கொடுத்த கணக்குப்படி பேங்க் முத்திரையுடன் வந்த பணப்பை அது. முத்திரையை உடைத்துப் பணத்தை மேசை மேல் கொட்டுகின்றார் துரை.

ஐம்பது ரூபாய்; பத்து ரூபாய்; ஐந்து ரூபாய்; இரண்டு ரூபாய்; ஒரு ரூபாய்; என்று தனித்தனிக் கட்டுக்கள்.

ஐம்பது சதம்; இருபத்தைந்து சதம்; பத்து சதம்; ஐந்து சதம் என்று தனித்தனி சில்லறைப் பொட்டங்கள்.

நோட்டுக் கட்டுகளையும், சில்லறைப் பொட்டலங்களை யும் எண்ணி காசை சரிப் பார்த்துக் கொண்டு கிளார்க்கைப் பார்க்கின்றார் துரை.

இருபத்தாறாயிரம் ரூபாய் முழு மேசையையும் அடைத்துக் கொண்டிருக்கிறது. கட்டு; பொட்டலம் எல்லாம் அவிழ்த்தாகி விட்டது.

பஞ்சில் விரலை நனைத்துக் கொண்ட துரை ''எஸ் வில் ஸ்டார்ட்'' என்கின்றார்.

செக் ரோலைப் பிரித்து வைத்துக் கொண்ட கிளாக்கரய்யா ஜன்னலைத் திறக்கின்றார்.

ஜன்னலுக்கு வெளியே துரைக்கு முன்னால் தொந்தியும் தானுமாக நின்றுகொண்டிருக்கும் பெரிய கங்காணி ஜன்னல் திறபட்டதும் பெரிதாகக் குனிந்து வணக்கம் செலுத்துகின்றார்.

அவருடைய வணக்கத்தை ஏற்றுக்கொண்டதற்கடையாளமாய் ஒரு மென்னகை பூத்துவிட்டு ஓ.கே. என்ற துரை கிளார்க்கைப் பாக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தே பலாமரத்தடியில் கும்பலாய் நின்ற கூட்டம் ஜன்னல் அருகே வரிசையாக ஊர்கிறது.

சம்பளம் போடும் படலம் ஆரம்பமாகிவிட்டது.

கிளார்க் கூப்பிடும் பெயருள்ள ஆள் ஜன்னலருகே வந்து துரைக்கு சலாம் போட்டுவிட்டு சம்பளத்தை வாங்கிக் கொண்டு போவான்.

யாராவது ஒரு கையால் சம்பளம் வாங்குவதை பெரிய கங்காணி கண்டு விட்டால் ''டேய் ரெண்டு கை ரெண்டு கை'' என்று கத்துவார்.

'அருபத்தேழு நாற்பது' என்று அய்யா வாசிக்குமுன் ஒரு ஐம்பது ரூபாய், ஒரு பத்து ரூபாய், ஒரு ஐந்து ரூபாய், ஒரு இரண்டு ரூபாய் என்று தனித்தனி கட்டுகளிலிருந்து தாளை உருவி இழுத்து இடது கையில் வைத்துக்கொண்டு ஒரு இருபத்தைந்து சதம் ஒரு பத்து சதம், ஒரு ஐந்து சதம் என்று சில்லறையை கிள்ளி வந்த தாளின் மடியில் போட்டு ஜன்னலில் நீட்டிக் கொண்டிருப்பார் துரை.

அத்தனை வேகம் அத்தனை சுறுசுறுப்பு. காலம் கால மாய்க் காசெண்ணிக் கொடுத்தே பழகிவிட்ட ஒரு லாவகம்!

நீண்ட அவருடைய வெள்ளை விரல்கள் பணத்தாளுடன் நீவி நெளியும் அழகே அலாதி.

எண்ணி எண்ணிக் கொடுத்துக் கொண்டிருந்தால் இருபத் தாறாயிரத்தை எந்தக் காலம் கொடுத்து முடிப்பது.

துரை ஓராயிரம் ஆட்களுக்கு ஒரு மணி நேரத்தில் சம்பளம் போட்டு முடிப்பார். ஒரு சதம் பிசகாமல்.

அது ஒரு தனித்திறமை!

ஐயா வாசிக்கிறார். துரை எண்ணி நீட்டுகின்றார். ஆட்கள் வந்து வாங்கிக்கொண்டு போகின்றார்கள்.

இப்போது வாசிக்கப்பட்ட பெயர் சன்னாசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''டேய் சன்னாசி ஓடியா ஓடியா... ரெண்டு கை..'' இது பெரிய கங்காணி.

எட்டி நீண்ட சன்னாசியின் கைகளில் விழுந்தது துரை நீட்டிய சம்பளம். அதே வரிசையில் இருபது ஆள் தள்ளிப் பின்னால் வந்து கொண்டிருந்தாள் காத்தாயி.

''எண்ணிப் பாத்துக்கோ அப்புறம் வந்து கொறையுது கிறையுதுன்னு சொல்லப்புடாது'' என்று பெரிய கங்காணி அதட்டினார்.

சன்னாசி விரல் நீட்டி எண்ணிக் கொண்டு ஒதுங்கி நடந்தான்.

ஆபீஸ்படியேறியாகி விட்டது. பலா மரத்தையும் தாண்டியாகிவிட்டது.

ஜனக்கூட்டம் ஒரே திருவிழாக் கூட்டம் தான். பலூனை ஊதி நூலில் கட்டிப் பறக்கவிட்டபடி குறுக்கும் நெடுக்குமாக ஓடிக்கொண்டிருக்கின்றார்கள் சிறுவர்கள். அவர்களுக்குத்தான் மகிழ்ச்சி அதிகம். பங்களாவுக்கு முன் விளையாடக்கிடைத்த குஷி வேறு.

நாளைக்கு அவர்கள் இந்தப் பாதை வழியே நடக்கக் கூட முடியாதே!

''என்ன சன்னாசி கையிலே காசு இருக்கையிலேயே கடனைக் குடுத்துடேன்.''

பண்டாவின் குரல்தான்!

பதறிப்போனான் சன்னாசி. என்றாலும் சமாளித்துக் கொண்டான்.

''மாத்தித் தர்றேன்... சில்லறை இல்லை'' என்றவாறு நடந்தான்.

பண்டாவின் குருவிக் கண்கள் சிவந்து உப்பின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இத்தனை பெரிய கூட்டத்தில் இந்தப் பண்டாவால் தன்னை என்ன செய்ய முடியும்' என்று சன்னாசி எண்ணினான். ஆகவே இறுமாப்புடன் நடந்தான்.

காசைக் கொடுக்காதது கூட பண்டாவுக்கு அவ்வளவு கோபம் தரவில்லை. தன்னை அவன் சட்டை செய்யாமல் நடந்ததுதான் பெருத்த ஆத்திரத்தைக் கொடுத்தது.

ஏறி நின்ற ஆத்திரத்தில் எட்டி சன்னாசியைப் பிடித்தான்.

சன்னாசியின் பின் கழுத்து பண்டாவின் பிடியில் சிக்கியது. ஒரு கணம் திமிறிய சன்னாசி மறுகணம் திணறினான்.

''போலீசுலே யா சொல்லிக்குடுப்பே படவா! இப்பச் சொல்லு..!'' என்ற படி ஓர் உந்து உந்தி அவனை முன்னே தள்ளி கையில் இருந்த கருங்காலித் தடியால் 'மடார்' என்று அவன் மண்டையில் ஓங்கி அடித்தான் பண்டா.

''அம்மா'' என்று அலறியபடி தடுமாறிய சன்னாசி பாதையில் சாய்ந்தான். குபுகுபு வென்று இரத்தம் நெற்றியில் வழிந்தது.

அடிப்பட்ட இடத்தில் இரத்தத்தில் தோய்ந்த தலைமயிர் கசகசத்து நின்றது.

ஓடி வந்தவர்கள் அடிப்பட்டவனைத் தூக்கினார்கள். அடித்தவனைப் பற்றிய பேச்சே எழவில்லை. 'இன்று அவனிடம் ஹாய் ஹாய் என்று தாண்டி விட்டால் நாளை மாலை எப்படி அவனிடம் போய் குழைவது! குடிப்பது!

'மொதல்லே அப்பாதான் சம்பளம் வாங்கிக்கிட்டு வரும்' என்று மிட்டாய்க் கடைக்காரனிடம் தயாராக நின்ற சன்னாசியின் குழந்தைகள் திடுக்கிட்டன.

'ஐயோ அப்பா' என்று சத்தம் போட்டு அழுதவண்ணம் விழுந்து கிடந்தவனிடம் ஓடி வந்தன.

அவை வீறிட்டு அலறிய ஓசை காத்தாயியின் காதுகளில் கணீரென்று விழுந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பளம் வாங்க மூன்றாவது ஆளாக நின்று கொண்டிருந்த காத்தாயி பிள்ளைகளின் கூக்குரல் கேட்டுப் பதறித்துடித்துக் கொண்டு படியேறி ஓடினாள்.

சன்னாசியைச் சுற்றி நின்ற கூட்டம் அவன் முகத்துக்குத் தண்ணீர் தெளித்து மயக்கத்தைத் தெளிவித்துக் கொண்டிருந்தது.

கூட்டத்தைப் பிரித்துக் கொண்டு எட்டிப் பார்த்த காத்தாயி கல்லாய் நின்றாள்.

அவள் எதிர்பார்த்ததற்கு மேலாகவே நடந்திருக்கிறது.

'பிள்ளைகள் ஒன்றுடன் ஒன்று அடித்துக் கொள்ளுகின்றன' என்று தான் ஓடி வந்தாள். கணவன் கிடந்த கோலத்தைக் கண்டதும் கலங்கிப் போனாள்.

இரத்தமும் மயக்கம் தெளிய தெளித்த நீரும் ஒன்றாகிக் காட்சியை கோரமாக்கிக் காட்டின. இரத்தம் கலந்த நீரால் முகம் சிவப்பாய்க் கிடக்கிறது.

பார்த்த காத்தாயி பயந்தே போனாள். தாலிக் கயிற்றை கழுத்துக்குள் அமிழ்ந்து விடுமாப்போல் அழுத்திப் பிடித்துக் கொண்டு கத்தினாள்.

''யார் அடித்தவன்? எங்கே அவன்?''

அடித்தவனைத் தேடிய முதல் ஆளே அவள்தான்.

பண்டாதான்! பண்டாதான்! பண்டாதான்! பல குரல்கள் கேட்கின்றன.

பண்டா அங்கு இல்லாத துணிச்சலில் எல்லோரும் அவன் பெயரைக் கூறினர்.

கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு ஓடி வந்த காத்தாயி கதறிய படி விழுந்தாள் துரையின் காலடியில்.

திடுக்கிட்டு எழுந்தார் துரை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபீசுக்குள் யாரும் வரக்கூடாது என்பது சட்டம். அதை யும் மீறி உள்ளே வந்தவள் காலிலும் விழுந்து அழுகின்றாளே! அவளுடைய பெயரோ அவள் யார் என்பதோ அவருக்குத் தெரியாவிட்டாலும் தனது தோட்டத் தொழிலாளர்களில் ஒருத்தி என்பது மட்டும் தெரியும்.

'ஸ்டொப் பேயிங்' என்றவர் கங்காணியைப் பார்த்தார். காத்தாயியைப் பார்த்தார். கிளார்க்கைப் பார்த்தார்.

ஜன்னலை மூடிக் கொக்கியைப் போட்டார் கிளார்க்!

முன் வயிற்றில் சொருகியிருந்த வேட்டிமுனையை இழுத்து விட்டுக் கொண்டபடி துரை பக்கம் விரைந்தார் பெரிய கங்காணி!

கண்ணீரைத் துடைத்தபடி எழுந்து தலை குனிந்து நின் றாள் காத்தாயி!

பெரிய கங்காணி சகிதம் சன்னாசி அடிபட்டுக்கிடந்த இடத்துக்கு வந்தார் துரை.

''காய்கறிக வாங்குன காசு குடுக்கலேன்னு தான் சாமி அந்தப் பாவிப் பய எம்புருசனைக் கொன்னுட்டான்.''

காத்தாயி ஒப்பாரி வைத்தாள் துரையிடம்.

கள் அருந்திய கடன் என்பது அவளுக்கே தெரியும் என்றாலும் அது சிறுமையாயிற்றே என்பதை அந்த நேரத்திலும் மறக்கவில்லை அந்தப் பெண் மனம்.

சன்னாசியை உடனடியாக ஒரு காரில் ஏற்றி தோட்ட ஆஸ்பத்திரிக்கு அனுப்பி அங்கிருந்து அரசாங்க ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்தார் துரை.

அடித்தவனுடைய பெயர் விலாசம் அடிபட்ட விபரம் இத்தியாதிகளைப் போலீசுக்கு அறிவித்தார்.

துரையே நேரடியாகத் தலையிடவே சாட்சி சொல்ல எத்தனையோ பேர் முன் வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரையின் தலையீடு சன்னாசியைக் காத்தது.

அன்று ஓடிவிட்ட பண்டா இன்று கூண்டில் நிற்கின்றான்.

ஓடுவதால் ஒளிவதால் அநீதியிடம் சிறிது அடைக்கலம் பெறலாமே ஒழிய நீதியிடமிருந்து நிரந்தரமாகத் தப்ப முடியுமா?

காய்கறி விற்ற காசுதான் என்று பண்டாவும் ஒத்துக் கொண்டான். கள் விற்றேன் என்று எப்படிக் கூறுவான்.

பண்டாவை தோட்டத்திலோ தோட்டத்துப் பவுண்டரியிலோ காணக் கூடாது என்று துரை கூறி விட்டார்.

பண்டா குற்றவாளி என்று கோர்ட்டும் கூறி விட்டது.

சன்னாசியை ஆஸ்பத்திரியில் வைத்துக் கொண்டு காத்தாயி பட்டபாடு!

பதுளை ஆஸ்பத்திரிக்கும் தோட்டத்துக்குமாக நடந்து நடந்தே அரை மாதம் ஓடிவிட்டது.

ஒரு இருபது நாள் போல் வேலை செய்திருப்பாள். என்ன சம்பளம் இருக்கப் போகிறது!

லயம் தேடி வந்த கிரிவந்தைக்கு ஒன்பது ரூபாய் கொடுத்துத் தொலைத்தாள்.

சன்னாசி இடம் மாற்றிய பின் ஏற்பட்ட புதுக்கடன்.

'' ஏ காத்தாயி என்ன தேயிலைக்கு தேயிலை ரகசியமா பேசுறே? இன்னும் அங்கேயே நிக்கிறே?''

கங்காணியின் கத்தல் எங்கோ தனக்குள் இருந்துவரும் ஊளை போல் கேட்கிறது.

அவளுடன் நிரை பிடித்த மற்ற பெண்கள் எல்லாம் வெகு முன்னால் போய்க் கொண்டிருக்கின்றனர்.

காத்தாயியின் கைகள் வேகமாக இயங்கத் தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்பத்திரியிலிருந்து சன்னாசி வந்து ஒரு வாரமாகி விட்டது என்றாலும் எழுந்து நடக்கக் கொள்ள திராணி இல்லை.

எழுந்து நடக்க அவன் முயன்றாலும் உடல் ஒத்துழைக்க வில்லை.

அவனையா பிள்ளைகள் சட்டை செய்யப் போகின்றன. தாயிடம் தான் கொஞ்சம் பயம்.

இன்று சம்பளம் என்றால் சன்னாசி அடிபட்டு சரியாக ஒரு மாதம் ஆகிறது. அந்த நாளின் கோர நினைவுகள் அவனை நெருப்பாய்ச் சுட்டன.

நல்லவை நடந்த நாட்கள் மனத்தில் தோன்றி மகிழ்வூட்டு வதுபோல் அல்லவை நடந்த நாட்களும் மனத்தில் தோன்றி துன்புறுத்தத்தான் செய்கின்றன.

மகிழ்வோ துக்கமோ சுவடு இருக்கத்தான் செய்கிறது!

கங்காணியின் கத்தலால் போன மாத நினைவிலிருந்து மீண்ட காத்தாயி பெருமூச்சு விடுகிறாள். ஒட்டிக்கொண்ட நெருப்பாய் சுட்டுக்கொண்டே இருக்கிறது கடந்தகால நினைவு!

★★★

# 6

ஆடி மாதத்தின் முதல் வாரம்! லயத்தின் காம்பிராக்கள் போல் இருண்டே கிடக்கும் வானம் அபூர்வமாக வெளிச்ச மாய்க் கிடக்கிறது.

வானத்தில் மேகம் இல்லை என்றால் மண்ணிலே ஈரம் இல்லை என்பதல்ல! குன்றின் இணைவுகளிலே குதித்தோடும் நீர் என்றுமே குறைவது அல்ல! சொர்க்கத்தின் இன்பம் போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நாட்களில் தோட்டங்களில் அடிபடும் பெரும்பான்மையான பேச்சு கதிர்காமத்தைப் பற்றியதுதான்!

கந்தன் சந்நிதியில் துவங்கிய விழா முடிவுறும் மாதம் இது!

திருவிழாக் காலங்களில் மாணிக்கக் கங்கையின் கரையில் உள்ள இந்தச் சிறு கிராமத்தை பெரிய அளவில் நிறைப்பதே இவர்கள்தான்.

தாம் வேலை செய்யும் தோட்டத்தை விட்டு எங்காவது வெளியே இம் மக்கள் போகின்றார்கள் என்றால் ஒன்று இந்தியாவுக்கு -அது ஆதி நாட்களில் - மற்றது கதிர்காமத்திற்கு.

அரோஹரா கோஷம் அடிக்கடி கேட்கும் தோட்டத்துப் பாதைகளில். 'அரோஹரா' கோஷம் கேட்கிற தென்றால் ஒரு கூட்டம் கதிர்காமத்துக்குக் கிளம்பிவிட்டது என்று அர்த்தம்.

தோட்டத்துக்குத் தோட்டம் கூட்டமாய்க் கிளம்பிப் போவார்கள். கார் என்றும் பஸ்ஸென்றும் பிடித்துக் கொண்டு.

'அரோஹரா' என்னும் திவ்ய நாமம் அண்மையிலோ சேய்மையிலோ உள்ள சிங்களப் பையன்களின் செவிகளில் விழும் போதெல்லாம் அவர்களும் பதில் கோஷம் எழுப்புவ துண்டு. 'அறக்ஹெறாறா' என்றோ 'அரே ஹோறறா' என்றோ.

ஹெறாறா என்றால் சிங்கள மொழியில் கள்வன் என்று பொருள் 'அறக்' எனறால் மாடு.

இவர்கள் விரும்பியோ வேண்டுமென்றோ இப்படிச் சொல்வதில்லை. அந்தச் சொல்லைக் கேட்டதும் இந்தச் சொல் வாயில் வந்துவிடுகிறது! சப்த ஒற்றுமையால்.

இதுவும் ஒரு வித நோய்தான்.

நோய் என்றால் மருந்து அவசியம். குணமாக்கப்படாவிட்டால் கூடி விடலாம். புரையோடிப் போகலாம்!

அரோஹரா கோஷத்துடன் அமைதியாகக் கோவிலுக்குப் போகிறவர்களுக்கு அறக்ஹெறாரா' என்னும் எதிர்க்குரல் கேட்கத்தான் செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது அசாத்திய சகிப்புத் தன்மையால் அவற்றை சட்டை செய்வதில்லை.

'என்னடா சொன்னே?' என்று யாராவது ஒருவன் கேட்கத் தொடங்கினால் புண் புரையோடிப் போகலாம்! இருவரையும் நோண்டி விட்டுக் கொண்டிருக்கும் அரசியல் வாதிகள் பலன டையலாம்!

தோட்டமெங்கும் 'அரோஹரா' ஓசையும் கதிர்காமப் பேச்சுமாகவே அடிபடுகின்றது. சம்பளத்து வாசலில் சன்னாசி அடிபட்ட பேச்சையே காணவில்லை. அதன் மாப்பிள்ளைக் கோலம் கலைந்து விட்டது.

அவனும் அடிபட்டு மூன்று மாதம் ஆகிவிட்டதே! இன் னும் யார் அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கப் போகின்றார் கள். எதுவுமே நிரந்தரப் புதிதாக இருந்து விடக்கூடாது என்பது உலக நியதியாயிற்றே.

தோட்டத்துப் பாதைகளில் சன்னாசியின் நடமாட்டம் தெரிகிறது.

கடைகளில் கிழித்துத் தொங்கவிடப் பட்டிருக்கும் கருவா டுபோல் இருக்கின்றான். நார் நாராய் கணுக்காலில் இருந்து தலை வரை ஒரே பருமன். மூங்கில் குச்சியாட்டம்!

பண்டாவையே கூட்டி வந்து சன்னாசியின் எதிரில் விட்டு 'அடி' என்றால் கூட 'ச்சீச்சீ இவனையா' என்று போய் விடுவான்.

பகைவனே பார்த்துப் பரிதாபப் படும் அளவு கேவலமாய் இருக்கின்றான்.

அவன் ஊற்றிய கள்ளால் ஊறிய கெட்ட இரத்தம் அவன் கொடுத்ததால் அன்றே வடிந்து விட்டது.

வள்ளியுடன் முருகன் கதிர்காமத்தில் தங்கிவிட்டது போல் காத்தாயியுடன் சன்னாசி லயத்திலேயே தங்கிவிட்டான்.

அவன் நாட்டுக்கு நடந்து மாதம் மூன்று! அவன் நாவில் மது பட்டு நாட்கள் நூறு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் களிப்பில் அவள் கிளுகிளுவென்றிருக்கிறாள். குறிஞ்சிக் குமரி வள்ளிபோல்.

உள்ளம் ஒளிவிடும் போது உடலும் ஒளிவிடத்தான் செய்கிறது.

'என் புருஷன் இப்போது குடிப்பதில்லை' என்ற நினைவே இளைத்துவிட்ட அவளை செழிக்கச் செய்கிறது.

இரண்டு பேர் சம்பளம் வாங்கிய போது வெறும் திரியாய் இருந்தவள் தன் ஒருத்தி சம்பளத்தில் எண்ணெய் ஊற்றி ஏற்றிய தீபமாய் ஒளிர்கின்றாள்.

அதே குடும்பம்: அதை விடக் கூடிய செலவினங்கள்; கூடிய சுமைகள்; பொறுப்புக்கள் என்றாலும் அவள் மகிழ்ச்சியு டன் சமாளிக்கிறாள்.

சனிபோய் ஞாயிறு வந்தது! சன்னாசியின் லயத்திலும் 'அரோஹரா' சத்தம் கேட்கிறது.

அவனுடைய நண்டு சிண்டுகள் ஐந்தும் தலைகால் தெரி யாமல் ஆடுகின்றன. முதல் முதலாக வேறு இடம்; புதிய இடம் பார்க்கப் போகும் ஆர்வம் - ஆவல் அந்த பிஞ்சு முகங்களில் கூத்தாடுகின்றது.

அள்ளிப் போட்டான் கடையிலே தொங்கிய சட்டை; கால் சட்டை கவுன்கள் இவைகளின் உடம்பிலே தொங்குகின்றன.

அவர்களுக்கென்று அளவெடுத்து தைத்தால் தானே உடை களாய் கச்சிதமாய் இருக்கும்.

எண்ணெய் ஒழுகும் தலையில் கோணல் மாணலாக - வானத்தில் நெளியும் மின்னலென - வாகெடுத்துப் பின்னி முடியப்பட்ட விரல் நீளச் சடையும் கோடிச் சட்டையுமாக லயத்துக் கோடியில் பாதையோர சீத்தா மரத்தடியில் நிற்கின் றாள் சன்னாசியின் மூத்த மகள். கார் ஏறப் போகும் களிப்புடன்.

துவைத்த ஆனால் முழுமையான வெண்மை பெறாத ஒரு வெள்ளை வேட்டி - மேலே ஒரு சட்டை, சட்டைக்கு மேலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வெள்ளைப் போர்வை. சன்னாசியும் தயாராகி விட்டான். கந்தனைக் காண!

''என்ன காத்தாயி கெளம்பியாச்சா? எத்தனை நாளு லீவு?''

தன் வீட்டுப் படியேறிய காத்தாயியைக் கேட்கின்றார் பெரிய கங்காணி.

''ஆமாங்கப்பா. லீவு சம்பளம் எடுக்கலே ரெண்டு நாள் வேலை போனா போகட்டும்னு கெளபுனோம். நாளன்னிக்கு திரும்பிவிடுவோம். நாளன்னிக்கு மறு நாள்லேருந்து அது வேலைக்குப் போவுதாம்.. இப்ப நல்லா சொகமாயி டுச்சிங்க..''

''இனிமே ஒழுங்கா இருப்பானாமா?''

''நம்ம கதிரேசன் கோயில்லே நேத்து சத்தியம் பண்ணிக் குடுத்துச்சுங்க..ரெண்டு கையால வெளக்கு பத்த வச்சேன். இன்னிக்குக் கதிர்காமம் கூட்டிப் போறேன். கதிர்காமக் கந்தன் நல்ல புத்தி குடுப்பானுங்க.'' என்றவள் ''அம்மா கோயிலுக்கு நெய் தராமுன்னாங்க.. ஏதோ வேண்டுதலை இருக்காம்'' என்ற படி உள்ளே சென்றாள்.

பொன்னார் மேனியனுக்கு அன்று விழுந்த பாண்டியனில் அடி அனைத்து உயிர்க்கும் பட்டதாம். ஆனால் இன்று சன்னா சிக்கு விழுந்த பண்டாவின் அடி சன்னாசிக்கு மட்டுமே உறைத்திருக்கிறது!

மற்றவர்களுக்கும் பட்டால் அவர்களும் பாக்கியம் பெறு வார்கள்.

எளிமையான - சீர்கேடு இல்லாத அலங்காரங்களுடன் தலைமைக் கங்காணியின் மனைவி கொடுத்த நெய்ப் போத்தலு டன் அதோ நடக்கின்றாள் காத்தாயி.

தன் வாழ்விலும் சனி போய் ஞாயிறு வந்துவிட்ட மகிழ்வில்.

★★★

*(கலைமகள் ஏப்பிரல் 1966)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனம் வெளுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்க்கோடியில் வளைந்திறங்கும் வானம் தெரியாமல் மறைத்துக் கொண்டிருக்கிறதே ஓர் இராட்சஸப் பலாமரம், அதுதான் பங்களா மரம்.

தோட்டம் திறந்த போது துரைக்காகக் கட்டப்பட்ட பங்களா அல்ல இது. அது பெரிய துரையின் பங்களா. அதிலிருந்து கொண்டு முந்நூறாய் இருந்த ஏக்கரை இன்று மூவாயிரமாக மாற்றிய பெருமை, அந்தப் பழைய வெள்ளைக் காரனைச் சேரவேண்டியது.

இரண்டாவது உலகயுத்தத்தின் போது தோட்டமாவது ஒன்னாவது என்று பட்டாளத்துக்குப் போனவன் தான் இந்தத் தேயிலையைத் திரும்பிப் பார்க்கவேயில்லை!

இது சின்னதுரையின் பங்களா! அந்தப் பெரியதுரை பார்த்துக் கட்டியது. தோட்டம் பரவலாகக் கூடிக்கொண்டு போகப் போக தன் ஒருவனால் சமாளிக்க முடியாது என்று லண்டனிலுள்ள டைரக்டர்களுக்கு எழுதி எழுதி, இரண்டு சின்னதுரைமார்களை நியமித்துக் கொண்டார்.

அதில் ஒரு சின்னதுரைக்குக் கட்டிய பங்களாதான் இது. தளம் வெட்டும் போதே இருந்த இப்பலாக் கன்றை வெட்டுப் படாமல் பார்த்துக் கொள்ளுமாறு துரை பணித்தார்.

''பத்திரம் பலாக்கன்று'' என்று துரையே கூறிவிட்ட பிறகு, அதற்கு ஆபத்து வருமா?

வெட்டு மண் விழ விழ விறுவிறென்று வளர்ந்தது.

அப்படியே பார்க்கப்போனால், பங்களாவுக்கு முந்தியது பலாமரம்! ஆகவே 'பலாமரப் பங்களா' என்று பங்களாவுக்குத் தான் பெயர் ஆகியிருக்க வேண்டும்.

ஆனால் இங்கே எல்லாம் தலைகீழ் தானே! பிந்தி முளைத்த பங்களா, அது பங்களா என்ற காரணத்திற்காக முந்தி முளைத்த பலாவை முந்திக் கொண்டது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களா மரம் என்று சொல்லப்படுவதில் ஒரு பெருமை இருப்பதாக மரம் எண்ணிக் கொண்டதே ஒழிய 'என்னையிட்டல்லவா பங்களா பெருமைப்பட வேண்டும்' என்று சிந்தித்து மூளையைக் குழப்பிக் கொள்ளவில்லை. இந்த மண்ணின் மக்களைப் போல!

பங்களாவைச் சுற்றியுள்ள சுவரின் வெளிப்பக்கம் மட்டுமே தமிழையைக் கேட்டிருக்கிறது. உட்பக்கம் கேள்விப்பட்டதெல்லாம் ஆங்கிலம் தான். காதல் மொழி-சல்லாபம் - சண்டை சச்சரவு; முனகல்-மழலை-அத்தனையும் ஆங்கிலம் தான்! விநோத விநோதமான உருவங்களுடன் கூடிய அவர்களின் நாய்கள் குரைப்பதும் ஆங்கிலத்தில் தான்!

தோட்டங்களுக்கு எடுக்கப்படும் துரைமார்கள் இலங்கையர்களாகத்தான் இருக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் பிறகு கூட இலங்கை குடியுரிமை பெற்ற வெள்ளைக்காரர்களே வந்து போய்க் கொண்டிருந்ததால் பங்களாவின் உட்சுவர்கள் தமிழையோ சிங்களத்தையோ கேட்கும், வாய்ப்பை இழந்து கொண்டே இருந்தன.

இலங்கை குடியுரிமை பெற வேண்டும் என்ற எண்ணமோ பெற்றுத்தான் ஆக வேண்டும் என்ற ஒரு நிலையோ இல்லாத காரணத்தால், குடியுரிமை பெற்ற ஆங்கிலேயர் கிடைப்பது கடினமாகிவிடும் பட்சத்தில், யாராவது சிங்களவர்களோ அன்றித் தமிழர்களோ துரையாக பங்களாவுக்குள் நுழைவதுமுண்டு.

அப்படி எத்தனையோ ஈஸ்வரர்களும், சிதம்பரர்களும், பெர்னாண்டோக்களும், சில்வாக்களும் வந்து போயும் கூட, பங்களாவின் உட்புறச் சுவர்களுக்கு ஒரு மாற்றுப் பாஷையைக் கேட்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

இப்போதிருக்கும் சிங்களவருக்கு முன்பு ஒரு தமிழர் இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலாகச் சேலையும் ரவிக்கையும் பூவும் பொட்டு மாய் ஒரு 'துரைசானி' உள்ளே நுழையவும் பங்களா சுவர் கூட ஏதோ உடலைச் சிலிர்த்துக் கொண்டது.

வெளிப்பக்கச் சுவர்மட்டும் அடிக்கடி சொல்லிக் கொண்டே இருக்கிறதே' நான் கேட்பதுண்டு'- 'நான் கேட்ப துண்டு' என அந்தத் தமிழை நாமும் இனிக் கேட்போமே என்று.

ஒரு நாள் ஆயிற்று- இரண்டு நாளாயிற்று - ஒரு வாரமுமா யிற்று! ஒன்றும் கேட்டபாடில்லை. அதே பழைய பாஷை- ஆனால் முன்பு கேட்டதைப் போல் ஜீவனுடன் அல்ல, சவமாய்!

'அம்மா!' என்று ஒரு நாள் தமிழ்த்துரையின் மகன் கூறிவிட, பதறிப் போன துரை 'தத்தக்கா புத்தக்கா' என்று நடக்கக்கூட முடியாத அந்தச் சிசுவைக் கூட்டிக்கொண்டு நடைபயின்றார். பிள்ளை மடுவத்தைத் தாண்டுகையில், பால் குடித்துக் கொண்டிருந்த சிசுவைப் 'பரக்' என்று இழுத்துப் போட்டு விட்டு, இரவிக்கை விளிம்பில் அலுப்பினாத்தியைக் குத்தியபடி மலையை நோக்கி ஓடும் அந்தத் தாயைப் பார்த்து 'அம்மா' என்று அழுத குழந்தையைத் துரை தன்னுடைய சிசுவிற்குச் சுட்டிக் காட்டி

''You see it is their language. These labourers' language, you must say Mummy''

என்று அந்தப் பிள்ளைக்கு விளங்காவிட்டாலுங்கூட தன் னுடைய திருப்திக்காகக் கூறிக் கொண்ட சங்கதி எல்லாம் இந்தப் பங்களா சுவருக்குத் தெரியாது, தெரிந்திருந்தால் பங்க ளாவுக்குள் தமிழர் நுழைந்தாலும் தமிழ் நுழையாது என்ற முடிவிற்காவது வந்திருக்கும்.

இப்படி ஓரிரு கறுப்புத் துரைகள் தமிழ் பேசப் பயந்து விடும் காரணத்தால், ஈழத்தின் இருதயமான இந்த மலையகத் தில் தமிழ் இறந்துவிடாது, என்பது பங்களா வெளிச் சுவருக்குத் தெரிகிறது! அதுதான் அன்றாடம் தமிழைக் கேட்கிறதே!

இப்போதிருக்கும் துரை ஆங்கில மோகியல்ல - கண்டியர். ஆகவே மொழிப்பற்றும் இருக்கிறது. பங்களாவின் உட்புறம் சிங்கள மொழியைக் கேட்டுக் கொள்கிறது. தமிழைக் கேட்கும் பாக்கியம் இந்த ஜென்மத்தில் இல்லை!

சிங்களதுரை பங்களாவுக்குள் நுழைந்ததும், எத்தனையோ மாற்றங்கள் நடந்துவிட்டன.

ஆபீஸில் உள்ள கிளாக்கரையாவும், அப்பையாவும் அடிக்கடி கூடிப் பேசிக்கொள்வது இந்த மாற்றங்களைத்தான்.

பலாமரத்தை ஒட்டினாற் போல் இருக்கும் ஆறேழு சிமெந்துப்படி இறங்கியதும் இங்கிருந்து பார்ப்பதற்கு துளசி மாடத்திற்கு கூரை போட்டாற்போலத் தெரிகிறதே ஒரு சதுரமான கட்டிடம், அதுதான் ஆபீஸ். அதற்குப் பெயர் சின்னாபீஸ்!

பெரியாபீஸ் பெரியதுரை பங்களாவிடம் இருக்கிறது. அதில் ஏழெட்டுப் பத்து கிளார்க்மார் வேலை செய்கின்றனர்.

இது சின்னாபீஸ். பெயருக்கேற்ப சிறிதாகவே இருக்கிறது. ஒரு கதவு-ஒரு இரும்புப் பெட்டி-ஒரு அலுமாரி-ஒரே நேரத்தைக் காட்டிக் கொண்டிருக்கும் ஒரு சுவர்க்கடிகாரம். ஒரேயொரு டெலிபோன். இத்தனைக்கும் மேலாக ஒரேயொரு கிளார்க்!

ஒற்றைப் படையை விட்டு இரட்டைக்கு வந்தால், இரண்டு மேசை, இரண்டு நாற்காலி, இரண்டு ஜன்னல் இவற்றில் பெரிய மேசையும் பெரிய நாற்காலியும்-பெரிய ஜன்னலும் துரைக்கு. சின்னமேசை சின்ன நாற்காலி சின்ன ஜன்னல் கிளார்க்கரையாவுக்கு.

ஜிலு ஜிலுவென்ற மரநிழலில் இலேசாக இருண்டு கிடக்கும் அந்த இதமான சூழலில் இடுப்பு மட்டத்திற்கும் சற்றுத் தாழ்வான துரையின் ஜன்னல் விளிம்பில் உட்கார்ந்து கண்ணாடி ஜன்னலின் சுகமாகச் சாய்ந்தபடி கையில் இருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருட்டைப் பற்றவைக்க வழியில்லாத ஏக்கத்துடன் உட்கார்ந்தி ருக்கின்றதே - அவர்தான் கிளாக்கரையா. உட்கார்ந்த இடத்திலி ருந்து எழுந்திருக்கவே கணக்குப் பார்ப்பார்! அவருடைய உடல்வாகு அப்படி!

இருள் விலகாத இளங்காலை நேரத்தில் பங்களா மரத்தடி யில் வந்து நிற்கும் காரிலிருந்து சிரமத்துடன் இறங்கி நின்று 'பூஸ்''பூஸ்' என்று வாயால் பெருமூச்சு விட்டபடி பங்களா குசினியைப் பார்த்து ஒரு கத்தல் போடுவார்! ''அய்யையா அய்யய்யோவ்''.. என்று.

பலாமர நுனியில் இருந்து கீச் கீச்சென்று கத்திக் கொண்டு சர்ரென அம்பு போல் பாய்ந்து பொத், பொத்தென்று பாதை யில் குதித்து அந்த ஒரு ஜோடி அணிலும் ஓடுவது, ஐயாரோட் டில் நின்று பங்களா வேலைக்காரனுக்குப் போட்ட சத்தத்தால் தான்.

பாதைக்கும் ஆபிஸிற்கும் இடையிலுள்ள அந்த ஆறே ஆறு படிகளை எண்ணி அடிவைத்து இறங்கிக் கதவிடம் நின்று மூச்சுவிட்டுக் கொள்ளுவதற்குள் பங்களா, வேலைக்காரப் பையன் ஆபீஸ் சாவியைக் கொண்டுவந்து நீட்டுவான்.

காரைவிட்டு இறங்கியதும் போட்ட கத்தல் இதற்காகத் தான்.

ஐயா கதவைத் திறந்து விட்டு, கதவு ஓடி வந்து மூடிக் கொள்ளாதிருக்க நேற்று அந்தி நேரம் கதவைப் பூட்டும்போது காலால் உள்ளே தள்ளிவிட்ட அந்தக் கருங்கல்லை காலால் எட்டி இழுத்து, கதவடியில் வைத்து முடிப்பதற்குள் 'டக்டக்' என்று பூட்ஸ், ஒலி எழுப்ப, துரை இறங்கி வந்து அவருடைய மேசையிடம் அமர்ந்து கொள்வார்.

ஆபீஸைத் திறந்து, தனது மேசையருகில் அமர்ந்து, தன் னைக் கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்குள் துரையும் நுழைந்து விட்ட ஆத்திரம் முகத்தில் பொங்கினாலும் முதலாவ தாக உதடு முணுமுணுப்பது 'Good Morning, Sir' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளைத்தான். அடுத்ததாக துரைக்கு கேட்காமல் முணு முணுப்பது 'எப்படா கதவைத் திறப்பான்னு கெடப்பான் போலிருக்கு! இந்தக் கூதல்ல, இன்னும் கொஞ்ச நேரம் படுத்துக்கெடந்தா என்னவாம்' என்பது.

அதிலும் ஓரளவு உண்மை இருக்கத்தான் இருக்கிறது. ஐயாவுக்கு முன்பாக, தான் வந்து ஆபீஸ் கதவைத் திறப்பது, தனக்கு மதிப்பில்லாத ஒன்றாயிற்றே என்பதற்காகத் தான் துரை ஆபீசைத் திறப்பதில்லை.

காக்கிநிற மேல்ஜோடை முழங்கால் வரை இழுத்து விட்டுக்கொண்டு, கட்டைக் கால் சட்டையும் தானுமாக, துரை ஹாலில் உட்கார்ந்திருப்பார். கிளார்க்கரையா பங்களா வேலைக்காரனுக்குச் சத்தம் போடும் குரல் கேட்ட ஐந்து நிமிஷத்தில் இறங்கி வந்தார் என்றால் ஐயா காலால் கல்லை இழுத்துக் கதவடியில் வைத்துக்கொண்டிருப்பார்.

துரையும் வந்து உட்கார்ந்து விடுவதால் காலை நேரங்களில் ஐயாவுக்கு ஒரு நிமிடம் அரை நிமிடம் ஓய்வும் இருப்பது இல்லை.

பெரட்டு புத்தகம்;பெரிய துரைக்குப் போடும் கடிதங்கள்; பெரிய ஆபீஸிற்குப் போகவேண்டிய செக்றோல்களக ஆகியவற்றைச் சரிபார்த்து தபால் பையன் கையில் ஒப்படைத்து விட்டால், அதிகாலை அவசர வேலைகள் முடிந்தது போலத் தான்.

இவை தாமதித்துப் போனால் தான் இவற்றிற்காகக் காத்துக் கொண்டிருக்கும் பெரியதுரை தாண்டுவார்.

தபால் பையனை அனுப்பிய கையோடு அப்போதைக்குத் தேவையில்லாதவை என்றாலும் ஏதாவது ஒன்றை எடுத்து வைத்து எழுதிக் கொண்டிருப்பார்.

துரை உட்கார்ந்திருக்கிறாரே சும்மா உட்கார்ந்திருக் கலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய வேலைகளை முடித்துக் கொண்டு தான் எங்கே எந்த மலைக்குப் போகின்றேன் என்ற விவரங்களை ஐயாவிடம் கூறிவிட்டு, துரை எழுந்து போக எட்டரை மணி ஆகிவிடும்.

துரை எழுந்து போனதும் நாற்காலியில் நன்றாகச் சரிந்து உட்கார்ந்துக் கொண்டு மேசைக்கடியில் கிடக்கும் பலகைப் பெட்டியின் மேல் வசதியாகக் காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பார்.

பங்களாவிற்குப் போன சின்னதுரை காலைச் சாப் பாட்டை முடித்துக் கொண்டு கராஜிலிருந்து மோட்டார் சைக் கிளை எடுக்க ஒன்பதாகிவிடும்.

'படபட'வென்று மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டதும் தான் ஐயா ஆசனத்தை விட்டு எழுவார். உடலை நெளித்து, கைகளை மேலுயர்த்தி 'படபட'வென்று சோம்பல் முறித்துக் கொண்டு ஐயா வெளியில் வருகையில், அவருடைய வேலைக் காரப் பையன் அவருடைய காலைச் சாப்பாட்டைக் கொண்டு வருவான்.

தான் சாப்பிட்டு முடித்துக் கொடுக்கும் வரை அவன் ஏன் வெறுமனே நேரத்தைப் போக்க வேண்டும்; வீட்டிற்குப் போனால் ஏதாவது வேலை செய்யலாமே என்ற எண்ணத்தில் ''உம்ப பளயாங்,மேக்க மங் எவன்னங்'' என்று அவனை அனுப்பி விட்டு ஆபீஸ் விறாந்தையில் சிறிது நேரம் நடந்து விட்டு, காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு, சுருட்டும் கையுமாக வந்து ஜன்னலில் உட்கார்ந்தவர்தான். நெருப்புப் பெட்டி எடுத்து வரவில்லையே என்று யோசித்தபடி, உட்கார்ந் திருந்தார்! எழுந்து போய் எடுக்கவும் மனம் இல்லை.

இடியப்பமும் தேங்காய்ப்பால் சொதியும், ஆனை வாழைப்பழம் ஒன்றும், அதற்கு மேல் ஊற்றி வைத்த ஆறிப் போன பால் தேநீரும், வாயில் ஏதோ செய்ய 'ப்ச்,ப்ச்' என்று சப்புக் கொட்டிக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப் கப்பென்று சுருட்டுப் புகை வாயில் நிறைந்து பல்லி டுக்குகளில் நுழைந்து, வாயிலும் மூக்கிலுமாக மண்டி வெளி யேறினால் தான் தேநீர் குடித்த ஈரவாய்க்கு இதமாக இருக்கும். பழகிவிட்ட வாய் அதற்காக ஏங்கவும் செய்கிறது. இருந்தாலும் என்ன செய்ய? எழுந்திருக்க வேண்டுமே!

கன்னம் இரண்டும் குழிவிழ வெறுஞ் சுருட்டை ஒரு முறை இழுத்துப் பார்க்கின்றார்.

'தபால் பையன் வரவேண்டிய நேரமாயிற்றே' என்கிறது மனம். போத்தலுடன் போத்தல் மோதும் சினுங்கல் சப்தம் படிக்கட்டில் கேட்கிறது. ''ஹோய் சுருக்கனுவா''.

''இதோ வந்துட்டேங்க'' என்றபடி தபால் பையன் தலை யில் மாட்டியிருந்த சாக்குப் பையைப் போத்தல்கள் மோதி உடைந்து விடாமல் மிக இலாவகமாக கழற்றி, சுவருடன் சாய்த்து வைத்து விட்டு பெரியாபீஸிலிருந்து கொண்டு வந்த கடிதங்கள்-புஸ்தகங்களை அவரிடம் நீட்டுகின்றான்.

''மேசையிலே வை-பெறகு பார்க்கிறேன் நெருப்புக் குச்சி கெடக்கான்னு பாரு'' என்றபடி ஜன்னல் விளிம்பிலிருந்து சரிந்து தரையில் உட்கார்ந்து கால்களை நீட்டிச் சுவரில் சாய்ந்து கொள்கின்றார்.

ஜன்னலுக்குப் பக்கத்தில் சுவர், நிறம் மங்கிப் போயிருப் பது தன்னால் தான் என்பது அவருடைய சட்டைக்கும், அவருடைய சட்டையின் முதுகின் மேல்புறம் - தோள்ப்பட் டையிடம் நைந்து போயிருப்பது தன்னால் தான் என்பது சுவருக்கும் பரஸ்பரம் தெரியும்.

''ஒரு குச்சி தாங்கையா இருக்கு'' என்றபடி வெற்றுப் பெட்டியையும் ஒரு குச்சியையும் நீட்டிய பையன் பழைய பேப்பரில் கிழித்த ஒரு துண்டையும் கொடுக்கிறான்.

''அது போதும் கொண்டா - ஊரையே கொளுத்திடலாம்'' என்றபடி பேப்பரை முதலில் வாங்கி ஓரத்தை நீளமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழித்து சுருட்டின் ஓரத்தில் 'பில்டர் முனை' போல் சுற்றி வாயில் வைத்துக் கடித்துக் கொண்டு நெருப்புக் குச்சியைக் கிழித்தார்.

சீற்றத்துடன் எரிந்த தீயை தான் கொண்டு வந்த பேப்பரில் வாங்கி, திகு திகுவென்று எரியும் கடதாசியை ஐயாவிடம் கொடுக்கிறான் பையன்.

கொழுந்து விட்டெரியும் தீயில் சுருட்டைக் கையிலெடுத்துப் பார்த்துப் பார்த்துப் பற்ற வைத்துக் கொண்டு குப் குப்பென்று புகை விட்டபடி எரியும் கடதாசி கையைச் சுட்டதும் தூர எறிந்து விட்டுச் சுகமாகச் சாய்ந்து கொள்கிறார்.

மேசை இத்தியாதிகளைத் துடைத்து ஆபீசைக் கூட்டி முடித்த பையன் துரையின் சாம்பல் தட்டுடன் வெளியே வந்து, அதில் இருந்த சிகரெட் துண்டுகளைத் தண்ணீருடன் சேர்த்துக் கொட்டிவிட்டு, வேறு தண்ணீர் ஊற்ற வரும்போது ''பெரிய துரை ஆபீஸிலியா'' என்று கேட்டுக் கொள்கிறார்.

''டை எல்லாம் கட்டிக்கிட்டு துரைசானி அம்மாவோட கார்லெ போயிட்டாரு'' என்றதும் தோட்டத்தை விட்டு வெளியே போய்விட்டார் என்று திருப்திப்பட்டுக் கொள்கிறார்.

டெலிபோன் அடிக்கிறது. 'த்ச்' என்று முனகிக் கொண்டாலும் எழுந்திருக்க வேண்டும் என்ற எண்ணமோ முயற்சியோ இல்லை.

''பொடியேன் டெலிபோனை எடுத்து ஐயா வெளியே ஒண்ணுக்கு போயிருக்கார்னு சொல்லிவிடு - இன்னும் ஒரு நாலு மாசத்திலே மலைக்குப் போயிட்டீனா எங்கே டெலிபோன் பேசக் கிடைக்கும் ஒனக்கு-''

''ஐயா வெளியே போயிருக்காருங்க'' என்று கூறிவிட்டுப் பையன் டெலிபோனை வைத்து விடுகிறான்.

இந்த நேரத்தில் டெலிபோன் பெரியாபீசைத் தவிர்த்து வேறு எங்கிருந்தும் வர முடியாது என்பதும் பெரியாபீசில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய துரை இல்லை என்பதும் அவருக்குத் தெரியும். ஆகவேதான் அவ்வளவு அசட்டை.

இருப்பினும், எழுந்து சென்று டெலிபோனை எடுக்க முடியாத தனது சோம்பேறித் தனத்தை ''நீயும் டெலிபோனில் பேசிப் பாரேன் ஒரு முறை'' என்று பையனுக்கும் அவகாசம் கொடுப்பதாகக் காட்டிக் கொள்வதன்மூலம் மறைத்துக் கொள் ளும் சாதுரியம் இருக்கிறதே - அது ஐயா ஒருவருக்கே கை வந்தது.

தனது சில்லறை வேலைகளை முடித்துக் கொண்டு வெளியே வந்த பையன் பலா மரத்துக் கிளையினூடாக வெயிலிறங்கும் இடத்தில் சற்று நிற்கிறான்.

அழகாகக் கீழிறங்கும் அந்த அதிகாலை சூரிய ஒளி பையனுக்குத் தெம்பாக இருக்கிறது.

காக்கி நிறத்தில் அரைக்கால் சட்டையும், மடித்து விடப் பட்ட கைகளுடன், கால் சட்டைக்குள் திணித்து விடப்பட்ட வெள்ளை சட்டையுமாகப் பள்ளிக்கூடப் பையன் போலிருக்கி றான் - தபால் பொடியன்.

காலையிலும் மாலையிலுமாக நாளுக்கு இரண்டு தடவை பெரியாபீஸிற்கும், சின்னாபீசிற்குமாக நடப்பதே இவனு டைய வேலை.

பெரிய பெரிய பெண்கள் கூடப் பெயர் பதிந்து வேலை செய்ய வாய்ப்பில்லாத நேரத்தில் இந்தச் சிறிய பையனை எப்படிப் பெயர் பதிந்தார்கள் என்பது ஆச்சரியமாகத் தான் இருக்கிறது.

அறுபத்தைந்து ரூபாய் போலக் கிடைக்கிறது; போனால் போகட்டும் பாவம் என்று நாம் திருப்தி அடைந்து கொண்டா லும், முதல் மாதத்து அறுபத்தைந்தும் மூடிய என்விலப் பிற்குள்ளாக ஐயாவின் அம்மாவிடம் போனதையும் நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா செய்த உதவிக்கு அது ஒரு சந்தோஷம்! துரையிடம் பேசிக்கீசி பெயர் பதிந்தது மட்டுந்தானா? இதோ இந்த 'லேஸ் வேலை - தபால் வேலை - எடுத்துக் கொடுத்திருக்கின்றாரே அதுகூட உதவிதானே!

அடைமழை நாட்களில் மிகவும் நாசூக்காக, குடையும் தானுமாக நடந்து விட்டு, பெயர் போட்டுக் கொள்கின்றானே, அப்போதுதான் தெரியும் இந்தத் தபால் வேலையின் கவர்ச்சி.

'ஐயா மனசு கோணாமல் நடந்து கொள்ள வேண்டும்' என்பது பையனுக்கு அவனுடைய அப்பா இட்டுள்ள கட்டளை.

தன்னைத் தவிர வேறு யாரும் சும்மா நிற்பதைக் காண ஐயாவுக்கு தாளாது. குளிர் காயந்து கொண்டு நின்ற பையனைப் பார்த்துக் கேட்கின்றார் ''இந்தா பொடியான் பால் போத்தல் லாம் பங்களாவுல குடுத்திட்டியா?'' என்று.

கொடுத்திருப்பான் என்பது அவருக்கே தெரியும் என்றாலும், அவன் சும்மா நிற்பதைக் சுட்டிக்காட்டவே அப்படிக் கேட்கின்றார். ''குடுத்திட்டேங்கயா''.

''அப்பையா கிட்டப் போயி நான் கேட்டேன்னு நேத்திய பேப்பர் கொஞ்சம் கேட்டுக்கினுவா. கொண்டாந்து குடுத்திட்டு சாப்பாட்டுப் பையை எடுத்துக்கிட்டுப் போயி அம்மா கிட்ட கொடு.''

''அப்பையா பேப்பர் தரமாட்டாருங்கையா''.

''ஏனாம்..?''

அந்த நேரத்தில் பங்களா 'குக் அப்பு' ஆபீஸ் படிகளில் இறங்கி வருகின்றார். ''நீ என்னப்பா நம்பளையும் ஐயாவையும் மாட்டி விடுறே'' என்று பையனிடம் கூறிவிட்டு ஐயாபக்கம் திரும்பி 'சலாங்கையா'' என்கின்றனர்.

''சலாங்க அப்பையா'' என்று கூறும்போது அப்பையா என்பதில் கிளாக்கரையா கொடுக்கும் அழுத்தம் 'குத்தல்' என்பது - அப்பையாவுக்குத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவே ''என்ன அப்பையாங்க! அதெல்லாம் அந்த வெள்ளைத் தோல் மவராசனுகளோட போயிடிச்சிங்க.''

''இப்ப''

''இப்ப வெறும் 'போய்' தாங்க -சுத்தம் கேக்குதங்களா 'நங்கு நங்குன்னு' குசினியிலே மாவிடிக்கிறாங்க. நோனா வூட்டு அம்மாவும் தங்கச்சியும்.''

''தங்கச்சியும் வந்திருக்கா - நான் பார்க்கலியே''

இளம் பெண்கள் என்றதுமே ஐயாவுக்கு ஒரு குறுகுறுப்பு வந்துவிடும். சற்று நிமிர்ந்து உட்கார்ந்து நோனாவின் தங்கையைப் பற்றி நுணுக்கமாக விசாரிக்கின்றார்.

கொழும்பில் படிக்கும் பெண். விடுமுறைக்கு தமக்கை வீட்டுக்கு வந்தால் - கொஞ்சம் கூட சும்மா இருக்காது. துரு துருவென்று சுற்றி வரும்.

புது இடங்கள், புதுப்புது மனிதர்கள் என்றதும் அந்த வயதில் அந்தச் சூழ்நிலையில் வளரும் பெண்களுக்கு ஒரு குஷி வந்து விடுகின்றது.

போன தடவை வந்திருந்த போது, இப்படித்தான் ஐயா படுத்துக்கிடந்தார். அவர் சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் 'மினி' கவுனும் தானுமாக இறங்கி வந்து நின்ற பெண்ணைப் பார்த்ததும் அவர் பயந்து 'தடாபுடா' வென்று எழுந்தத்தைப் பார்த்து 'களுக்' என்று சிரித்து விட்டு ஏறி ஓடிவிட்டாள்.

ஐயாவும் பயந்து விட்டார். துரைசானியின் தங்கையாயிற்றே!

கோள் சொல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன் இல்லையென்றாலும் விளையாட்டுக்காவது 'கிளாக்கரையா தரையில் படுத்துக் கிடந்தார்' என்று துரையிடம் கூறி விட்டால்!

எழுந்து நின்றவர் அந்தப் பெண் படிகளில் ஏறிப் போவதையே பார்த்துக் கொண்டிருந்தார். படியேறக் காலுயரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதெல்லாம் கவுனும் உயர்ந்து இறங்கும் காட்சி, அவருக்கு உற்சாகமாக இருந்தது.

இதே வயதில் அவருக்கு ஒரு மகள் இருக்கிறாள் என்பதெல்லாம் வேறு கதை!

உள்ளே போய் உட்கார்ந்தவர் எதேச்சையாக ஜன்னல் பக்கம் பார்த்தார்.

ஜன்னலுக்கும் நேராக உள்ள மாமரத்தில், மிகவும் தாழ்வான கிளையொன்றில் ஏறி அமர்ந்து கொண்டு எதையோ பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் அந்தப் பெண். அதே கட்டைக் கவுண்!

நல்ல காலம் ஐயாவின் விழிகள் வெளியே வந்து விழுந்து விடவில்லை.

எழுந்து போய்த் தீப்பெட்டியை எடுத்துச் சுருட்டைப் பற்றவைத்துக் கொள்ள முடியாத இன்றைய இலட்சணத்தில் கூட இப்படி ஒரு சபலம்!

மனித மனம் விசித்திரமானது!

மரத்துக்கு மேல் நோனாவின் தங்கை உட்கார்ந்திருந்ததையும், அதைத் தான் பார்த்ததையும் அப்பையாவுக்கு எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறார் என்றாலும் இப்போதும் ஒரு தடவை - சொல்லிக் கொள்கின்றார். அதில் ஒரு உருசி!

''சின்ன நோனா இன்னம் மரம் ஏறத் தொடங்கலையோ?''

''இல்லைங்க இப்பத்தானே பழகுது'' இருவரும் தத்தமது சிலேடையை இரசித்துக் கொள்ளுகின்றனர்.

''தொரை வீட்டாளுங்களா மாவிடிக்குது?''

''அதான் சொன்னேனுங்களே, இது பங்களாவா? அந்த மவராசனுங்க இருந்த நாள்ல பொம்பிளை மூச்சு பட்டிருக்குமா இந்தக் குசினியிலே. சிலேட்டுதான் போகும் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு என்ன ஆக்கணும் துரைக்கு என்ன ஆக்கணும்னு அம்மா சிலேட்டுல எழுதி அனுப்பிறுவாங்க. அதன்படிக்கு நான் தயார் பண்ணிறுவேன். எப்பவாச்சும் மாசத்துல ஒரு நாளு தொரை சானி வரும் குசினி பக்கம். இப்ப என்னடான்னா முழுப் பங்களாவுமே குசினிலேதான். மாவு இடிக்கிறதும், கொச்சிக் காய் அரைக்கிறதும் தேங்காய் திருவுறதுமா - ஒரே லயமாட்டம் - பங்களாங்கிற மதிப்பே போச்சுங்க.''

''சரி அப்பையா, பேப்பர் கொஞ்சம் கொடுத்து விடுங்க.''

''அதைத் தானுங்களே சொல்ல வந்தேன். கேலண்டரைப் பார்த்துவிட்டு அம்மா பேப்பர் எண்ணுறாங்க. முப்பது நாளுன்னா முப்பது பேப்பர் இருக்கணுமாம். றாத்தல் கணக் குல விக்கிறாங்கங்க! அதை ஏன் கேக்குறீங்க. போன மாசம் ரெண்டு மூணு பேப்பர் ஆபீஸ்லே கெடந்து போச்சு. நானும் சமாளிக்க முடியாம சொல்லிப்புட்டேன். ''இனிக் குடுக்கா தேன்னு'' ட்டாங்க! இந்தப் பிலா மரத்தைப் பாருங்க. ஒரு காய் கெடக்குதான்னு! சின்ன நோனாவைக் கூட்டி வந்த கார்ல பிச்சிப் போட்டுக் கிட்டுப் போயிட்டாங்க.''

''சரி சரி நமக்கென்ன! இவங்களுக்கு மட்டுந்தானா பேப் பர் இறிக்கி மேசையில ரெண்டு பேப்பர் கெடக்கு. எடுத்துக் கிட்டு போங்க. பேப்பரும் வாணாம் ஒன்னும் வாணாம்'' என்று அலுத்துக் கொண்டார்.

'அவங்க கெடக்கட்டுங்க - நான் அனுப்புறேன். நீங்க பாத்துட்டு அனுப்பிறுங்க.'' என்றபடி அப்பையா மேலே நடந்தார்.

காகிதம் சுற்றப்பட்டுள்ள இடத்துக்குச் சுருட்டு வந்து விட்டது.

ஒன்பது மணிக் கொழுந்தை ஏற்றிக் கொண்டு அதோ போகிறது லொறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருட்டை வீசிவிட்டு எச்சிலை எட்டித் துப்புகின்றார். ஆபீஸ் படிகளில் ஆளரவம் கேட்கின்றது. திரும்பிப் பார்க்கின் றார்.

கறுத்த உடலில், கரு கருவென்று மண்டிக் கிடக்கும் உரோமத்திடையே ஊர்ந்திறங்கும் வியர்வையுடன் கத்தியை யும், தலைத்துணியையும் கமுக்கட்டில் இடுக்கிக் கொண்டு நின்றவன் தூர நின்றபடியே 'சலாங்கையா'' என்கின்றான்.

ஐயா மறுபுறம் திரும்பிக் கொண்டார்.

இது ஆபீசிற்குப் பேச வரும் நேரம் இல்லை என்பதும், இந்த நேரத்தில் அவன் மலையில் தான் நிற்க வேண்டுமே ஒழிய இங்கல்ல என்பதும் அவருக்குத் தெரியும். அவன் பக்கம் திரும்பாமலேயே ''என்ன சங்கதி'' என்றார்.

'பேங்கு காசு'' மிகவும் பணிவாகக் கேட்டான்.

''உனக்குத்தான் பேங்கு கிடையாதே முறிச்சுட்டேயில் லையா?''

''எனக்கில்லேங்க. எஞ் சம்சாரத்துட்டுங்க..''

''அப்ப அதை வரச் சொல்லு.''

''நேத்து வரச் சொன்னேனுங்க.''

''குடுத்தேனா?''

''அய்யா இல்லேனூட்டீங்களாம்.''

''இருந்தாத்தானே குடுப்பேன்! முப்பது ரூபாய்க்குக் கொறைஞ்சா குடுக்க மாட்டேன்னு தெரியும்லே.''

''ஆமாங்க.''

''எல்லாத்தையும் குடுத்து கணக்கை மூடிறவா?''

''ஐயையோ வேண்டாங்க - ஏவூட்டையும் மூடிட்டேன்.''

''பின்னே போ.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒரு அவசரமா வேணுங்க. புள்ளைக்கு பாக்கு மாத்து றேன்.''

'' நீ பாக்கை மாத்துனாலும் சரி வெத்திலையை மாத்தினா லும் சரி இருந்தாத்தானே கொடுக்கிறதுக்கு.''

''ஒரு வருஷமா நானு அங்குக் காசே எடுக்கலீங்களே.''

''திரும்பத் திரும்ப அதையே சொல்றியே.

உனக்குத்தான் கணக்குக் கெடையாதே''

''அவளையும் நான் அனுப்பலீங்களே.''

''சரி சரிஅந்தப் பக்கமா வா.''

ஐயா மெதுவாக எழுந்து ஆபீசுக்குள்ளே போய் அமர்ந்து மணியைப் பார்க்கின்றார். அவர் கையிலிருக்கும் மணி பத்து. சுவரில் இருக்கும் மணி மூன்று.

ஐயாவின் ஜன்னலுக்கு வெளியே அவன் நின்றகின்றான். ஜன்னலூடாக மாமரத்தையும் ஒரு நோட்டம் விட்டபடி ஜன்ன லைத் திறந்து வங்கிப் புத்தகத்தை - அவனிடம் காட்டுகின்றார்.

''இந்தா பாரு நாலாம் மாசத்துல முப்பது ரூபாய் வாங்கியி ருக்கு - செவப்பு மையிலே எழுதி இருக்கேனே தெரியுதா.''

''நானு அனுப்பலீங்களே.''

''நீ அனுப்பாட்டி உன் பொம்பளைக்கு ஆபீசுக்கு பாதையே தெரியாதோ. அது பேர்ல கணக்கு இருக்கையிலே வந்து கேட்டால் நான் கொடுக்க வேண்டியது தானே - நான் அனுப்பலே அனுப்பலேன்னு சொல்றியே.''

என்றபடி டப்பென்று புத்தகத்தை மூடுகின்றார். ''ஒரு மாசத்துக்கு எவ்வளவு போடுறே''.

''ரெண்டு ரூபாய்ங்க.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு வருஷமா ஆபீசுக்கே அனுப்பலேன்னு தானே சொன்னே - ஒரு வருஷத்துக்கு எத்தனை ரூபாய் விழுந்திருக் கும்?"

"இருபத்தி நாலு ரூபாய்ங்க."

"ஏற்கெனவே ஒரு முப்பது ரூபாய் இருந்திச்சு. எல்லாம் அறுபத்தி நாலு ரூபா. அதுல முப்பது ரூபா எடுத்துட்டா?"

"முப்பது ரூபா எடுத்தது எனக்குத் தெரியாதுங்களே."

"பொம்பிளை எடுக்கிறது புருஷனுக்குத் தெரியாது. புரு ஷன் எடுக்கிறது பொம்பளைக்குத் தெரியாது. அப்புறம் இங்கே வாறது கணக்கு கேட்க."

"அப்ப நான் வர்ரேனுங்க. சலாங்க." என்றபடி அவன் படிஇறங்கி விட்டான்.

ஜன்னலை இழுத்து மூடி கொக்கியைப் போடுகின்றார் அய்யா.

"கழுதே - எனக்குத் தெரியாமே எடுத்திருக்காளே" என்று கருவிக் கொண்டே நடந்தான் அவன்.

அவனைச் சமாதானப்படுத்தி அனுப்பி விட்டார், மிகவும் சாமர்த்தியமாக. ஆனால் அவருடைய மனதை யார் சமாதானப் படுத்துவது!

## 2

**ச**ங்கு ஊத வந்தவன் கடிகாரத்தைப் பார்த்தான். அந்த மணிக்கூடு எந்த நாளும் ஒரே நேரத்தைதான் காட்டிக் கொண்டி ருக்கும், என்பது அவன் சங்கு ஊதும் வேலையை ஒப்புக் கொண்ட நாள்முதல் அவன் கண்ட உண்மை.

கிளார்க்கரையா கண்ணில் படுமாப்போல் ஜன்னலுக்கு வெளியே தூணில் சாய்ந்து கொண்டு நிற்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி மூன்றரை ஆனதும் ஐயா 'சரி போய் ஊது' என்பது போல் சைகை செய்வார். அவன் போய் ஊதுவான்.

ஆக உயர்ந்த மலையில்தான் பங்களா இருக்கிறது. பங்க ளாவுக்கும் மேலே ரோட்டில் நின்று குழல் போன்ற அந்த நீளமான கருவியை வாயில் வைத்து மூச்சை அடக்கி விலாவை எக்கி மூன்று முறை ஊதினான் என்றால், 'கொம்பு முறிச்சான்' கோவில் தொங்கலில் நிற்பவர்கள் கூட கிள்ளிய கொழுந்தைக் கூடைக்குள் விட்டெறிந்து விட்டு விரைந்து இறங்குவார்கள்.

ஐயா சைகை செய்யவும் சங்கு ஊதுபவன் மேலேறி நடக்கிறான் சங்குடன்! இன்னும் ஒரு மணி நேரத்தில் - அதாவது நாலரை மணியளவில் ஆட்கள் திமுதிமுவென்று ஆபீஸைச் சூழ்ந்து கொள்வார்கள்.

இன்று வங்கிப் பணம் கொடுக்கும் தினம். சண்டை நேரத்தில் பட்டாளத்திற்குப் போய்த் திரும்பி வராத காரணத் தால் 'செத்து விட்டார்' என்று தோட்ட மக்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்களே, அந்த வெள்ளைக்கார துரை, அவர் அவருடைய தோட்டத்து மக்களுக்காக செய்த சலுகைகளில் இந்த வங்கிப் பண விஷயமும் ஒன்று.

தோட்டத்தில் இருக்கும் அத்தின தொழிலாளிகளும், தோட்டம் அறிமுகம் செய்யும் இந்தச் சேமிப்பில் சேர வேண் டும்.

'சேமிப்பு வங்கி பேரேடு' என்று செக்றோலில் அத்தனை பேருக்கும் கணக்கு இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் ஒவ் வொரு பாஸ் புத்தகம்.

அதோ அந்த ஆபீஸ் மூலையில் அடுக்காக நாலு கட்டு பாஸ் புத்தகங்கள் இருக்கின்றனவே. அவை இந்த வங்கிக் கணக்குப் புத்தகங்கள் தான்! அவற்றையும் ஆபீஸிலேயே வைத்திருக்க வேண்டும் என்பது துரையின் உத்தரவு.

பத்தாம் திகதி சம்பளம் போடும் போது தத்தமது சக்தி கேற்ப இரண்டு ரூபாய்க்கு மேல் வங்கியில் போட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கிக்கு எவ்வளவென்று அவர்கள் கூறும் தொகையைக் கழித்துக் கொண்டுதான் மீதிச் சம்பளத்தைக் கொடுப்பார்கள். சம்பளத்தன்று இரண்டு ரூபாய், பெரிய காசு இல்லைதான். பிள்ளைகளுக்கு ரொட்டி வாங்கும் பொடிக்காசு. அதை வங்கி யில் போட்டு வைத்தால் அது ஒரு சிறு சேமிப்புத் தானே!

காசு கையில் இருக்கும் போது சேமித்து வைத்தால் ஓர் அவசரம் என்றதும் உதவி செய்யும். மூன்றாவது மனிதன் ஒருவனிடம் போய்ப் பல்லைக் காட்டிக் கெஞ்சுவதை விட ஆபீஸிற்குப் போய்க் கேட்டு வாங்கலாமே!

புதிதாக வங்கியில் பணம் போடும் ஒருவர் முப்பது ரூபாய் சேரும் வரை ஒன்றும் வாங்க முடியாது. வாங்கத் தொடங்கிய பிறகும் முப்பதுக்கு குறைந்தால் கணக்கு மூடப்ப டும். பிறகு புதுக் கணக்கு துவங்க இயலாது என்பதெல்லாம் அறிமுகமான சேமிப்பு வங்கித் திட்டத்தைக் கொண்டு நடத் தும் போது புதிது புதிதாக ஏற்பட்ட சட்டங்கள்.

அந்தியானதும் மந்தை மந்தையாக கள் குடிக்கப் போகிற வர்களுடன் தான் தொந்தரவு. நினைத்த போதெல்லாம் வந்து தொந்தரவு செய்து கொண்டே இருப்பார்கள் ஐந்து கொடு பத்து கொடு என்று. இந்தத் தொந்தரவு காரணமாகத்தான் வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாள் என்ற நியதி வந்தது.

பெரிய துரை இப்படிச் சட்டத்திற்கு மேல் சட்டம் போட்டுக் கொண்டேயிருந்தாலும், எல்லாச் சட்டங்களும் கொண்டு நடத்தப்படுவதில்லை. எல்லாச் சட்டங்களும் கொண்டு நடத்தப்படுகின்றனவா என்று கண்காணித்துக் கொண்டிருக்கவும் அவருக்கு அவகாசம் இல்லை.

ஆகவே ஒரு சில சட்டங்கள், சட்டங்கள் என்ற பெயரு டன் பட்டியலிலேயே நின்று விட்டன! அப்படிக் கொண்டு நடத்தப்படாத சட்டங்களில் ஒன்றுதான் வங்கியில் பணம் எடுப்பவர்கள் எடுக்கும் போது பாஸ் புத்தகத்தில் கையெழுத் திட வேண்டும் என்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய துரையின் இந்தச் சட்டம் ஏட்டளவிலேயே நின்று விட்டதற்குக் காரணம் அதை நடாத்துகையில் ஏற்பட்ட தோல்விதான்.

ஒருவர் இருவர் என்றால் பாஸ் புத்தகங்களைக் கொடுப்பதும் கையெழுத்துப் பெறுவதும் சாத்தியம். குறிப்பிட்ட ஒரு நாளில் அதுவும் நாலு மணிக்கும் ஐந்து மணிக்கும் இடையில் ஐம்பது, நூறு பேருடைய பாஸ்புத்தகங்களையும் தேடி எடுத்துக் கொடுத்து கையெழுத்து வாங்கிக் கொண்டு பணம் கொடுப்பதும், பிறகு உருவி எடுத்த பாஸ் புத்தகங்களை அந்தந்த இடத்தில் செருகி வைப்பதும், சிரமமான காரியம் தான் என்பதை விட அசாத்தியமான காரியம் என்பதே பொருத்தமானது.

ஆரம்பத்தில் கையெழுத்துப் போட்டுப் பணம் வாங்குவதுடன் தான் ஆரம்பித்து. முன்பெல்லாம் ஒரு பத்துப் பேர் வாங்குவார்கள். அதுவும் ஐம்பது நூறு என்றே வாங்குவார்கள். அத்தனைப் பேரும் எழுதத் தெரிந்தவர்களாகவே இருந்தார்கள். கற்றவர், மற்றவர் என்ற வித்தியாசமின்றிக் காற்றைப் போல் காசும் வாழ்வுக்கு அத்தியாவசியமாகி விட்ட இந்த நாளில் எழுதவோ படிக்கவோ தெரியாதவர்களிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு எப்படிப் பணம் கொடுக்க முடியும்.

'கையெழுத்துப் போட முடியுமா' என்ற கேள்விக்கு 'ஏலாதுங்க ஐயா' என்று பதில் சொல்பவர்களிடமாவது கை ரேகையை வாங்கிக் கொண்டு அனுப்பி விடலாம். 'தெரியுங்க' என்று கூறிவிட்டு பேனாவைக் கையில் பிடித்ததும் நடுங்கும் பேனாவுடனும், வேர்வையால் நனைந்துவிட்ட புத்தகத்துடனும் 'விளையாடுபவர்களை' வைத்துக் கொண்டு என்ன செய்யலாம்.

சின்னஞ் சிறிய அந்தப் பாஸ் புத்தகத்தில் கோடிட்டுக் காட்டியுள்ள ஒரு குறிப்பிட்ட இடத்தில் கையெழுத்திட வேண்டும் என்கின்ற போது எழுத்துக் கூட்டி, எழுத்துக் கூட்டி பெயர் எழுதுபவர்களால் செய்ய முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றொரு நாள் துரை அவசரமாக பதுளைக்குப் போக வேண்டியிருந்தது. வங்கிப் பணத்தையும் கொடுத்து விட்டுத் தான் போக வேண்டியிருக்கும். இல்லாவிட்டால் அது ஏதாவது தொந்தரவில் போய் முடியும்.

துரை காலில் வெந்நீரை ஊற்றிக் கொண்டு உட்கார்ந்திருந் தார். பணம் வேண்டும் என்பவர்கள் கிளாக்கரையாவின் ஜன்னலருகில் வந்து ஐயாவுக்கு ஒரு 'ஐயாசலாம்' போட்டு விட்டு, தமக்கு வேண்டிய தொகையைக் கூறுகின்றனர் பெயர் சொல்ல வேண்டிய அவசியமோ நிர்ப்பந்தமோ இல்லை. அத்தனை பெயர்களும் பெயர்களுக்குரிய முகங்களும் ஐயா விற்குத் தண்ணீர் பட்ட பாடு.

'பத்து ரூபாய்ங்க' ஜன்னலுக்கு வெளியே நின்றவன் கூறுகிறான். ''பெரிய ராமன் சின்ன வெங்கடாஜலம்'' ஐயா வின் வாய் முனகிக்கொள்கிறது கை செக்றோலைப் புரட்டுகி றது.

ராமன் கங்காணியின் பெயரில் ஏற்கெனவே ஒரு வெங்க டாசலம் இருந்தது போதாதென்று புதிதாக ஒரு வெங்கடாசலத் தையும் தன் பெரட்டில் பதிந்து கொண்டார் கங்காணி.

சம்பளம் போடும் போதே, இது போல் வங்கிப் பணம் கொடுக்கும் போதோ, அன்றி இன்ன பிற காரியங்களுக்கா கவோ ராமன் கங்காணி வெங்டாசலம் என்று கூப்பிட்டால் யார் வருவது?

ஏற்கெனவே உள்ள வெங்கடாசலமா, அன்றி இந்தப் புதிய வெங்கடாசலமா? ஆகவே இரண்டாவதாக வந்த இந்த வெங்கடாசலத்தை சின்ன வெங்கடாசலமாக்கி விட்டார் ஐயா.

சின்ன வெங்கடாசலம் என்றால் இதோ ஜன்னல் முன் நிற்கின்றானே இவன். மற்றது பெரிய வெங்கடாசலம். இத்த னைக்கும் இந்தச் சின்ன வெங்கடாசலம் தான் வீமன் போலி ருக்கின்றான். பெரிய வெங்கடாசலம் ஒரு நோஞ்சல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு 'ராமன் கங்காணி' போதாது என்று செக்ரோலில் இன்னொரு ராமன் கங்காணியும் வந்து விட்டது. போதாதற்கு மற்ற ராமன் கங்காணியிலும் ஒரு வெங்கடாசலம் இருக்கின் றான்.

இப்பொது 'ராமன் கங்காணி வெங்கடாசலம்' என்று கூப்பிட்டால் யார் வருவது?

இவனுடைய பெயர் அவனுக்கு விழும். அவனுடைய அரிசிக் கணக்கு இவனுக்கு விழும். அவன் சம்பளத்தை இவன் வாங்குவான். இவனை விசாரணைக்கு அழைத்திருந்தால் அவன் வந்து நிற்பான். ஒரே குழப்பமாகப் போய் விடும்.

ஆகவே இந்தப் பெரிய ராமன், சின்ன வெங்கடாசலம் பெயர் மாற்றங்கள் எல்லாம் ஒரு சௌகரியத்திற்காகத்தான்!

பெரிய ராமனில் புதிதாக ஒரு வெங்கடாசலமும் வருகின் றான் என்று வைத்துக் கொள்வோம். அப்போது? ஏற்கெனவே இரண்டு வெங்கடாசலம் இருக்கிறது என்பதற்காக இவனைப் பெயர் மாற்றிக் கொள்ளும்படி கூற முடியுமா? அல்லது ராமன் கங்காணிதான் அவனை வேறொரு பெரட்டில் பதிய விடுவாரா?

'பெரிய ராமன் குட்டை வெங்கடாசலம்' என்றோ நெட்டை வெங்கலாசலம் என்றோ எழுதிக் கொள்வார். 'பெ ரிய ராமன் கங்காணி குட்டை வெங்கடாசலம்' என்று கூப்பிட் டால் இந்த மூன்றாவது வெங்கடாசலம் வந்து விட்டுப் போகின்றான். அவ்வளவுதானே!

சேமிப்பு வங்கிப் புத்தகத்தைப் புரட்டி, பெரிய ராமன் சின்ன வெங்கடாசலத்தின் கணக்கைக் கையில் தொட்டபடி ஜன்னலிடம் நிற்கும் அவனை முறைத்துப் பார்த்தார் ஐயா.

''ஒனக்கு காசு கெடையாது போ''.

''அவசரமாக வேணுமிங்க. அய்யா இல்லேன்னுடாதீங்க'' என்று கெஞ்சுகிறான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சினிமா பார்க்கப்போறதும், நாட்டுக்குப்போறதும் கூட அவசரம்தான் - இந்த மாசத்துல இதோட மூணு வாட்டி எடுத்திருக்கே. இனி இந்தப் பக்கம் வந்துடாதே - சரி வெலகு.''

லிஸ்டில் அவனுடைய பெயரையும் எழுதிக் கொண்டார்.

'சரி வெலகு' என்று ஐயா கூறினால் காசு கிடைக்கிறது, என்று அவர்களுக்குத் தெரியும். ஐயா ஜன்னலைப் பார்க்கின் றார்.

தலைத் துணியால் முக்கால் வாசி முகத்தை மூடிக் கொண்டு துணியின் ஒரு நுனியை வாயில் வைத்துமென்றபடி ஒரு பெண் நிற்கின்றாள்.

ஐயா நிமிர்ந்து உட்காருகின்றார்.

''துணியை எடு - அட மூஞ்சை மூடாதே'' -

ஐயா அவளைச் சீண்டி விடுகின்றார்.

''துணியை விடு புள்ளே - நம்ம ஐயாகிட்டே என்ன வெட்கம்.''

பெண்ணுக்குப் பின்னால் நிற்பவர் ஐயாவுக்கு ஒத்தூதுகின் றார். தானும் வங்கிக் காசு வாங்க வந்திருக்கின்றார். ஐயா இல்லை என்று கூறிவிட்டால்!

''ஓம்பேரு என்னா?''

அந்தப் பெண்ணின் பெயர் கங்காணி; தாய் தந்தை இத்தியாதி விவரங்கள் அவருக்குத் தெரியாது என்பதல்ல. இருந்தாலும் கேட்கின்றார்.

மூடிய துணிக்குள்ளாகத் தெரியும் முகத்தின் ஒரு பகுதியும் பாதிக் கன்னமும், சிவந்து துடிக்க, உடல் கூசி, கோணி நெளிந்து தன்னுடைய பெயரை அவள் உச்சரிப்பதைப் பார்ப்ப தில் அவருக்கு ஓர் ஆசை - ஓர் உற்சாகம்.

''தருமலிங்கத்துல செங்கமலங்க.''

அதைச் சொல்லி முடிக்க அவள் பட்டபாடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''செங்கமலம் - செங்கமலம்'' - என்று முனகியபடி செக்றோலைப் புரட்டியவர் ''எவ்வளவு?'' - என்று கேட்கின்றார்.

''நாப்பதுங்க'' - என்று கூறியவள் 'உனக்கேன் நாப்பது ரூபாய்' என்று கேட்பார் என்பதையும் அறிந்தவளாதலால் 'எங்கப்பாதான் வாங்கியாறச் சொல்லிச்சுங்க'' என்றும் கூறி வைக்கின்றாள்.

''ஏன் - ஒனக்கு கல்யாணமா?''

''இந்த ஐயாவுக்கு வேறே வேலை கெடையாதுடி'' என்று தோளைக் குலுக்கியபடி மறைந்து கொள்ளுகின்றாள்.

''சரி வெலகு''

ஆட்களுடன் ஐயா என்ன பேசுகின்றார் என்பது துரைக்குப் புரியாது.

''ஏதோ வாக்குவாதம் போலிருக்கிறது. மனிதர் நன்றாகச் சமாளிக்கின்றார். நம்மால் இயலாது' என்று எண்ணிக் கொள்ளுவார்.

தமிழர்களுடன் வேலை செய்ய, தமிழ் தெரிந்த துரைமார்கள் தான் வேண்டும் என்பது சட்டமில்லை. 'அபீஷியல் லாங்வேஜ்' பிரச்சினை எல்லாம் இங்கே தலை நீட்டக் கூடாது. இது அரசியல் சட்டதிட்டங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்ட இடம்.

ஆயிற்று எல்லாம் தயார்!

ஐயா எழுந்து நுனிக்காலில் நின்று துரையினுடைய ஜன்னலின் மேற் கொக்கியைத் திறக்கின்றார். கீழ்க் கொக்கி எப்போதும் திறந்தேதான் இருக்கும். அந்திக்கு ஆபீஸ் பூட்டும் நேரத்தைத் தவிர்த்து.

தான் தயாரித்த 'லிஸ்ட்' படி ஐயா பெயர்களை வாசிக்க ஒவ்வொருவராகத் துரையின் முன் வருகின்றனர்.

''இங்கே எழுது - இந்த இடத்திலே வை - எழுதத் தெரியாதா வெரலைக் கொண்டா'' என்று கையெழுத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது கைரேகையை வாங்கிக் கொண்டு காசைக் கொடுக்க ஆளுக்கு ஐந்து நிமிடம் செல்கிறது.

பாஸ் புத்தகங்களும் வங்கி செக்றோலும் ஜன்னலருகில் இருக்கின்றன.

''பெரிய ராமன் சின்ன வெங்கலாசலம் பத்து ரூபாய்'' ஐயா வாசிக்கின்றார். வெங்கடாசலம் ஜன்னலிடம் வந்து நிற்கின்றான்.

''எழுதத் தெரியுமா'' என்ற கேள்விக்கு ''ஆமாங்க'' என்று பதில் கூறிவிட்டு, பேனாவை வாங்கிக் கொள்ளுகின்றான்.

அனுமார் நின்றது போல் இப்பொதுதான் அவனுடைய பெயர் அவன் முன்னால் விஸ்வரூபம் எடுத்து நின்றது.

'வெங் கடா சலம்' அம்மாடி எத்தனை நீளமான பெயர்!

இந்த ஒன்றரை அங்குலக் கோட்டுக்குள் இதை எப்படி எழுத முடியும் என்று அவன் யோசிக்கவில்லை - மிரள வில்லை.

மைப் போத்தலுக்குள் பேனாவை விட்டுத் தூக்கினான் நிப் மட்டுமென்ன, கால் வாசிப் பேனாவே மைக்குள் நனைந்து எழுந்தது. பிசுபிசுவென்று விரலில் ஒட்டும் மையைக் கூடக் கவனியாமல் பாஸ் புத்தகத்தில் ஐயா காட்டிய இடத்தில் பேனாவை ஊன்றினான்.

வெங்கடாசலம் என்று எழுதத் தொடங்கினவன் விறுவிறு வென்று எழுதினான். அவனுடைய பாஸ் புத்தகத்தில் தொடங்கி அதை முடித்துக் கொண்டு, அடுத்திருந்த செங்கம லத்தின் பாஸ் புத்தகத்திலும் எழுதி அதையும் முடித்துக் கொண்டு கடைசியாக செக்றோலிலும் எழுதி முடித்து விட்டுத் தான் பேனாவைக் கீழே வைத்தான்.

வெங் என்பது அவனுடைய புத்தகத்திலும் 'கடாச' என் பது செங்கமலத்தின் புத்தகத்திலும், 'லம்' என்பது செக்றோலி லும் விழுந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாவுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வருகிறது. துரையைப் பார்த்தார். இருவருமாக எதிரே நிற்கும் வெங்கடாசலத்தைப் பார்த்தார்கள். எழுதி முடித்த களைப்பில் அவன் நின்றான்.

ஆத்திரம், கோப'ம், சிரிப்பு அத்தனையும் ஒன்றை மீறி ஒன்று எழுந்தது துரைக்கு. 'திஸ் இஸ் ஏ றியல் நியுசென்ஸ்' எனறு முனகிக் கொள்ளுகின்றார்.

''போன மொறை எல்லாம் ரேகைத்தானே வச்சே. இப்ப ஏன் வைக்கப்புடாது?'' ஐயா எரிந்து விழுந்தார்.

'பேரெழுதப் படிச்சுக்கிட்டேனுங்க.'' மிகவும் சாவதானமாகக் கூறினான்! ஒருவராக எல்லாம் முடிந்தது.

மணி ஏழு, துரை கோபமாக எழுந்து ஓடுகிறார். மழையும் இருட்டுமாக 'கும்'மென்று கிடக்கிறது. முதிராத இரவாதலால் மெல்லிய கருஞ் 'சில்க் துணி' காற்றில் அசைவது போல் இருள் அசைகிறது.

ஜன்னல் இரண்டையும் சாத்தி விட்டு ஐயா வெளியே வந்துபார்க்கின்றார். இருளைத் தவிர எதையும் காணவில்லை.

வீட்டிலிருந்து கார் வராவிட்டால் அவரால் போக இயலாது. ஒரு முறை ஆபீஸ் 'லைட்டை' அணைத்து மறுபடி போகின்றார். அதுதான் 'சிக்னல்'. கீழே கார் கிளம்பும் ஓசை கேட்கிறது.

ஆபீஸ் கதவையும் பூட்டி விட்டுத் தயாராய் இருக்கலாம் என்றால் 'லைட்டை' அணைத்து விட்டுத்தான் கதவைப் பூட்ட வேண்டும். 'லைட்டை அணைத்து விட்டால்!'

அம்மாடி! பேயலையும் இருட்டு. தவளைகள் கிறீச்சிடுகின்றன. பலாமர நுனியில் வௌவால்கள் படபடக்கின்றன. பெரிய பெரிய கொசுக்கள் கள் கள்ளென்று கடிக்கின்றன. தொங்கும் மின்சார விளக்கைச் சுற்றிக் கூட்டமாய்ப் பறக்கும் பூச்சிகள் சுவரில் கறுப்புக் கறுப்பாய் பெரித பெரிதாய் நிழலாட்டம் போடுகின்றன. ஹிச்கொக்கின் பயங்கரப் படம் மாதிரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனைக்கும் மத்தியில் இரவு ஏழரை மணிக்கு ஐயா ஆபீஸில் உட்கார்ந்திருக்கின்றார்.

வங்கிக் காசு கொடுக்கும் தினமெல்லாம் இதே போல் ஆகிவிடுவதால், அவசரமாகப் போக வேண்டியிருக்கும் ஒரு சில நாட்களில் கை எழுத்து வாங்காமலே காசைக் கொடுத்து அனுப்பி விடுவார்கள்.

சம்பளம் போடுகின்றார்களே கையெழுத்து வாங்கிக் கொண்டா போடுகின்றார்கள்!

லிஸ்டைத் தயார் பண்ணி ஐயா வாசிக்க, துரை காசைக் கொடுப்பார். அடுத்த நாள் அவற்றைப் பாஸ்புத்தகங்களில் பதிந்து மீதம் கட்டி வைப்பார். துரை சரிபார்த்து கையெழுத்திடுவார்.

இப்படியே மாறி மாறி, 'கையெழுத்துப் போட்டுத்தான்' காசு வாங்க வேண்டும்' என்ற பெரிய துரையின் சட்டம் நடத்திப் பார்த்து ஏற்பட்ட தோல்வியால் ஏட்டளவிலேயே தங்கி விட்டது.

சங்கு ஊதி அரைமணி நேரம் ஆகியிருக்கும். ஆட்கள் ஆபீஸ் ஜன்னலை முற்றுகையிடுகின்றனர்.

வங்கி செக்றோலை விரித்து வைத்துக்கொண்டு, பெண்களுடன் கேலி பேசிக்கொண்டு ஐயா லிஸ்ட் தயார். செய்கிறார்.

''ஒனக்கி என்னா?''

ஜன்னல் முன் நிற்பவனைப் பார்த்து ஐயா கோபமாகக் கேட்கிறார். ''காசு வேணும், போன கெழமை பத்து ரூபா எடுத்திருக்கேல்ல. நாலு மாசத்துக்கு இந்தப் பக்கம் வராதேன்னு சொன்னேல்ல. அப்பவே கெடையாது போ''. ''கெடையாதா'' ''ஓங்கப்பன் வூட்டுக்காசா? எங்காசு - நான் போட்டேன் நான் கேக்கிறேன்.''

''போன கெழமெ கொடுத்தேன்ல.''

''போன கெழமை நான் எப்பய்யா வந்தேன்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்த புஸ்தோகத்தைப் பாரு - இது என்ன?''

''புஸ்கத்திலேதான் இருக்குமே! உங்கிட்ட தானே புஸ்த்த கம் இருக்கு. போட்டு வைச்சா வேணாங்கதா-!''

''ஏய் அதிகப் பிரசங்கித் தனம் பண்ணாதே - தலைவரே நீங்களும் தானே இருந்தீங்க. போனகெழமை நான் இவனுக் குப் பணம் கொடுக்கையில.''

தலைவர் 'ஆமாங்க' என்பது போல் தலையை ஆட்டுகின் றார்.

விஷயம் பாரதூரமாகப் போவதை ஊகித்த துரை திரும் பிப் பார்க்கின்றார்.

''What does the fellow say? I can remember giving ten rupees to him last week.''

துரை கிளாக்கரையாவிடம் கேட்கின்றார். ''He says that he has not withdrawn any money, Sir.''

என்று துரையிடம் கூறிவிட்டு ''பாத்தயா துரை கூட சொல் லுறது நீ காசு எடுத்ததாக'' என்றார்.

''ஹப்பா! வேலிக்கு ஓணான் சாக்சியோ - செய்ங்க - செய்ங்க காலம் தூரத்தில் இல்லே' என்று சத்தம் போட்டவ னைத் தலைவர் குறுக்கிட்டு அடக்குகின்றார்.

''பாருங்க தலைவரே, இவனுக்குப் பாவம்னு போன கெழமை குடுத்தேன் - இப்ப வந்து றாங்கி பேசுறானே - நேத்திக்கு என்ன கறிலே சோறு தின்னோம்னு இவனுக்கு நெனைவு இருக்காதே. போன கெழமை வாங்குனதா நெனவு இருக்கும்?''

''கழுதை கெட்டது விடுங்க.''

தலைவர் விஷயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றார்.

''போன கெழம நீங்களும் இங்கே நின்னதுனாலே சரியாப் போச்சு - இல்லாட்டி! நீங்களே நெனைப்பதுதானே என்னமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்குதுன்னு - அவன் அப்படித்தானே எடுக்கவே இல் லைன்னு சாதித்தான்.''

ஐயா தன்பக்கம் உண்மை இருக்கும் படியாக ஒரு சில விஷயங்களைத் துரையும் கேட்டுக் கொள்ளும் அளவு விவரப் படுத்தி வைத்துக் கொள்வார். வேறொரு சந்தர்ப்பத்தில் இவை பயன்படுமல்லவா?

''மஞ்ச துண்டுக்கு கழுத்தறுத்தப் பயலுக ரெண்டு பேருமா சேர்ந்து கிட்டு நம்ம கழுத்தை அறுக்கிறனுக.''

அவன் கத்திக் கொண்டு போவது துரைக்கு விளங்காவிட் டாலும் ஐயாவுக்கு விளங்குகிறது.

ஆனால் மூச்சு விட மாட்டார்!

உள்ளுக்கும் வெளியேயுமாக சிமெந்துத் தரையில் உரசி உரசியே வழு வழுவென்றாகி விட்ட அந்தக் கருங்கல்லை ஐயா தனது சப்பாத்துக் காலால் உள்ளே தள்ளி, கதவை இழுத்தடித்தார் என்றால் மணி ஐந்து என்று அர்த்தம்.

வங்கிக் காசு கொடுக்கும் தினம் என்றாலுங் கூட இப்போ தெல்லாம் ஐந்து மணிக்கே ஆபீஸ் மூடியாகி விடுகின்றது.

★★★

# 3

கிளாக்கரையாவின் சம்சாரம் தினசரி துரை பங்களாவுக் குப் போகின்றார்கள். துரையின் நாலு வயதுப் பெண்ணுக்குச் சிங்களம் சொல்லிக் கொடுக்க.

'டியூஷன்' வைப்பதுதான் இப்போதெல்லாம் ஒரு 'பே ஷன்' ஆயிற்றே!

''ஒரு காலத்துல இந்தப் பங்களா ரோட்டில் ஒரு சுடுகுஞ்சி நடக்காது. இப்ப என்னடான்னா சேச்சே. துரையா லட்சணமா இருக்கவாணாம். ஸ்டோர் கீப்பரையாவூட்டு சம்சாரம் தொரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சானியைப் பாக்க வர்ராங்க - இவங்களும் அவங்களைப் பாக்கப் போறாங்க.''

''அட அதுதான் கெடக்கட்டும். கிளாக்கரையாவூட்டு அம்மாவே பங்களாவுக்கு போறாங்களே பாடம் சொல்லிக் குடுக்க -''

ஆபீஸ் குறுக்கில் அம்மா ஏறுவதைப் பார்த்துக் கொண்டிருந்த கொழுந்துப் பெண்கள் அங்கலாய்த்துக் கொள்ளுகின்றனர்.

வெள்ளைக்காரத் துரைமார்கள் இருந்தபோதுள்ள நிலையே வேறு! தோட்டத்தில் உள்ள எவருடனுமே ஒட்டாமல் தனித்து, தானுண்டு தனது பங்களாவுண்டு என்று வாழ்ந்தவர்கள் அவர்கள்.

பங்களாவுக்குள் எது நடந்தாலும் அது வெளியே தெரியாது. ஆனால் அடுத்த தோட்டத் துரை பங்களாவில் உள்ளவர்களுக்கு மட்டும் தெரியும்.

அழகழகாக வளர்க்கப்பட்ட மரங்களும் அடர்த்தியாகப் பூத்துக் குலுங்கும் கொடிகளுமாக, எந்நேரமும் ஒருவித அமைதியுடனும் 'கீச் கீச்' எனும் பட்சிகளின் ஒலிகளுடனும் பங்களாச் சூழல், மற்ற இடங்களில் இருந்து தனித்தே நிற்கும். பங்களா வாசிகளும் மற்றவர்களிடம் இருந்து தனித்தே நிற்பார்கள்.

துரையின் காரைத் தவிர்த்து பங்களா ரோட்டில் ஒரு கார் ஓடுகிறது என்றால், அது நிச்சயமாக இன்னொரு வெள்ளைக்காரத் துரையின் காராகத்தான் இருக்கும்! இருக்க வேண்டும்.

பங்களா பூந்தோட்டத்தைத் தவிர்த்து, துரைசானியம்மாவை யாரும் கண்டிருக்க மாட்டார்கள்.

உரித்த வாழைத் தண்டுபோல் வெளுத்துப்போய் இருக்கும் வெள்ளைக்காரச் சிறுசுகளை யாரும் வெளியே பார்த்திருக்க மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரைசானியம்மாவுடன் பேசிப் பழகும் ஒரே ஆள் பங்களாத் தோட்டக்காரக் கிழவன் தான் என்பதால், அவனுக்குள்ள பெருமை! அப்பப்பா, சொல்லி முடியாது!

துரைசானியம்மாள் எப்படி கவுணும் காலுமாக, தன்னுடன் தோட்டத்தில் உட்கார்ந்து சூரியகாந்தியில் விதை எடுக்கச் சொல்லித் தந்தார்கள். காலா, மேசா என்று தெரியாமல் தோல் நிறத்திற்கே எப்படி மேலே தொடை வரை மேல் சோடு போட்டிருந்தார்கள். நீளமான ஒரு பைப்பிற்குள் எப்படி சிகரெட்டை நுழைத்துக் குடித்தார்கள்; என்பதை எல்லாம் கிழவன் கையில் மடியில் இருந்தும், எடுத்துப் போட்டு இரசனையுடன் பேசுவதைக் கேட்க விடுமுறை நாட்களில் ஒரு கூட்டமே இருக்கும்.

ஒருவருடனும் ஒட்டாமல் பழகாமல் தனித்தே இருப்பதால் வெள்ளைக்காரத் துரைமார்களிடம் தோட்டத்தவர்களுக்கு ஒரு பயம் - பக்தி - மரியாதை எல்லாம் உண்டு.

தெய்வத்திடம் நாம் ஏன் பக்தியாக இருக்கிறோம், பயப்படுகின்றோம். அதுவும் நம்முடன் பழகத் தொடங்கிவிட்டால்? பேசிச் சிரித்து விட்டால் -?

அன்றைய துரைமார்களை - அதுவும் வெள்ளைக்காரத் துரைமார்களை ஏதோ ஒன்றாக, எட்டாத உயரத்தில் வைத்தே பார்த்துவிட்ட மனம் - பழகிவிட்ட குணம் - அதே பங்களாவிற்குள், அதே பட்டத்துடன் அதே கார், ஆள், அம்பு சேனையுடன் நுழையும் இன்றைய துரைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. இவர்கள் தோட்டத்தில் உள்ளவர்களுடன் பழகுகின்றார்கள் என்பதால்!

கிளாக்கரையா சம்சாரத்துக்கு முப்பத்தைந்து வயதுக்கு மேலேயே இருக்கும் என்பது, அந்தம்மாளுக்கு, பதினேழு வயதில் ஒரு மகள் இருக்கிறாள் என்பதை அறிந்தவர்களுக்கு மட்டுமே தெரியும்.

அந்த அம்மாவின் ஆடை அலங்காரங்களைப் பார்ப்பவர்கள் பத்தைக் குறைத்துத்தான் கணக்கிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா எந்தச் சட்டை போட்டிருந்தாலும் பாதி மார்பும் முக்கால்வாசி முதுகும் பளீரெனத் தெரியும். மார்பைச் சுற்றி, முதுகிலோடும் 'மார்பணியின் பட்டியும், சட்டையின் வெட்டும் ஒன்றாகவே இருப்பதால் எட்டி அடி வைக்கும் போது ஏற்படும் அசைவில் சட்டையை விட்டு எட்டிப் பார்க்கும் பட்டியைச் சுட்டிக்காட்டி, வாயில் விரல் வைத்துக் கொள்வார்கள் தோட்டத்துப் பெண்கள்.

இடுப்பிலிருந்து சற்று இறக்கமாகவே சுற்றப்பட்டிருக்கும் சேலையும், குதி உயர்ந்த காலணியால் சற்றே எக்கினாற் போல் தோன்றும் வயிறும் அம்மாவின் வயதிற்கு மீறிய அலங்காரந் தான் என்றாலும், அசிங்கமாகவோ அருவருப்பாகவோ இல்லாமல் கவர்ச்சியாகவே இருக்கும்.

நாடகக்காரன் 'டோப்பா' போல் வித விதமான கொண்டை போட்டுக் கொண்டு, அம்மா தனது மகளுடன் பாதையில் நடக்கும்போது முதிர்வைக் காட்டும் அந்த முகத்தைப் பார்க்காத எவருமே எண்ணிக் கொள்வார்கள், அக்காளும் தங்கையும் என்று.

அம்மா இப்படி இருப்பதுதான் ஐயாவுக்கு மிகவும் பிடிக்கும். பட்டணத்துப் பாதைகளில் பார்க்கும் பெண்களைப் போல், மனைவியும் உடலில் உடை இருப்பது தெரியாமல் இருக்க வேண்டும், அவருக்கு.

அந்த வயதிலும் கூட அம்மாவை இழுத்து அருகில் வைத்துக்கொண்டு 'நீ, நீதாண்டி' என்று கொஞ்சிக் கொள்வார். வயது வந்த மகள் தானாக நழுவி விடுவாள்.

ஐயாவின் பலவீனம் அம்மாவுக்குத் தெரியும். எத்தனையோ குமரிப் பெண்களை வேலைக்கு வைத்துப் பார்த்து முடியாமல் தான் இப்போது ஒரு பையனை வைத்திருக்கிறார்கள்.

பங்களாவிற்குப் போகும் படிக்கட்டில் அம்மா நடப்பதைக் கண்டு கொழுந்தெடுக்கும் பெண்கள் அங்கலாய்த்துக் கொள்வதைப் போலவே, அதிகாலையில் ஐயாவின் கார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபீசை நோக்கி ஓடுகையில் 'பெரட்டு' களத்தில் நிற்கும் ஆண்களும் முனகிக் கொள்வார்கள்.

திமு திமு என்று ஆட்கள் நிற்கும் அந்த இடத்தில் 'ஹோரன்' அடித்து விலக்கிக் கொண்டுதான் ஐயாவின் கார் ஓடும்.

''வெள்ளைக்கார மவராசனுக இருந்தானுகளே, அப்ப ஐயாவுக்கு நடந்து போக முடிஞ்சுது. இப்ப என்னடான்னா கார் கேக்குது - பங்களா முன்னாலேயே கொண்டு போயி காரை நிறுத்தி எறங்குறாரு - ஹம் காலம் கெட்டுப் போச்சு'' என்று முனகிக் கொள்வார்கள்.

போதாதற்கு ஒருநாள் ஐயாவிடம், காரைக் கேட்டு வாங்கி, அதில் எங்கோ போனார் துரை.

அவர் அவசரமாக ஒரு கூட்டத்திற்குப் போக வேண்டியிருந்தது. பெரிய துரை எல்லாம் போயிருப்பார்கள். இவர் தாமதமாகப் போகவோ, அல்லது போகாமல் இருக்கவோ கூடாது.

அன்று பார்த்தா துரையின் கார் 'மக்கர்' பண்ண வேண்டும். வேறு வழியே இல்லாமல் ஐயாவின் காரைக் கேட்டுக் கொண்டார்.

முழுத் தோட்டமுமே இதைத்தான் பேசிக் கொண்டது.

''கிளாக்கரையா வூட்டு கார்லே துரை போறாரு '' - கிளாக்கரையா வூட்டு கார்லே துரை போறாரு - என்று.

''துரையா லட்சணமா இருக்க வேண்டாம் - இவர் கார்லே அவர் போறதும், அவர் கார்லே இவர் போறதும் சேச்சே ஐயாவுக்கும், தொரைக்கும் என்ன வித்தியாசம்'' என்றும் - ''வித்தியாசம் என்ன வித்தியாசம் இரண்டும் பிலாக்காய் தானே'' என்றும் பேசிக்கொண்டார்கள்.

தன்னைவிட அனுபவஸ்தர் என்ற மதிப்பும் முதியவர் என்ற மரியாதையும் ஐயாவிடம் துரைக்குண்டு. கிளாக்கரையா சொன்னால் சொன்னதுதான். துரை அப்படியே நம்பிக் கொள்வார். ஐயா மேல் துரைக்கு அவ்வளவு நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நம்பிக்கையை தவறுதலாகப் பயன்படுத்திக் கொண்ட பாவம் ஐயாவினுடையது.

கிளாக்கரையாவின் காய்கறித் தோட்டம் பசுமையாக இருக்கிறது. பாத்தி பாத்தியாக முட்டைக்கோசும், வெண்டியும், தக்காளியும், பசளியுமாக ஜிலு ஜிலுவென்றிருக்கிறது.

இலைக்கோசுபோல் பெரிது பெரிதாக இலையை வைத்துக் கொண்டு பூரித்து வெடித்துப் போயிருக்கிறது கடைசி பாத்தி நோக்கல். ஐயாவுக்கு பொழுதுக்கும் ஆபீஸ் வேலை. பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடம்! அம்மா தோட்டத்துக்குள்ளும் செருப்புக் கட்டையில்தான் நடப்பார்கள்!

பிறகு தோட்டம் எப்படி இப்படிப் பூரித்துக் கிடக்கிறது.

கோவில் லயத்துக் குப்பனின் கைராசிதான். ஐயா வீட்டுடன் அவனுக்கு நல்ல ஒட்டுதல்.

அவன் மலைக்குப் போனாலோ, கிளாக்கரையா வீட்டுத் தோட்டத்தில் வேலை செய்தாலோ, ஐயா வீட்டில் வேலை செய்வதாகக் கூறிவிட்டு அவனுடைய வேலை நிமித்தம் டவுனுக்குப் போய் வந்தாலோ; அவனுக்கு செக்றோலில் பேர் விழுந்துவிடும்.

அவனுக்குப் பெயர் விழவில்லை என்றால் கிளாக்கரையா வக்காலத்துக்கு வருவார் என்பது, கணக்கருக்குத் தெரியும்.

'பெயர் போட இயலாது' என்று கிளாக்கரையாவிடம் வாதாடினால் 'நாட்டாள் விஷயத்தைத் துரை வரை நைசாக ஓட்டிவிட்டு விடுவார் என்ற பயத்தில் கணக்கப்பிள்ளை ஒன்றுமே பேச மாட்டார்.

காடாய்க் கிடந்த ஐயாவின் தோட்டத்தை அவன்தான் இப்படிக் காய் கறித்தோட்டமாக மாற்றியிருக்கின்றான்: நம் முன்னோர்கள் முன்பு நாட்டையே மாற்றவில்லையா! அதைப் போல!

குப்பன் நல்ல சிவப்பு. வெற்றிலை போட்டுப் போட்டு இரத்தச் சிவப்பாய் மின்னும் தடித்த உதடு; கரு கருவென்ற கத்தை மீசை; வாட்டசாட்டமான உடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தத்தில் ஒரு நல்ல ஆண்மகன் அவன். அவனுடைய மனைவி அவனைத் தேடிக்கொண்டு ஐயா வீட்டிற்கு வந்தால், அம்மா அவளுக்கு நாலு கோசு இலையை ஒடித்துக் கொடுத்து ''போய் சுண்டித் தின்னு'' என்பார்கள். காலையில் சுட்ட பலகாரம் ஏதாவது மீந்திருந்தால் அதைக் கொடுத்து ''கொண்டு போய் ஒம் மவளுக்குக் கொடு' என்பார்கள்.

ஐயா வீட்டில் குசினி, படுக்கையறை; சாப்பாட்டு அறை; ஹால் என்ற வித்தியாசம் ஒன்றும் அவனுக்கு இல்லை. எல்லாவற்றிலும் நுழைந்து வருவான்.

அவனுக்குத் திருமணமான முதல் வருடத்தில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதன் பிறகு ஒன்றுமேயில்லை.

தன்னுடைய கட்டுப்பாட்டைப் பற்றி அவள் பெருமைய டித்துக் கொள்ளும் போது பக்கத்து நிரைப் பெண்கள் தலையில் கிடக்கும் கூடை அசையாமல் தாவாயை தோளில் இடித்துக் கொண்டு 'ஒம் புருஷனுக்குத்தான் அம்மா இருக்காங்களே' என்று முனகிக் கொள்வதுண்டு.

முன்பு ஒரு தடவை ஒன்பது மணிக் கொழுந்து நிறுத்த கையோடு பிள்ளைக்காரிகள் பால் கொடுக்க, பிள்ளைமடுவத் திற்குப் போகும்போது அவர்களுடன் இறங்கிய இவள் லயத் திற்குப் போனாள் தன்னுடைய பிள்ளைக்குப் பால் கொடுக்க. ''இவ ஏண்டி புள்ளை மடுவத்திலே விடுறதில்லை'' என்று ஒருத்தி கேட்க, ''அட நீ ஒரு கூறு கெட்டவடி. ஒம் புள்ளை ஏம் புள்ளை மாதிரியாடி அது - ஐயா வூட்டு இல்லையா'' என்று இன்னொருத்தி பதில் கூற, இது காதில் விழுந்ததால் ''என்னடி சொன்னே'' என்று இவள் மல்லுக்கு நிற்க, பெரிய களேபரமாகிவிட்டது.

ஐயாவுக்கு லீவு இல்லாத நாட்களில், ஏதாவதோர் அவச ரத்தை முன்னிட்டு வீட்டைப் பூட்டிக்கொண்டு தான் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால், குப்பனின் மனைவியிடம் தான் அம்மா சாவியைக் கொடுத்துவிட்டுப் போவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா ஐந்து மணிக்கு ஆபீஸ் மூடிவிட்டு வந்ததும் இவள் போய் சாவியைக் கொடுப்பாள். வீட்டின் முன் கதவுக்குள்ள சாவி அது. மற்ற சாவிகளெல்லாம் கொத்தாக 'ரேடியோவுக்கு அடியிலிருக்கும்.

முன் கதவைத் திறந்ததும், ''இந்தா அம்மா தேத்தண்ணி ஏதும் ஊத்தி வச்சிருக்கா பாரு'' என்றவாறு சமையலறைச் சாவியை அவளிடம் நீட்டுவார் ஐயா.

அதன்பிறகு அவள் லயத்திற்குப் போவதற்குள் அம்மா வந்து விடுவார்கள்.

வீட்டைப் பூட்டிக்கொண்டு அம்மா போகும். இது போன்ற சந்தர்ப்பங்களில் குப்பனையும், அவனுடைய மகனையும் தன்னுடன் காரில் கூட்டிக்கொண்டு போய்விடுவார்கள்.

அம்மாவும், ஐயாவும், குப்பனும், அவன் மனைவியும் வாயை மூடிக்கொள்ளலாம். ஆனால் ஊரும் வாயை மூடிக் கொள்ளுமா?

குப்பனுக்கும் வங்கிக்கணக்கு இருக்கிறது. அவனும் அடிக்கடி வந்து காசு வாங்குவதுண்டு.

அவன் மனைவிக்கும் கணக்கு இருக்கிறது. அவளும் வந்து வாங்குவதுண்டு.

''ஏய் நீ நாளைக்கு வந்து வங்கியிலே ஒரு இருபத்து அஞ்சு ரூபா எடு'' என்று ஐயா சொன்னால் அவன் வருவான். வாங்கிக்கொண்டு போய் அம்மாவிடம் கொடுத்து விடுவான். அம்மா இரண்டு ரூபாவை அவனிடம் நீட்டுவார்கள். ''மவராசி நல்லா இருக்கணும்'' என்று வாழ்த்திக் கொள்ளுவான்.

ஆபீஸ் ஜன்னலடியில் நின்று ஐயா பொய்யாக அவனை, ஏசுவதையும் பொறுத்துக் கொண்டு, அவன் வாங்கும் பணம் சிலப்பொழுதில் எங்கே விழுகிறதென்பது அவனுக்குத் தெரியாவிட்டாலும், அவனுடைய புத்தகத்தில் அல்ல என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியும். அடிக்கடி தனது புத்தகத்தை வாங்கிப் பார்த்துக் கொள்ளுவான். அவன் மனைவிக்கும் இதே போலத்தான்.

ஒரு தடவை ஐயா வரச் சொல்லாதபோது போய் பத்து ரூபா வாங்கினான். அடுத்த முறை பாஸ் புத்தகத்தை வாங்கிப் பார்த்தபோது, அது சிவப்பு மையில் இருந்தது.

வாய் பேசத் தெரியாத சில ஊமைப் பூச்சிகள் ஐயா சொன்னதைக் கேட்டு ''சரிங்க சாமி'' என்று தலையை ஆட்டுவ துமுண்டு.

''நான் எடுக்கல்லீங்களே'' என்று சண்டை போட்டு பார்த்துவிட்டு, அப்போதைய தேவைக்கு ஒரு ஐந்து, பத்து கிடைத்ததும் பேசாமல் போய் விடுபவர்களும் உண்டு.

முன்பு எடுத்தது நினைவில் இருக்கும்போதே ''நீ என் னய்யா வெளையாட்டா பண்றே'' என்று விதண்டாவாதம் பேசுவதன் மூலம் ஐயாவிடம் துரைக்குள்ள நம்பிக்கையைக் கூட்டிவிட்டு போகிறவர்களும் உண்டு.

ஆனால் மலையில் நிற்க வேண்டிய காலை நேரத்தில் வந்து ஐயாவிடம் தனது மனைவியின் வங்கிக் கணக்கைக் கேட்டு மனைவியை ஏசிக்கொண்டு போகின்றானே இவன் விதண்டாவாதம் பேசுபவனும் அல்ல, ஊமைப் பூச்சியும் அல்ல.

யாருடனும் 'வள வள' என்று பேசிக் கொண்டிருக்க மாட்டான். தான் உண்டு தன் வேலை உண்டு என்று அடக்க மாக இருப்பான். எந்த வேலைக்குத் தள்ளினாலும் போவான் துரை. கிளாக்கர், கண்டாக்கு, கணக்கப்பிள்ளை, கங்காணி எவருடனுமே அவன் எதிர்த்துப் பேசி யாரும் கண்டதில்லை.

வாரத்தில் இரண்டு நாளுக்குக் கள்ளருந்தப் போவான். அந்த இரண்டு நாளும் கூட மற்ற இரவுகளைப் போலவே சப்தம் இல்லாமல் கழித்து விடுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இன்னைக்கு 'புல்போடு' என்பதைக் காட்டிக் கொள் வதற்காகவே சிலர் லயத்தில் கூச்சல் போடுவார்கள்.

இந்த முப்பத்திரண்டு வயதிற்குள்ளாக அவனுக்கு ஆறு பிள்ளைகள் அடுக்கடுக்காக!

குடும்பத்தில் எந்த மூலையிலிருந்து எந்த ரூபத்தில் எப்போது செலவு வரும் என்று கூற முடியாது.

மூத்த மகள் சடங்கான நேரத்தில் இப்படி ஒரு செலவை மகள் வைப்பாள் என்று கண்டானா என்ன!

தலையைச் சொறிந்து கொண்டு ஐயா முன் நின்றான். ''வங்கியில் முப்பத்தெட்டு ரூபாய்தான் இருக்கு. ஒரு சதம் குடுக்க முடியாது'' நிர்த்தாட்சண்யமாய்க் கூறிவிட்டார் ஐயா.

மனைவியின் வங்கியில் எடுக்கலாம் என்ற எண்ணத் தையே விட்டுவிட்டான். போன வாரந்தான், அவளை ஒரு பதினைந்து ரூபாய் எடுக்கச் சொல்லி வாங்கினான். இப்போது கேட்டால் கொடுக்க மாட்டார் என்று தெரியும். ஆகவேதான் அவளை வரச்சொல்லாமல் இவன் வந்தான்.

எப்படி எப்படியோ கெஞ்சிக் கூத்தாடிப் பார்த்தும் நடக்க வில்லை. காசில்லாமல் வீடு போவதில் பிரயோஜனமும் இல்லை. நீண்ட நேரம் யோசித்து ஒரு முடிவிற்கு வந்தவனா கக் கூறுகின்றான். ''அந்த முப்பத்தி எட்டு ரூபாவையும் அப்படியே கொடுத்திடுங்க'' என்று.

''தாராளமாக வாங்கிக்கோ'' என்றவாறு அவனுடைய கணக்கை முடித்து அனுப்பிவிட்டார்.

இது பழைய கதை!

இவளுடைய மனைவியின் பாஸ் புத்தகத்திலும் ஒரே சிவப்பு மையாக இருக்கும். அடிக்கடி காசு வாங்கும் அடையா ளம்.

என்று வாங்கினோம் என்று வாங்கவில்லை என்று நினை வில் நிறுத்திக்கொள்ள முடியாதவாறு அடிக்கடி பணம் வாங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவர்களுடைய கணக்கில் இடைக்கிடை ஐயா தன் கைவரிசை யைக் காட்டுவதுண்டு.

''புள்ளைக்கு பாக்கு மாத்தப் போறேனுங்க ஐயா'' என்று, கூறியவனிடம், ''ஓம் பொம்பளை முப்பது ரூபா வாங்கியி ருக்கு - பொம்பளை வாங்குகிறது புருஷனுக்குத் தெரியாது. புருஷன் வாங்குறது பொம்பளைக்குத் தெரியாது'' என்று அவர்களை மாட்டிவிட்டு இவர் ஒதுங்கிக் கொண்டாலும் அந்த முப்பது ரூபாய் வாங்கியது குப்பனின் மனைவி என்பதும் அது சிவப்பு மையில் விழுந்தது இங்கே என்பதும் ஐயாவிற்கு தெரியும்.

இதெல்லாம் பார்த்தால் சரிப்படுமா! எத்தனையோ அக்கிர மங்கள் நடக்கின்றன! என்று தனது மனதையும் சமாதானப் படுத்திக் கொள்கின்றார். அவனைச் சமாதானப்படுத்தி அனுப் பியது போல!

தபால் பையன் பேப்பர் கொண்டு வந்தான். ''அப்பய்யா இல்லே இல்லேன்னு குடுத்தாருங்கய்யா'' என்றபடி.

'சரி சரி கொண்டா'' என்றவர் பேப்பரை வாங்கிக் கொண்டு மேசையில் உள்ள செக்றோல்களுக்கு அடியிலிருந்து, இரண்டு பழைய பேப்பர்களை எடுத்து, ''இந்தா தேத்தண்ணி 'பேக்கை' கொண்டு போகையில் இதையும் கொண்டு போ. புள்ளைங்களுக்குப் பள்ளிக்கூடத்துச் சாப்பாடு கட்ட பேப்பர் இல்லேன்னு அம்மா சொன்னாங்க'' என்கின்றார்.

அப்பையாவிடமிருந்து வாங்கும் பேப்பர்களில் ஒரு மாதத்திற்கு ஆறேழு பேப்பரை ஐயா கடத்தி விடுவார். இந்தக் கடத்தல் வேலையை நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் ''துரைசானி அம்மா பேப்பர் எண்ணுறாங்க'' என்று அப்பையா ஒரு போடு போட்டு வைத்தார். துரைசானியம்மா விடம் ஐயா கேட்கவா போகின்றார் என்னும் எண்ணத்தில்.

இதற்கெல்லாமா ஐயா மசிவார். கவ்வாத்து மலையில் கொழுந்து எடுப்பவராயிற்றே அவர்.

இதோ இப்போது கூட இரண்டு பேப்பரை வீட்டிற்கனுப் புகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சின்ன நோனா இருக்கா?'' பையும் தானுமாக வெளியே கிளம்பிய பையனைக் கேட்கிறார்.

''இருக்குதுங்க ஐயா''

''நீ பேசலையா? நம்மலை பத்தி ஏதும் கேக்கலையா?''

இளம் பெண்களைப் பற்றிப் பேசிப் பொழுதைக் கழிப்பதில் ஒரு கிளு கிளுப்பு.

''இன்னும் நீங்கதானா இருக்கீங்கன்னா கேட்டுச்சீங்க.''

ஐயாவுக்கு உற்சாகம் தாங்க முடியவில்லை.

''நம்ம நெனைப்பும் இருக்கு. கொஞ்சம் கீழே வரச் சொல்லு பேசிக்கிட்டு இருக்க'' என்கின்றார்.

பையன் சிரித்துக்கொண்டே நடந்துவிட்டான்.

ஐயா ஜன்னல் வழியாக மாமரத்தைப் பார்க்கின்றார்.

# 4

பாதத்தடியில் நிழல் விழும் பகற்பொழுது. பன்னிரண்டு மணிக்கொழுந்து நிறுவைக்காக, ஆட்கள் வரிசையாக நிற்கின்றனர்.

சுள்ளென்று தைக்கும் சூரியஒளியில் கூடை நிறைந்த கொழுந்து துவளுவது போலவே கூடையுடன் நிற்பவர்களும் துவளுகின்றனர்.

பசி வேளை!

எவ்வளவு நேரமென்று தான் வரிசை போட்டு நிற்பது?

கொழுந்துக் கணக்கப்பிள்ளையைத் துரை பிடித்து வைத்துக் கொண்டு, ஏதோ கத்தித் தீர்த்துக் கொண்டிருக்கின்றார், மேல்வளைவில், நேரங்காலம் தெரியாமல்.

பன்னிரண்டரை மணியுமாயிற்று கொழுந்து நிறுக்க யாரையும் காணவில்லை.

சின்னவரைத் துரை பிடித்துக் கொண்ட விஷயம் இவர்களுக்குத் தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவாகவும், பலமாகவும் கணக்கப்பிள்ளையை ஏசிக் கொண்டு நிற்கின்றார்கள்.

துரையின் கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டும், 'ஆம்' போட்டுக் கொண்டும், தலையை ஆட்டிக் கொண்டும் நின்றாலும் சின்னவர் நெருப்பில்தான் நிற்கின்றார். அவர் நினைவு நிறுவையிடத்தில்தான் நிற்கின்றது.

துரை எந்த நேரம் அவரை விடுவாரோ! அதன் பிறகு போய் அத்தனை பேருக்கும் நிறுத்துவிட்டுத்தானே அவர் போக வேண்டும் சாப்பாட்டிற்கு.

பெண்கள் பொறுமை இழந்து நிற்கும் வேளையில் வேறொரு மலையில் வேலை செய்துவிட்டு இறங்கி வருகின் றார் தலைவர்.

''இது என்னா அநியாயம் தலைவரே-! கொழுந்து நிறுக்க இன்னம் ஒரு நாதியையும் காணலியே. நாங்க இனி எப்ப நிறுக்கிறது-? எப்ப வீட்டுக்குப் போறது? எப்ப சாப்பிடறது-? எப்ப மலைக்கு வாறது-? சரியா ஒண்ணரைக்கு மலையிலே நிக்காட்டியும் வெறட்டிப்புடுறாகளே-!''

நாலைந்து பெண்கள் தலைவரிடம் முறையிடுகின்றனர்.

அவர்களுடைய முறையீடும் நியாயமானதுதான் என்றா லும் யாரைக் குறை கூறுவது?

தலைப்பாகையைக் கழற்றி முகத்தை அழுத்தித் துடைத் துக் கொண்டபடி யோசித்தார் தலைவர்.

இது போன்றதொரு சந்தர்ப்பத்தில் தனது 'தலைவர் மவுசை'க் காட்டாவிட்டால், பிறகு எப்போது காட்டுவது-!

''இந்தா நீங்கல்லாம் சாப்பாட்டுக்குப் போங்க-சாப்பிட்டு வந்து நெறுத்துக்கிடலாம். நான் பேசிக்கிடறேன்''- என்றபடி தானும் நடந்துவிட்டார்.

துரையிடமிருந்து கழற்றிக் கொண்டு, குறுக்குப் பாதை யில் 'திடுதிடு'வென்று ஓடி வருகிறார் கொழுந்தையா.

காடாய் மண்டிக் கிடந்த அந்த பழைய மலையில் கோணல் மாணலாய் வளைந்தும் ஒடிந்துமிறங்கும் அந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்கில், சப்பாத்துக் கால் சறுக்கவிடாமல், தேயிலை மரங்களில் மோதிக் கொள்ளாமல் சின்னவர் மிகவும் வேகமாக ஓடி வருவது, தேயிலைக்கு மேலே ஐயா சறுக்கிக் கொண்டு வருவது போல் தெரிகிறது.

தேயிலை மரத்தை இரு கைகளாலும் பற்றிப் பிடித்துத் தனது வேகத்தைக் கட்டுப்படுத்திக் கொழுந்து நிறுக்கும் இடத்தில் நின்றவர் திடுக்கிட்டார்.

வெறுங்கூடைகள் மட்டும் வரிசையாக இருக்கின்றன.

சாக்காள் படங்கை விரித்து போட்டு அதில் உட்கார்ந்திருந்தான். சின்னவரைக் கண்டதும் எழுந்து நின்றபடி, ''தலைவர் எல்லாத்தையும் போகச் சொல்லிப்புட்டாருங்க'' என்றான்.

வலது கையை 'ஸ்டைலாகத்' திருப்பி மணியைப் பார்க்கின்றார். மணி ஒன்று, ''சரி, சரி என்ன செய்யலாம். கழுதைக்கு வாக்குப் பட்டாச்சி-'' என்று முனகியபடி ரோட்டோர வெள்ளைக் கல்லில் உட்கார்ந்து கொள்ளுகின்றார்.

கொழுந்தை நிறுத்து லொறியை அனுப்பாமல் அவர் சாப்பிடப்போக முடியுமா?

உரக்காம்பிரா லயத்தில் ஒரே கூச்சல். சாப்பிட்டுவிட்டு வருபவர்கள் ஒவ்வொருவராக நின்று, நின்று லயத்தைச் சுற்றி ஒரே கூட்டம்.

ஊரான் வீட்டு சண்டை என்றால் ஒரு விநாடியாவது நின்று பார்க்க வேண்டாமா!

''ஏண்டி-ஐயா காசு குடுக்கமாட்டேன்னுட்டாருன்னு மட்டும் வந்து ஆலாபனை பண்ண முடிஞ்சுதே- போன மாசம் எனக்குத் தெரியாமே சல்லி எடுத்ததைச் சொல்ல வாய் வரலையோ-!''

அவன் குரல்தன் உச்சியில் கேட்கிறது.

''அட்டங் கொப்புறானே நானு எடுக்கலேங்க-'' அவள் எத்தனையோ சத்தியம் செய்து பார்த்து விட்டாள். அவன் நம்புவதாக இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நானு எங்கண்ணாலே பாத்தேண்டி, ஐயா காட்டுனதை - அப்பவே றோசனை பண்ணிக்கிட்டேன். போல. மாசம் ஒங்கொப்பன் வந்து மொடையாருக்குன்னு காசு கேக்கலையா - நீயே என்கிட்டே கேட்டேல்லியா-பேங்கலேயாச்சும் எடுத்துக் குடுக்கவான்னு-நான் என்ன சொன்னேன். நானு என்னடி சொன்னேன் - வேணாம்னேல்ல - நீயி எனக்குத் தெரியாமெ எடுத்துக் குடுத்திருக்கே-''

எதையோ நினைத்துக் கொண்டு கத்தினான் அவன்.

வெயிலில் நின்று நின்று பார்த்துவிட்டுக் கொழுந்து நிறுக்க ஆளில்லாமல் ஓடிவந்த களைப்பு - பசி - எல்லாமாகச் சேர்ந்து அவளைப் பேயோட்டின.

''த்தூ- நீ ஒரு மனுஷனாட்டம்! ஒவூட்டு ஆறு பொறப்புகளுக்கும் முந்தானி விரிச்சவளாச்சே! நானு சொல்றதை இத்தினி நம்புறியா இல்லே இல்லேன்னு தலையிலே அடிச்சிக்கிறனே ஒன் செவுட்டுக் காதுல ஏறுதா-? மொகரக்கட்டை கெட்ட கேட்டுக்கு ஒரு பொண்டலாட்டி ஆறு புள்ளைங்க-''

அவள் முடிக்கவில்லை. அவன் வெறியனானான். கூரையில் குத்தி வைத்திருந்த தீட்டுக்கட்டையை இழுத்தெடுத்தான். எட்டி அவள் குடுமியைப் பிடித்தவன் ஓங்கி அடித்தான். முன்தலை நைந்து பிதுங்கியது.

உச்சி வேளைக்கும் அதற்கும் உதிரம் 'குபு குபு'வென்று பெருக்கெடுத்தது.

அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்து அவனைப் பிடித்து கொண்டனர்.

மயங்கி விழுந்தவள் பிணமாக கிடந்தாள். பிள்ளைகள் அவள் மேல் விழுந்து கத்திப் புரண்டன.

அவற்றை இழுத்து ஒதுக்கி விட்டு, ஒருத்தி தண்ணீர் தெளித்தாள். மூத்த பெண் தாயைத் தூக்கி மடியில் சாய்த்துக் கொண்டு விசிறினாள்.

இரத்தம் நின்றபாடில்லை.

''இன்னம் லொறி போகலைதானே ஓடிப்போய் ஐயா கிட்டே சொல்லிட்டு லொறியைக் கொண்டா-''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் ஆலோசனை கூற மற்றவன் ஆபீசுக்கு ஓடுகின் றான்.

லயத்திலிருந்து ஆபீசுக்கேறும் குறுக்குப் பாதை 'சளசள' வென்று சப்பாத்துப் புல்லும் தண்ணீருமாக கிடக்கிறது.

புல்லுக்கு மேலாகத் தலை நீட்டி ஆடிக்கொண்டே இருக் கும் அட்டைகள் மனிதவாடை பட்டதும் பட்டென்று ஒட்டிக் கொள்ளும்.

நாலுபடிக்கு ஒரு காலாக வைத்து அவன் ஓடும் வேகத்தி லும் நாலைந்து ஒட்டிக்கொண்டன.

ஒரு விநாடி நின்று அவற்றை இழுத்தெறியவும் மனமில் லாமல் ஓடும் வேகத்தில் காலுயரும் போது, கையால் தட்டி விட்டபடி ஓடுகின்றான்.

மூச்சு வாங்க ஓடி வந்து நிற்பவனை ஒரு கணம் பார்த்து விட்டு 'என்ன' என்பது போல் தலையைச் சொடுக்கினார் ஐயா.

வாயிலிருந்த சுருட்டின் சாம்பல் தலை சொடுக்கப்பட்ட அசைவில் சட்டையில் கொட்டிற்று.

''ஒரக்காம்புறா லயத்துல சண்டைங்க-''என்று ஆரம்பித்த வன் சண்டைக்கான காரணத்தையும் கூறிவிட்டு ''மனுஷிக்கு ஆச்சி போச்சின்னு இருக்குங்க-'' என்று முடித்தான்.

ஐயா ஒரு விநாடி திடுக்கிட்டாலும் உடனே சுதாகரித்துக் கொண்டார். ''காலம்பர இங்கே வந்தும் கேட்டான்- காசிருக்கு தொரைக்கிட்ட, கணக்கிருக்கு எங்கிட்ட-எடுக்காட்டி எப்படி கொறையும் - சரிசரி நீ போய் நான் சொன்னேன்னு கணக்கப் புள்ளைகிட்டே சொல்லி லொறியைக் கொண்டு போ-'' என்று அவனை அனுப்பிவிட்டு, சட்டையில் கொட்டிய சாம்பலைத் தட்டிக்கொள்ளுகின்றார்.

உண்ட களைப்புக்கு சீமெத்துத் தரையின் ''சிலுசிலு''ப் பும் சுருட்டுப் புகையின் 'வெதுவெது'ப்பும் என்னமாய் இருக் கிறது. சுவர்க்கம் போல்!

கண்களை இலேசாக மூடுகின்றார்.

மாஞ்சருகு மிதிபடும் 'சரசர' சப்தம் கேட்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபீசைத் தாண்டியிருக்கும் லயத்துப் பெண்கள் இப்படி யேதான் மலைக்குப் போவார்கள்.

கூட்டம் கூட்டமாக வரும் பெண்களுடன் கேலி பேசுவ தற்காக ஐயா நிமிர்ந்து உட்கார்ந்து கொள்ளுகின்றார்.

அந்தப் பெண்களுக்கும் ஐயாவின் வயதுக்கு மீறிய கோமா ளித்தனம் எப்படி இருக்குமோ?

இரசித்துக் கொள்வார்கள். சிரித்துக் கொள்வார்கள்.

'ம்ம்' என்று முனகிக் கொண்டு லொறி எதிர்ரோட்டில் ஓடும் சத்தம் கேட்கிறது.

''இன்னந்தான் கொழுந்து நெறுக்கலியே ஏண்டி லொறி போகுது-''

நினைவு பளீரென்கிறது ஐயாவுக்கு.

''லொறி ஏன் போகிறது? எங்கே போகிறது என்பது மட்டும் தானா ஐயாவுக்குத் தெரியும்.''

லொறி ஏற்றிக்கொண்டு போகும் அவளுடைய உயிர் ஏன் போய்க் கொண்டிருக்கிறது என்பது கூட அவருக்குத் தெரியுமே!

அதற்காக-!

'ஆச்சி போச்சின்னு கெடக்குன்றாளே ஒருவேளை செத்தி டுவாளோ'

மனம் அலைகிறது!

'செத்திட்டா போலீஸாரும் - விசாரணை நடக்கும் சண் டைக்கு காரணமே பேங்குக்காசுதான் என்றால் பேங்குக் கதையும் இழுபடும்.'

'இழுபடட்டுமே நமக்கென்ன?'

வெளுக்கத் துடிக்கும் மனதை அடித்து அமுக்குகின்றார் அய்யா.

இதற்கெல்லாமா ஐயா மசிந்து கொடுப்பார். பெரிய இடியே விழுந்தாலுமே உடலைக் குலுக்கிக் கொண்டு எழுந்து விடுபவராயிற்றே அவர். பேய்க்குகையாய் இருண்டு கிடக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய மனதை இந்த சிறு மின்னல் கீற்று எவ்வளவு ஒளி பெற்றதாக மாற்றிவிடப் போகிறது?

இந்த மின்னலுக்கெல்லாம் வெளுத்து விடும் மனமா ஐயாவின் மனம்.

மாஞ்சருகு 'சரசர'க்கின்றது. ஐயா தலையை நிமிர்த்திப் பார்க்கின்றார்.

குப்பனின் மனைவி தனியாக வந்து கொண்டிருக்கின்றாள்.

அவள் எப்போதுமே தனியாகத் தான் நடப்பதுண்டு. அதுவும் ஆபீஸ் பாதையில் நடக்கும் போது, தன்னுடன் கூட எவரும் வராமல் பார்த்துக் கொள்வாள்.

ஐயாவைப் பார்த்த கண்ணுடன் அவளையும் பார்த்தால் ஏதாவது குத்தல் பேசுவார்கள். பிறகு வம்பு வரும். அதற்கேன் இடம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் ஆபீஸ் பாதையில் நடக்கும்போது கூடுமான வரை தனியாக நடப்பாள்.

ஐயாவைத் தனியாகப் பார்ப்பவர்களுக்கு இவளைப் பற்றிய நினைவு எழ நியாயம் இல்லை.

அதே போல இவளைத் தனியாகச் சந்திப்பவர்களும் ஐயாவை இழுத்துப் போட்டு எண்ணிக் கொள்ளுமளவுக்கு எதையும் நினைவில் வைத்திருப்பதில்லை.

ஆனால் இருவரையும் ஒரே நேரத்தில் சந்திக்கும்போது இருவருக்குமுள்ள தொடர்பு, உறவு, இத்தியாதிகளை இழுத்து போட்டுச் சுவைப்பது மனித மனதுக்கே இயல்பான ஒன்றாயிற்றே!

அதற்கேன் இடங்கொடுக்க வேண்டும். அநியாய மல்லுக்கு நிற்க வேண்டும் எனும் முன் யோசனைதான் அவளைத் தனியாக நடக்கச் செய்கிறது.

இரண்டு வயதில் ஒரு குழந்தை இருக்கிறது என்ற ஒன்றைத் தவிர வேறு எதை வைத்தும் அவளுடைய இளமையைக் குறைசொல்ல முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைந்தெடுத்த சிலை போலிருக்கின்றாள்.

கொழுந்துடன் கூடை; நிறுக்கும் இடத்திலேயே இருப்ப தால், வெறும் தலைத்துணியும் இறுகச் சுற்றிய இடுப்புப் படங்குமாய் அவள் நடந்து வரும் அழகை ஆபீஸ் தூணில் சாய்ந்த வண்ணம் இரசிக்கின்றார் ஐயா.

'அன்று போலவே தான் இன்றும் இருக்கின்றாள் அழகாக-' என்று எண்ணிக் கொள்வதன் மூலம் அவளுடைய அழகை முன்பும் இரசித்திருக்கிற உண்மையை வெளியே தெரியாமல் அந்தரங்கமாக ஒத்துக் கொள்கிறது ஐயாவின் மனம்.

அவள் ஆபீசிடம் வந்துவிட்டாள்.

''என்ன - வயிறு பெரிசாகவே மாட்டேங்குது-'' என்பதில் தொடங்கித் தனக்கே உரித்தான அசிங்கமான நகைச்சுவையு டன் ஏதோ கூறியவர், குரலை இறக்கிக் கேட்கின்றார். ''அம்மா என்னமாச்சம் சொன்னாங்களா-?'' என்று.

அவருடைய நகைச்சுவையினைத்தான் புரிந்து கொண்ட தற்கடையாளமாக ஒரு குறும்புச் சிரிப்பை உதிர்த்துவிட்டு, ''பேங்க் காசுக்கு வரச்சொன்னாங்க அம்மா''- என்று கூறியபடி அவள் நடந்துவிட்டாள்.

''மறந்துடாதே-!'' என்று முனகியவர் மறுபடியும் அமர்ந்து சுகமாகச் சாய்ந்து கொள்ளுகின்றார்.

ஆஸ்பத்திரிக்குப் போன லொறி அதோ திரும்பி வருகிறது- கொழுந்து ஏற்றிக் கொண்டு போவதற்கு.

எங்கோ தூரத்தில் கேட்கும் ஒரு பெண்ணின் அழுகை போல் லொறியின் சத்தம் அவருடைய காதில் நுழைந்து இருண்ட மனதுள் இறங்குகிறது.

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலாயி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

குறுக்கும் நறுக்குமாக நாலு லயம். அதன் குறுக்கே ஒரு குறுக்குப்பாதை.

எங்கிருந்தோ நீண்டு வந்த ஒரு அரை அங்குல பைப் அந்த நாலு லயங்களுக்கும் மையமான ஒரு இடத்தில் ஆளுய ரம் எழும்பி தலைவணங்கி நிற்கிறது.

தலைவணங்கும் இடத்தில் கழுத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு ஒரு அரையடி சதுர சிமிந்தித்தூண்.

அந்த நாலு லயத்து ஜீவராசிகளுக்கு அது தான் தாகசாந் தினி.

சிறு பிள்ளைகள் சதா திறந்து தண்ணீரை வீணாக்கிவிடாம லும், டெப்பைக் கழற்றி உடைத்து நாசமாக்கிவிடாமலுமிருப் பதற்காகத்தான் பைப்பை ஒரு ஆள் உயரத்தில் நிறுத்தி இருக் கின்றார் துரை.

பங்களா காம்பவுண்ட் சுவரை ஏறிக் குதித்து காவல்கார னைத் தாண்டி; கார்டன் கூலிக்குக் 'கடுக்காய்' கொடுத்து விட்டு, அல்ச்சேஷன் மந்தைகளுக்கும் மறைந்து, அப்பையா வுக்கும் ஒரு டிமிக்கி கொடுத்துவிட்டு பாத்ரூம் ஜன்னல் வழியாக பெரிய துரைசானியம்மா எப்படிக் குளிக்கின்றார்கள் என்பதை ஏறி நின்று பார்த்துவிட்டு ஓடி வருபவர்களாயிற்றே இந்த வாண்டுகள். இவர்களுக்கு இந்த ஆளுயரப் பைப் எந்த மூலை.

எத்தனையோ தடவை உடைந்து 'அது சிறு பிள்ளைக ளுக்கு எட்டாது ஆகவே இது பெரியாள் வேலைதான்' என்று துரை நாலு லயத்து ஆட்களுக்கும் தெண்டம் போட்டிருக்கின் றார். அதெல்லாம் சர்வ சாதாரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திய இரவு பெய்த பனி அந்தப் பைப்பில் முத்துக் கோர்க்கிறது. இளஞ்சூரியனின் ஒளிக்கீற்று பைப்பில் ஒட்டிக்கிடக்கும் பனிச்சொட்டில் வர்ணவேடிக்கை புரிகிறது.

மூன்றாவது லயத்துக் கோடியில் பலா மரத்தின் வேரில் ஒரு ரேடியோ பெட்டறி குளிர்காய்ந்து கொண்டிருக்கிறது.

அதிகாலை சுறுசுறுப்பில் அந்தக் குறுக்குப் பாதை நசுங்குகிறது.

மேலும் கீழுமாக அந்த நாலு லயத்து ஆட்கள் குனிந்தும் நிமிர்ந்தும் அதில் நடக்கின்றனர்.

ஈக்கள் பறந்து பறந்து அமர்கின்றன. மலசலக் கூடத்தின் தகரக்கதவு ஓயாமல் கிறீச்சிடுகிறது.

நேற்று அந்தி நேரம் காயப்போட்ட கம்பளியை இப்போது காணலியே என்று ஒரு பெண் ஓலமிடுகின்றாள்.

கொழுந்துக் கூடையில் கோழி அடைக்காதேன்னு எத்தனைவாட்டி சொல்றது என்று ஒரு தாய் மகளிடம் கூப்பாடு போடுகின்றாள்.

பெட்டிறியை சூடேறினதும் எடுத்து உள்ளுக்கு வச்சிட. நேத்தே சத்தம் பத்தலை என்று உத்தரவிடுகிறது ஒரு இளவட்டம்.

பெரட்டுக்குப் போகிறவர்களும் போய் திரும்புகிறவர்களுமாக ஒரே சந்தடி.

இத்தனை அதிகாலை ஆரவாரத்திலும்;ஒரு அடி அகலமான அந்த லயத்தின் அரை சுவற்றின் மேல் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருக்கின்றாள் பாலாயி. ''உருண்டு விழுந்தா என்னத்துக் காவே'' என்று அவளைக் கேட்க யாரும் இல்லை. யாரும் இல்லை என்பதைவிட யாருக்கும் தோன்றுவதில்லை என்பதே சரி.

இந்த நாலு லயத்தின் குறுக்கே ஓடும் அந்தக் குறுக்குப்பாதைக்கு சப்பாத்தடி விழும் 'பாக்கியம்' வெகு குறைவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'லயம் பார்க்கிறேன்' என்று தோட்ட டிஸ்பென்சர் என்றா வது ஒரு நாள் நடந்தால் உண்டு. மற்றபடி உத்தியோகத்தர்கள் யாரும் அதனூடே நடப்பது அபூர்வம்.

இன்று அந்தக் குறுக்குப் பாதைக்கு ஒரு பொன்னான நாள்.

கண்டக்டரய்யா அதன் வழி புகுந்து வியர்க்க நடந்தார். குளிரடிக்கும் இந்த அதிகாலையிலேயே வியர்வை என்றால் ஒன்று அவர் எங்கோ தூரத்தில் இருந்து விரைவாக நடந்திருக்க வேண்டும்: அல்லது பயந்திருக்க வேண்டும்.

மிகத்தாழ்வாக வளைந்து நிற்கும் அதோ அந்தப் பலாக் கிளை மட்டும் மறைத்துக் கொண்டிராவிட்டால் பாதைக்குக் கீழே தெரியும் பெறட்டுக் களத்தில் இருக்கிறது கண்டக்டரய் யாவின் பங்களா.

பங்களாவில் இருந்துதான் அய்யா வந்துகொண்டிருக்கி றார். ஆகவே வியர்வைக்குக் காரணம் நீண்ட பயணம் அல்ல.

மற்ற நாட்களில் என்றால் ஏழரைக்கு பெறட்டுக்களத்தில் வேலை பிரித்து ஆட்களை எல்லாம் மலைக்கேற்றிவிட்டு பங்களா படியேறினார் என்றால் 'பிறேக்பாஸ்ட்' முடித்துப் படியிறங்க ஒன்பதாகிவிடும்.

அய்யாவுக்குக் காலைச் சாப்பாடு சாப்பிட இரண்டு மணி நேரம் வேண்டும் என்பதல்ல. எப்படியும் ஒன்பது மணிக்குள் ளாக தான் வேலை பிரித்து அனுப்பிய ஆட்கள் மலைக்குப் போயிருப்பார்கள் என்ற நம்பிக்கைதான் இரண்டு மணி நேரம் அய்யாவை அடைத்து வைக்கிறது அந்தப் பங்களா சுவற்றுக் குள்.

'லபக் லபக்'கென்று நாலை வாரிப் போட்டுக் கொண்டு வெளியே கிளம்பி எட்டுக்கே மலையில் அவர் நின்றாரென் றால் அவருக்கு வேலை பார்க்க வருவதுபோல் எட்டரைக்கும் ஒன்பதுக்கும் வருபவர்களை அவர் எப்படி வரவேற்பது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஆள் இரண்டு ஆள் என்றால் விரட்டிவிடலாம். ஒரு நாள் இரண்டு நாள் என்றால் 'வேலை கெடையாது போ' என்கலாம். அத்தனை பேரும் அத்தனை நாளும் பிந்தியே வந்தால் அவர் தான் என்ன செய்வார்!

சின்னதுரையிடம் புகார் செய்தால் 'தயவு தாட்சண்யம் பார்க்காதே விரட்டிப்போடு' என்பார்.

ஒரு மலை ஆட்களும் வரிசையாகப் போய் ஆபீஸ் வாசலில் நின்று கொண்டு 'எங்களை எல்லாம் அய்யா வெறட் டிட்டாரு. இப்படி அத்தனை பேரையுமே வெரட்டிப்புட்டாக்க யாரு வேலை செய்யிறது. அடுத்த தோட்டத்தானுகளா வந்து வேலை செய்வான்' என்று மிகவும் ராங்கித்தனமாகக் கேட்கும் போது, 'சரிசரி நீங்கல்லாம் போய் மலையில வேலை செய் யுங்க ... நான் அய்யாகிட்ட பேசுறேன்' என்பார்.

இந்தத் தொந்தரவெல்லாம் எதற்கு என்று அய்யா ஒன்பது மணிக்கே வெளியே கிளம்பினால் அதிலேயும் ஒரு தொந்தரவு வந்துவிடுகிறது.

சரியாக எட்டு மணிக்கு அய்யாவின் பங்களா முன் காரை நிறுத்திக் கொண்டு சின்னதுரை 'ஹோர்னை' அமுக்குவார். அய்யா வெளியே வந்தார் என்றால் 'எட்டு மணியாயிற்று' இன்னும் வீட்டுக்குள்ளேயே தானோ' என்பார். இந்தக் குத்த லுக்குப் பயந்து கொண்டு அய்யா வெளியே தலை காட்டமாட் டார்.

கராஜிலிருந்து சின்னதுரை காரை வெளியே எடுத்துவிட் டார் என்றால் அய்யாவின் குசுனி ஜன்னல் வழியாகப் பார்த்து விடலாம். கார் கிளம்பிவிட்ட செய்தியை அம்மா அய்யாவுக்கு அறிவிப்பார்கள். அய்யா படுக்கையறை சுவரண்டை கப்சிப் பென்று நிற்பார். வீட்டுக்கு முன்னால் கார் நிற்கிறதா அல்லது வீட்டைத் தாண்டி ஓடிவிட்டதா என்பதை அவதானிக்க.

வாசல் முன் கார் நிற்கிறதென்றால் வேலைக்காரச் சிறுவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடில் போய்க் கூறுவான் 'அய்யா அப்பவே மலைக்குப் போய்விட்டார்' என்று.

அய்யாவின் பங்களாவைத் தாண்டி மரப்பலகைப் பாலத்தின் மேல் கார் தடதடவென்று ஓடிற்றென்றால் இந்தப் பிரச்சினைக்கு இடமே இல்லை.

இன்று அதெல்லாம் ஒன்றும் கிடையாது!

விடியற்காலை ஏழரைக்கே வழுக்கியடித்துக் கொண்டு லயத்துக் குறுக்கில் பாய்கின்றார் அய்யா.

இப்போது அவர் சரியாக நாலு லயங்களுக்கும் நடுவில் நடக்கின்றார்.

நாலு லயத்து சிறுவர்களும் ஒரு சேர நின்றுகொண்டு ''ஐயா சலாம் ஐயா சலாம்'' என்று கத்துகின்றனர்.

ஐயா சலாம் கோரஸ் ஆகாயத்தைப் பிளக்கிறது.

கோபத்தால் சிவந்த முகத்தை அசிங்கமாக தூக்கிக் கொண்டு அவசரமாக நடப்பதைத் தவிர அவரால் செய்யக் கூடிய ஒன்றும் இல்லை. ஏதாவது பேசினார் என்றால் எங்காவது ஒரு மரத்தில் ஏறி ஒளிந்து கொண்டு அவருடைய தொப்பிக்குக் குறிபார்த்து கல்லடிப்பார்கள் இந்த வாண்டுகள். இன்றே முடியாவிட்டாலும் நாளை அல்லது நாளை மறுநாள்.

காலம் பழைய காலமா? அவருடைய கட்டைக்கால் சட்டைக்கும் காக்கித் தொப்பிக்கும் இவர்கள் பயப்பட!

சிறுவர்கள் போட்ட 'ஐயா சலாம்' கூச்சல் அரைசுவற்றில் படுத்துக்கிடந்த பாலாயின் காதிலும் விழுந்திருக்க வேண்டும். புரண்டாள்!

'தொலைந்தாள் பாவி! லைசன் கல்லில் விழுந்து தலையை உடைத்துக் கொள்ளப் போகின்றாள்' என்று நாம் அங்கலாய்க்கத் தொடங்கும் முன்பதாக 'நான் என்றுமே தூங்குவதில்லை' என்பது போல் லாவகமாகக் குதித்துக் காலூன்றி நிற்கின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுப்புச்சேலை முழங்கால் வரை உயரும் விதத்தில் துணியுடனேயே உயர்ந்த கைகளிரண்டையும் இடுப்பில் ஊன்றிக்கொண்டு காகம் போல் தலைவளைத்து கத்திய சிறுவர்களைப் பார்க்கின்றாள்.

''த்து.. நாய்களே... நாற நாய்களே...! எதுக்காவ கத்து றீங்க... புள்ளை முளிச்சுக்கிடாது...?''

''சலாம் போடுறாணுகளாம் சலாம்! ஏழு குருதை பூட்டுன ரதத்துல ஏவூட்டு ராசா ஏறி ஏழாவது நாள் வரயில செலாம் போடுங்கடான்னா இப்பவே கட்டயில போறவனுக்கெல்லாம் செலாம் போடுதுக கயிதேக... வண்ணானூட்டு கயிதேக...''

கோபமாகப் பேசி; கோபமாக முறைத்து விட்டு கோபமாக நடக்கின்றாள் கிழவி!

கோபமாகத் திரும்பி கோபமாகக் கிழவியை முறைத்து விட்டு கோபமாக நடக்கின்றார் அய்யா!

மேல் றோட்டில் பெரியதுரை வருகின்றாராம்.

★★★

# 2

**ஆ**மாம்! மேல் ரோட்டில் பெரிய துரை வருகின்றார். அது தான் கீழ் ரோட்டில் கண்டக்டரய்யா ஓடுகின்றார். சின்னதுரை வேறு எங்காவது ஒரு றோட்டில் ஓடிக்கொண்டிருப்பார். இன்னும் யார் யார் எங்கெங்கே ஓடுகின்றார்களோ?

பெரியதுரை என்றால் அத்தனை பயம். பெரிய துரை டிவிஷன் பார்க்க வருகின்றார் என்றால் ஏதோ ராஜ பவனி வந்தது போல்தான்! போல் என்ன போல் ராஜபவனியே தான்!

முழு றோட்டையும் அடைத்துக் கொண்டு நிற்கும் அந்த 'ஸ்டாண்டர்ட்' சாம்பல் நிற வேனின் வலது பக்கப்பின் கதவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதி திறக்க: பல்லக்குப் போன்ற அந்தக்கார் ஒரு முறை குலுங்க ஏறி அமர்கின்றார் பெரியதுரை.

கையிலிருக்கும் தடித்த புத்தகத்தை அடையாளத்துடன் மூடி சீட்டின் மறுமூலையில் போட்டுவிட்டு வெளியே நோக்கு கின்றார்.

சைக்கிள் டியூபாய் நீண்டு கிடக்கும் பாதையை கார் ஜீரணிக்கிறது.

பசும் வானமாய் பரந்து கிடக்கும் தேயிலைத் தோட் டத்தை துரையின் மனம் ஜீரணிக்கிறது.

இன்று நேற்று பார்ப்பதா இந்தத் தோட்டமும் அதன் பசுமையும்!

யாரோ எவரோ வளர்த்துவிட்டதைப் பார்த்து ரசிக்கும் மனமா அந்த மனம்.

சுமந்து பெற்ற ஒரு தாயின் சுவையல்லவா துரை அனுப விப்பது.

கார் ஒரு பள்ளத்தில் இறங்கி ஏறுகிறது. அதனால் ஏற் பட்ட குலுக்கல் துரையை குரங்காக்குகிறது.

டிரைவர் பயந்து போனான்.

மெதுவாகக் கண்ணாடியைப் பார்க்கின்றான். அந்தச் சின் னக் கண்ணாடி நிறைய துரையின் சிவந்த முகம் உம்மென்று முறைக்கிறது. வெண்பூதமாய்-கோவைக் கண்களுடன்.

மலை வழியே அடித்துக் கொண்டிறங்கும் அடிமழை அந்த மலைப் பாதையை அரித்துக் கொண்டு போயிருக்கிறது. எந்தப் பள்ளத்தில் விழாமல் காரை ஒதுக்கி ஓட்டவும் முடி யாது. பாதையின் அகலமேதான் காரின் அகலமும்.

இதை எல்லாம் துரைக்கு விளங்கப்படுத்தியும் பய னில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சொல்லாத இடத்தில் கார் நின்றுல் கத்துவார். சாதாரணமாய் கார் குலுங்கினாலும் கத்துவார். சொன்ன இடத்தைத் தாண்டி கொஞ்சம் கார் முன்னே போய் நின்றால் தொலைந்தது.''நீ போகலாம் டிரைவர் உனக்கு எங்கே பிரியமோ அங்கே நிறுத்து! நான் சொல்லும் இடத்திலா நீ நிறுத்துவாய்'' என்று முனகிவிட்டு அப்படியே கம்மென்று அமர்ந்து கிடப்பார் பின்சீட்டில்.

'நீ போகலாம் டிரைவர்' என்ற பிறகு கிளம்பிவிட வேண்டியது தான். அதன் பின் எங்கே போவது எங்கே நிறுத்துவது என்ன செய்வது என்று மூச்சு விடமாட்டார் துரை.

எங்கே போகிறேம் என்ன செய்கிறேம் என்னும் பிரக்ஞை அற்று பைத்தியம் போல் காரை ஓட்டிக்கொண்டிருக்கும் அந்த இக்கட்டான நேரம் ஊசிமுனையில் உட்கார்ந்திருப்பது போல் இருக்கும். மெதுவாகக் கண்ணாடி வழியே பார்த்தால் ஒன்றுமே நடவாதது போல் துரை புத்தகத்துள் அமிழ்ந்திருப்பார்.

அந்த நேரத்தில் வரும் ஆத்திரத்தில் என்னதான் பொறுமைசாலியான சாரதியாக இருந்தாலும் காரை மலைப்பள்ளத்தில் உருட்டி விடுவான் 'இவனிடம் வேலை செய்வதை விட சாவது மேல்' என்று.

இந்த டிரைவர் அசாதாரணப் பொறுமைசாலி. 'துரையிடம் நியாயத்தை சொன்னாலும் கத்துவான் சொல்லாவிட்டாலும் கத்துவான்' ஆகவே கத்தித் தொலைச்சிட்டுப்போ' என்று சும்மா இருந்து விடுவான்.

துரையுமே கூட 'பாவம் நல்லவன் வாயில்லாப் பூச்சி என்று எண்ணிக் கொள்வார். கவனிக்க வேண்டிய இடத்தில் கவனித்தும் கொள்வார்.

பெரிய துரைக்குப் பேய்போல் கோபம் வருமே ஒழிய யாரையும் வயிற்றிலடிக்கமாட்டார். மவராசன் நல்லாருக்கணும் என்று ஐந்து டிவிஷன் ஆட்களும் கை எடுத்துக் கும்பிடுவதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் குலுங்கியதால் துரைக்கேற்பட்ட கோப உணர்ச்சி இப்போது தான் இறங்கியிருக்கவேண்டும். ஏதோ முனகுகின்ருர். டிரைவர் உன்னிப்பாய்க் கேட்டுக்கொள்ளுகின்ருர்.

''இலங்கையில் தான் எல்லாருமே டிரைவர்களாயிற்றே.'' ஸ்டியரிங்பிடிக்கத் தெரிந்துவிட்டால் சரி. அது சரி டிரைவர் உனக்குத் தெரியுமா 'கீப் லெப்ட்' என்று ஏன் போடுகின்றார்கள் என்பது. இங்கிருக்கும் டிரைவர்களில் எழுபத்தைந்து வீதத்தின ருக்கு அது தெரியாது. மற்ற இருபத்தைந்து சத வீதத்தினருக்கு அது தான் 'ரைட் சைட்' என்பது மட்டுமே தெரியும். ஆனால் எல்லாருமே டிரைவர்கள். அப்சர்ட் என்றவாறு சீட்டில் சரிந்து கொண்டார்.

பெரியவருக்கு தன்னூர்ப்பற்று சற்று அதிகம். அவரு டைய தோட்டத்து மக்களைப் போலவே!

பொங்கும் இளமையால் பூரித்து நிற்கும் மலைக்கன் னியை சல்லாத்துகில் போட்டு மூடுகிறது மேகப்பிசிர்.

பச்சைத் தேயிலையைப் பால் வெள்ளை மேகம் பஞ்சுச் சிதறலாய் மூடிவைக்கும் கோலமே அலாதி. குளிக்கும் தொட் டியின் சவர்க்கார நுரைக்குள் படுத்துக்கிடக்கும் ஆங்கிலச்சி னிமா அழகியைப்போல்.

'ஸ்டொப்' என்ற வார்த்தையைத் தொடங்கி'ப்'பென்று முடிப்பதற்குள் காரை நிறுத்திவிட்டு குளித்துநிற்கும் தேயிலை வாதுகளை தான் நசுக்கி நனைந்தபடி நின்றுகொண்டு கொஞ்ச மாகப் பின் கதவை திறந்துவிட்டு நின்ருன் டிரைவர்.

அரைக்கால் சட்டைக்கு மேலே பெருந்தொடையின் வெண்மைச் சதையில் பின் சீட்டின் வரிம்பு அழுத்திய கோடு சிவப்பாய்க் கிடக்கிறது. கண்டிமுருங்கை வரிச்சியில் செவ்வள் ளிக்கொடி சுற்றியது போல். வலது கையால் கைப்பிரம்பை காருக்கு வெளியே மண்ணில் ஊன்றி அந்தப் பலத்தில் இறங்கி நிற்கின்றார் துரை. கைப்பிரம்பின் ஈட்டிமுனை மண்ணைக்கி ளறி உயர்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரை நடக்கிறார்.

ஐந்தாம் நம்பரில் வேன் நிற்கிறது. பெரியதுரை காரை விட்டு மலையில் இறங்கிவிட்டார் என்னும் செய்தி எங்கோ நின்று கொண்டிருந்த சின்னதுரையின் காதுக்கு உடனே எட்டு கிறது.

''நேற்று நாட்டாள் உரம் போட்ட மலையாயிற்றே'' என்று விரலைக்கடித்துக் கொள்ளுகின்றார்.

''நாட்டாளை நம்பி ஒன்றும் செய்ய முடியாது. அவர்களுக் கென்ன அன்றைய நாள் முடிந்தால் சரி. செய்யும் வேலையில் பொறுப்பு கிடையாது! இந்தத் தேயிலை நம்முடையது. இது வாழ்ந்தால் தான் நாம் வாழலாம் என்று பொறுப்பில்லாவிட்டாலும் செய்யும் வேலையை ஒழுங்காகச் செய்ய வேண்டும் இல்லாவிட்டால் நாளைக்கு வேலை தரமாட்டார்கள் என்ற பயமாவது இருக்கவேண்டும்.

அரசியல்வாதி தொட்டு அன்றாடம் காய்ச்சிவரை நாட்டுப் பற்று இல்லாத ஒரு கூட்டம் இது.

அதற்கு இவர்கள் தான் சரி. பயமும் இருக்கிறது. பொறுப் பும் இருக்கிறது.

தோட்டத்தாள் வேலை செய்த ஏதாவதொரு மலையில் பெரியவர் இறங்கி இருந்தால் நான் கவலைப்படப் போவதில் லை'' என்ற நினைவுடன் தனது மோட்டார் சைக்கிளை ஒரு மரத்தடியில் போட்டுவிட்டு கண்டக்டரய்யா எந்த மூலையில் நிற்கின்றார் என்று கண்களுக்கு மேல் கையை வைத்துப் பார்க்கின்றார் சின்ன துரை.

பெரிய துரை தோட்டம் பார்க்கக் கிளம்புவது அபூர்வம். கிளம்பினார் என்றால் யாருடைய வயிற்றெரிச்சலையாவது கொட்டிக் கொண்டுதான் திரும்புவார்.

ஒரு மாதத்தில் ஐந்து நாள்தான் மலை பார்க்கக் கிளம்பு வார். அதுவும் ஐந்து டிவிஷன் உள்ள அந்தப் பெரிய தோட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் ஒரு டிவிஷனுக்கொரு நாள் போவார். அப்படி என்றால் மாதத்துக்கு ஒரு தடவை ஒரு டிவிஷன் மேற்பார்வை செய்கின் றார். அந்த ஒரு நாள் பார்வையே ஒரு மாதத்துக்குப் போதும்.

மீதி நாளெல்லாம் ஆபீசிலேயே அடைந்து கிடப்பார்.

ஆபீஸ் நிழலில் அமர்ந்து கொண்டே எந்த மலையில் எந்த திரையில் எத்தனையாவது மரத்தில் என்ன பழுது என்று கூறுமளவுக்கு புத்தகம் பேசும் அவருடன்.

ஹெட்கிளார்க்கே அங்கலாய்த்துக் கொள்வார். 'இந்த சனியன் பிடிச்சவன் சதா காலமும் ஆபீசே கதி என்று கிடந்து நம் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கின்ருனே' என்று.

கொழுந்து கணக்கை கொண்டுவா என்பார். இருந்தாற் போல் உரக்கணக்கை கொண்டுவா என்பார்.

இந்த மலை இந்த வருடம் குறைவாகக் கொழுந்தெடுத்தி ருக்கிறதே ஏன் என்று புருவத்தை உயர்த்தி ஐந்து வருடக்கணக் குகளை ஒன்றன் பின் ஒன்றாகப் பார்த்துவிட்டு செப்டம்பரில் இந்த மலை கவாத்து வெட்டியிருக்க வேண்டுமே? மைகாட் இது நவம்பர் என்று ஒரு கத்தல் போட்டார் என்றால் பெரிய கிளார்க்குக் கால் நடுங்கும்.

ஹெட்கிளார்க் பழைய காலத்து ஆசாமி. யெங்கி கால் சட்டை எல்லாம் போடமாட்டார். ஆகவே அவருடைய கால் கள் கால்சட்டைக்குள்ளாகவே ஆடிக்கொள்ளும் வெளியே தெரியாது.

மண்ணைப் பிசைவது போல் புத்தகங்களைப் பிசைந்து விட்டு குற்றமுள்ள இடத்தின் படத்தை மனத்தில் பதித்துக் கொண்டு 'கெட் மை கார்' என்று எழுவார்.

துரை வெளியே கிளம்புகிருரா? கிளம்புகிருரா? என்று பார்த்து பார்த்து நின்றுவிட்டு அப்போது தான் டிரைவர் சாப்பாட்டில் கை வைத்திருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய துரையின் அறையிலிருந்து பெரிய கிளார்க் ஒட்டைச்சிவிங்கிபோல் அழகற்ற விதத்தில் வெளியே ஓடிவந்து ''ஐசே இந்த டிரைவர் எங்கே யாராவது ஓடிப் பாருங்க..'' என்று கத்த யாராவது ஒரு கிளார்க் ஓடி டிரைவரைக் கூப்பிட சாப்பிட்ட கையை துணியில் துடைத்துக் கொண்டு டிரைவர் படியேறிப் பாய்கின்றான்; நாலு படிக்கு ஒரு காலாய் வைத்து.

ஆபீஸிலிருந்து படியேறி பங்களாவுக்குள் நுழைந்து போர்டிகோவில் வந்து பெரிய துரை நிற்கையில் திறந்த கதவுடன் கார் நிற்காவிட்டால் என்ன ஆகும் என்பது டிரைவருக்குத் தெரியும்.

திறந்த கதவுடன் நிற்கையிலும் துரையின் உதட்டைப் பார்த்துக்கொண்டே நிற்பான்.

அந்த உதட்டாட்டத்திலிருந்து எந்த டிவிஷனுக்குப் போகச் சொல்லுகின்ருர் என்பதை யூகித்துக் கொள்வான். அதைக் கவனியாமல் இருந்துவிட்டு மீண்டும் ஒரு தடவை 'எங்கே போக வேண்டும்' என்பதை எவ்வளவு தான் பவ்வியத்துடன் கேட்டாலும் அந்த வெள்ளை முகத்தில் விரியும் கோடுகள்; ஏளனமாய்ப் பிதுங்கும் கீழுதடு 'நொட் ஸ்டெடி' என்பது போன்ற தலையசைவு... கார்ச் சாவியை மூஞ்சியில் விட்டெறிந்து விட்டுப் போய்விடத் தோன்றும்.

''அம்ம டிவிசனுக்குத்தான் பெரியதுரை வர்ராரும் என்று முனகிக் கொண்ட பிள்ளை மடுவத்துக் கிழவி பிள்ளைகளை எல்லாம் வரிசையாக உட்கார வைத்து இரண்டு கைகளாலும் வாயைப் பொத்திக் கொள்ளச் செய்து விட்டாள். சிசுக்களை எல்லாம் தொட்டிலில் போட்டு ஆட்டி கூடுமானவரை தூங்கப் பண்ணிவிடும் முயற்சியில் ஈடுபட்டுவிட்டாள்.

ஐந்தாம் நம்பரையும் ஆரும் நம்பரையும் மலை பிரித்துக் காட்டுவதற்காக வளர்த்து அழகாக வெட்டப்பட்டுள்ள சிவப்புச் செடியோரமாக இறங்கிய பெரியதுரை பூச்சிக் கூட்டுடன் வெள்ளை விழுந்த ஒரு தேயிலை வாதை ஒடித்துக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான் தாண்டுவதைக் கண்ட டிரைவர் கதவை மூடிக் காரை நகர்த்துகின்றான்.

துரை அங்கிங்கென்று சுற்றிப் பார்த்து விட்டு எங்காவது ஓரிடத்தில் தேயிலையைப் பிரித்துக் கொண்டு பாதையில் ஏறுவார். அந்த இடத்தில் கார் நிற்கும் படி பார்த்துக்கொள்ள வேண்டியது அவனுடைய கடமை.

புதிதாகப் பெயர் பதிந்திருந்த ஒரு ஏழெட்டுப்பையன்களைப் புல் வெட்டப் போட்டிருந்தார் சின்னதுரை. பையன்களைத் தனியாக விடக்கூடாது என்பதனால் ஒரு கிழவனையும் கூடப் போடும்படி கண்டக்டருக்குப் பணித்திருந்தார்.

தானும் கங்காணி வேலை பார்க்க வேண்டும் என்பது கிழவனின் நெடு நாளைய ஆசை. அதை நிறைவேற்றிக் கொள்வதற்காக தன்னிடம் இருந்த ஒரு கோட்டையும் போட்டுக் கொண்டு கையில் பிரம்புடன் இந்தப் பத்துப் பையன்களையும் மேய்க்கின்ற வேலையை கிழவன் தானாக நியமித்துக் கொண்டான்.

பையன்களும் கிழவனிடம் நன்ருகவே பட்டிருக்கின்ருர்கள்.

பெரிய துரை மலையில் இறங்குகின்றார் என்றதும் கிழவனுக்கு நடுக்கம் காணுகிறது.

கோட்டைக் கழற்றி தேயிலைக்கடியில் சுருட்டிப் போட்டு விட்டுப் பையன்களைக் கெஞ்சுகின்றான்.

''டேய் உட்காந்துக்குங்கடா.. படுத்துக்கிடுங்கடா... தேயிலைக்கு மேலே தலையைக் காட்டாதீங்கடா..''

''ஏலாது போ கங்காணி நான் நிப்பேன். பெரியதொரை கேட்டாக்க பில்லு வெட்டுறேன்பேன்... எங்கடா கங்காணின்னார்னா இதோ படுத்துக் கெடக்காரும்பேன்...''

''அடேய் உன்னைக் கும்புடுறேன்டா படுத்துக்குறு... தலையை மேலே நீட்டறாதே..'' என்று பதறுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வெள்ளென வீட்டுக்குப் போக உடுவியா..?''

''சரிடா தொரை போனதும் போக விட்டுடறேன்..''

ஒருவாறாக கிழவன் உட்பட அனைவரும் தேயிலைக்கடியில் பதுங்கிக் கொள்ளுகின்றனர்.

இப்படி சின்னதுரைமார்கள் தொட்டு ஆபீஸில் உள்ளவர்கள்; மற்ற உத்தியோகத்தர்கள்; உழைப்பாளிகள் ஈறுக அந்தத் தோட்டத்தில் உள்ள மூவாயிரத்துக்கும் மேற்பட்ட அத்தனை ஜீவன்களும் பெரிய துரை என்றதும் நடுங்கத்தான் செய்கின்றார்கள்.

அதே பெரிய துரைக்குப் பயப்படாத ஒரு ஜீவனும் அங்கே இருக்கிறது.

★★★

# 3

**ஆ**மாம்! பெரிய துரைக்குப் பயப்படாத அந்த ஜீவன் அதோ அந்தப் பாலாயிதான்.

இடுப்புக்குக் கீழ் வேட்டி போல் சுற்றப்பட்டுள்ள சீலைத் துண்டும் விலகிக் கிடப்பதை உணராமல் லயத்துச் சந்தியில் படுத்துக் கிடக்கின்றாளே....

அவள் தான்!

அந்த முழத்துண்டைத்தவிர அவளுக்கு மூடிக் கொள்ள ஒரு துணி கிடையாது. தேவையுமில்லை.

கண் படைத்த பாவத்துக்காக என்று யாராவது அவள் சுற்றியுள்ள துணியை எடுத்து சரியாகப் போட்டு விட்டால் உண்டு.

இல்லாவிட்டால் கோழியோ குருவியோ தான் - சிட்டுக்குருவி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதைத் திறந்து சிந்தனையை வெளியே விட்டுவிட்ட பிறகு எதை மூடத் தோன்றும்.

எலி வளையையும்: சிங்கம் குகையையும் பூட்டியா வைக்கின்றன. அல்லது புடவை சுற்றி உடம்பை மூடியா வைக்கின்றன.

இவளும் அதே தான். உடலுக்குப் புடவையில்லை. வீட்டுக்குப் பூட்டில்லை.

விடியற்காலையில் - ஞாயிறும் திங்களும் முகம் திருப்பிக் கொள்ளும் அந்த முன் காலை வேளையில் கூடையும் தலையுமாக கொழுந்துப் பெண்கள் குதிபோட்டு நடக்கும் அந்த குளிர்வீசும் காலையில்-

அதோ அவளும் தான் நடக்கின்றாள். கையை வீசிவீசி.

பெறட்டுக்களத்தில் துண்டு வாங்க வரிசையாக நிற்கும் கொழுந்துப் பெண்களுடன் இவளும் நிற்கின்றாள்.

ஆண்களுக்கு கண்டக்டரய்யா பெறட்டுக்கலைக்கின்றார். பெண்களுக்குக் கொழுந்துக் கணக்கப்பிள்ளை துண்டு கொடுக் கின்றார்.

அவளுடன் ஒட்டி நிற்க அருவருப்படைந்த மற்ற பெண் கள் அவளைவிட்டு கொஞ்சம் எட்டி நிற்கின்றனர். துண்டு கொடுத்துக் கொண்டே வந்த கணக்கப்பிள்ளை அவளைவிட்டு அடுத்தவளிடமிருந்து தொடங்குகின்றார்.

அவள் ஆடவில்லை அசையவில்லை அப்படியே சிலை யாய் நிற்கின்றாள்.

எல்லாப் பெண்களும் போன பிறகு அவளுடைய கையி லும் ஒரு துண்டைக் கொடுக்கின்றார் அய்யா. அதிலே திகதி ஒன்றும் கிடையாது.

பெரியவர்கள் டிக்கட் வாங்கும் போது சின்னப்பிள்ளை தனக்கும் ஒரு டிக்கட் கேட்டால் பெற்றவன் அதன் கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காகிதத்துண்டையோ பழைய டிக்கட்டையோ கொடுப்ப தில்லையா! அதைப் போலத்தான்.

"நீ செத்துத் தொலைய மாட்டேங்கிறியே உன் எழவே பெரிய எழவாய் போச்சு." என்று கண்டக்டரய்யா அவளைத் தன் கைப் பிரம்பால் தள்ளுகின்றார்.

"ம்க்கும் காடு வா வாங்குது. காலன் வரப்பயப்புடுருனே! வீடு போ போங்குது வேளை வர மாட்டேங்குதே! என்று நீட்டி முழக்கியவள் "ஏ பொண்டுகளா நில்லுங்கடி யோவ்... இந்த ஐய்யா ஒரு மாதிரிடி தனியா மாட்டிக்கிட்டேன். கையைத் தொட வாராறிடியோ" என்றவாறு குறுக்குப் பாதை யில் ஓடுகின்றாள்.

நாலு சூல் கண்ட நாயொன்று ஓடுவதைப் போல் இருக்கி றது அவள் ஓடும் கோலம்.

பூத்து நிற்கும் தேயிலையில் கோர்த்து நிற்கும் பனித்துளி கள் இரத்தினமாய் ஜொலிக்கின்றன.

காற்றிலே அசையும் நெருப்புக்குச்சி மரங்களில் இருந்து பவழமல்லியாய் நீர் முத்துக்கள் கொழுந்தெடுக்கும் பெண்கள் மேல் உதிர்கின்றன.

ஏறிவரும் சூரியனின் இதமூட்டும் சூடு வேளையை சுறுசுறுப்படையச் செய்கிறது.

ஓடி வந்த வேகத்தில் ஒரு பிடி கொழுந்தைக் கிள்ளிய பாலாயி பக்கத்தில் நின்ற பெண்ணிடம் கூறுகின்றாள் "ஏ ஆயி ஏ லூட்டு நெரையையும் எடுத்துக்கினே போ...நான் போயி கூடையை எடுத்துக்கினு வாறேன்...கொண்டாற மறந்துட் டேன்ல..."

எடுத்த ஒரு பிடி கொழுந்தையும் ஒவ்வொன்றாய் வாயில் போட்டு மென்ற படி பாதையில் நடக்கின்றாள். அந்த ஒவ் வொன்றிலும் ஒரு குருத்தையும் இரண்டிலையையும் தவிர வேறிருக்காது. பித்துப் பிடித்த இந்த நிலையிலும் படித்த கைப்பழக்கம் மாறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லிடுக்கு வழியாக இறங்கிய பச்சைச்சாறு வாய் விளிம்பில் வடிகிறது. தேயிலைக் கொழுந்தை சதாமென்று மென்று அவளுக்கு எச்சிலே பச்சையாகப் போய்விட்டது.

படியிறங்கி லயத்தை அடைந்தவள் ஒரு மொட்டைக்கத்தியை எடுத்து இடுப்பில் செருகிக்கொண்டாள். துண்டு துண்டாய் சில கயிறுகளைத் தேடி எடுத்து முடிந்து முடிந்து நீட்டாக்கி சுருட்டி எடுத்துக் கொண்டு வெளியே நடக்க எத்தனித்தவளை

''எங்கே போறே பெரியாயி'' என்று இழுத்து நிறுத்திய சிறுமி பாலாயியின் தங்கை மகள்.

''அட சிறுக்கி மவளே... எங்கே போறேன்னா கேட்டே சனியன் புடிச்ச மாதிரி... வாயைக் கிளிச்சிப்புடுவேன்...'' என்றவள் வாசற்படியில் கோழிக்குடாப் பருகே உட்கார்ந்து விட்டாள்.

கருகச் சுட்ட ஒரு ரொட்டியும் பழைய கருவாட்டு குழம்பும் ஒரு தட்டில் போட்டு அவளருகே வைத்து விட்டு திருகைக்கல்லில் காலூன்றி அரைச் சுவற்றின் மேல் ஏறுகின்றாள் சிறுமி.

''ஏட்டி... ஏண்டி செவுத்துல ஏறுரே...'' என்ற கிழவிக்கு ''பொட்டெடுக்க..'' என்று கூறிவிட்டு அரைச்சுவற்றில் நின்று கூரைத் தகரத்தை எட்டித் தொடும் முயற்சியில் ஈடுபட்டாள் சிறுமி.

தார் பூசப்பட்ட கூரைத்தகரத்தின் உள் பக்கம் கறுப்புக் கறுப்பாய் பனித்துளி நிற்கும். எட்டி அதை விரலில் தொட்டு நெற்றியில் இட்டுக் கொள்வார்கள் சிறுமிகள்.

'கூடை கொண்டுவர மறந்து விட்ட' கதை கொழுந்துக் காட்டுடன் முடிந்துவிட்டது.

இப்போது பாலாயி கவ்வாத்து மலையில் நிற்கின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டி உலர்ந்த தேயிலை வாதுகளைத் தட்டிதட்டி இலைகளை உதிர்த்து விட்டு கட்டுக்கட்டாக அடுக்கி வைக்கின்றாள். பொட்டலுக்குப் பொட்டல்; கானுக்கு கான் என்று இலைதட்டி அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் தேயிலை மிளாருகள் இவள் அடுக்கியவைதான்! யாராவது அள்ளிக்கொண்டு போவார்கள்.

வெகுநேரம் விறகு பொறுக்கி முடித்துவிட்டு ஒரு இடத்தை சுத்தமாகக் கூட்டி அங்கே படுத்துக் கொள்வாள். தனியாகப் பேசிக் கொள்வாள்.

''நான் வெட்டுற வெட்டுக்கு எவன் எனக்கு சீக்குப் போட முடியும்...? என் ராசா வந்து அவனை சும்மா வுட்டுறுவாரா?

கோலம் போட்டதை அழிக்கப்புடாது அழிச்சாப் போடப்புடாது... ஏழு குருதை பூட்டுன ரதத்துல எங்க தொரை ஏறி வறயில யாரு மறிக்கிறது.. மறிக்கிறவனுக்கு இந்தக் கத்தி தான்'' என்று கத்தியை ஓங்கித் தரையில் கொத்துகின்றாள்.

திறந்து கிடக்கும் கரிய முதுகில் சூரியன் சுள்ளென்று சுடுகின்றது.

பரட்டு பரட்டென்று முதுகைச் சொறிகின்றாள். கருப்புத் தோலில் வெள்ளைக் கோடுகள் மூன்று மூன்றாய் விழுகின்றன.

''எல்லா வெறகும் பொறுக்கியாச்சு'' என்றவள் காதை வெடைக்கின்றாள்.

'பத்துல ஒன்னெடுத்தா ஒம்பது... பத்துல ரெண்டெடுத்தா எட்டு.. பத்துல மூணெடுத்தா...

தோட்டத்துப் பாடசாலை!

பாலர் வகுப்பு முதல் வகுப்புப் பிள்ளைகள் வாய்ப்பாடு படிக்கின்றனர்.

யார் யார் எங்கெங்கே நின்றாலும் அவரவர்கள் காதில் இந்த வாய்ப்பாடு விழவேண்டும். அப்போது தான் பள்ளிக்கூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம் போன தனது பிள்ளை படிக்கின்றது என்று திருப்திபட்டுக் கொள்வார்கள்.

இப்போது பரவாயில்லை. முதலாவது வகுப்புப் பிள் ளையே கழித்தல் வாய்ப்பாடு படிக்கிறது. அப்படி என்றால் அடுத்த வகுப்பிலாவது அந்தப் பிள்ளைக்குக் கணிதம் கற்பிக் கப்படும்.

கொஞ்ச காலத்துக்கு முன்பு நான்காவது ஐந்தாவது வகுப் புப் பிள்ளைகளுக்கே வாசிக்கத் தெரியாது.

சரியாகப் பத்து மணிக்கு வாத்தியார் வருவார். ஒரு பாலர்வகுப்புப் புத்தகத்தை மேசையில் விரித்து வைத்துக் கொள்வார். எல்லாரையும் வரிசையாக நிறுத்தி ஒவ்வொரு பிள்ளையாகக் கூப்பிடுவார்.

அணில் படம் பெரிதாகப் போடப்பட்டு கீழே அணில் என்று எழுதி இருப்பதில் எழுத்தை மறைத்துக் கொண்டு படத்தைக் காட்டி ''என்ன?'' என்பார்.

பையன் அணில் என்பான். 'வெறிகுட் வெறிகுட்... கெட்டிக்காரன் சட்டிச்சோறு தின்னு போ'.. என்று முதுகிலே நான்கு 'ஷொட்' கொடுத்து அனுப்புவார். பையனுக்கு அன் றைய படிப்பு அதுதான். அடுத்தவனிடம் ஆட்டுப் படத்தைக் காட்டிக் கேட்பார். முதுகிலே நாலு தட்டுப் போட்டு அனுப்பு வார். வரிசையாக வந்து கொண்டே இருப்பவர்களில் ஒருவன் கொக்குப் படத்தைப் பார்த்து 'குருவி' என்பான். செச்செச்சே.. 'கொக்கு' என்று சொல்லிக் கொடுத்து வெரிகுட் போட்டு முதுகில் நாலு தட்டுப் போட்டு அனுப்புவார்.

இந்த ஒரு சொல் படிப்பிலும் கூட அணில் சொன்னவன் அணில் தான் ஆடு சொன்னவன் ஆடு தான்.

அடுத்த நாளும் இடம் மாறாது! படம் மாறாது! பாடமும் மாறாது!

இந்த நவீன போதனா முறைக்குக் காரணம் இது தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் உலக யுத்தத்தின் போது தோட்டங்களில் இருந்த இளம் துரைமார்கள் எல்லாம் திடீர் திடீரென்று காணாமற் போய்விட்டார்கள். பிறகு தான் தெரிந்தது அவர்கள் எல்லாம் சண்டைக்குப் போய்விட்ட கதை!

அவர்களுக்குப் பதிலாக கூன் குருடு நொண்டி என்று கிழம் கிட்டைகள் வந்து சேர்ந்தன தோட்டங்கள் தோறும்.

அப்படி வந்ததில் ஒருவர் இந்தத் தோட்டத்திலும் இருந்தார். பூதக் கண்ணாடி போன்ற இரண்டு கண்ணாடிகளுக்குள் ஆழத்தில் இருந்தன அவருடைய இரண்டு கண்கள்.

கண்ணாடி என்ற பட்டப்பெயரை யாராவது சொன்னால் தொலைந்தது!

ஒரு முறை இவர் பாதை வழியே வரும் போது தார்ரோட்டில் கறுப்பில் சாக்பீசால் ஏதோ எழுதி இருந்ததாம். 'என்ன எழுதி இருக்கிறது' என்று உடன் வந்து கொண்டிருந்த கணக்கப் பிள்ளையிடம் கேட்டாராம். முதலில் தயங்கிய கணக்கர் பிறகு மெதுவாகக் கூறினாராம் ''கண்ணாடித்துரை'' என்று எழுதியிருக்கிறதென்று.

அந்த எழுத்துக்களை கடித்து விழுங்குவது போல் குனிந்து கொண்டிருந்த துரை விழப்போன கண்ணாடியை படக்கென்று மூக்குத் தண்டின் மேல் அழுத்திக்கொண்டு நிமிர்ந்தார்.

''மாஸ்டரை ஆபீசுக்கு வரச்சொல்'' என்றார்.

''பையன்களுக்கு எழுதச் சொல்லிக் கொடுக்காதே. என் பெயரையே எழுதுகிறானுகள் அதுவும் றோட்டில்'' என்று துரை வாத்தியாரிடம் கூறியிருப்பார்.

''எழுத என்ன சார் எழுத்தே சொல்லிக் கொடுக்கமாட்டேன் என்று வந்தவர் படத்தை மட்டுமே சொல்லிக்கொடுத்திருக்கின்றார். பாடத்தைச் சொல்லிக் கொடுக்காமல்.''

இது பழைய கதை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது பரவாயில்லை, ரூபா சதம் றாத்தல் அவுன்ஸ்: யார் அடி அங்குலம்: நாள் மணி நிமிஷம் என்று பிய்த்து வாங்குகிறதுகள்.

காதை விடைத்துக் கொண்டு நின்ற பாலாயிக்கு பாடசாலைப் பிள்ளைகள் வாய்ப்பாடு படித்த சத்தம் கேட்டிருக்க வேண்டும்.

''தொண்டைமான் கோழி கூவப் புறப்பட்டு வாறோமய்யா' என்று பாடியபடி பள்ளிக்கூடக் குறுக்கில் இறங்கிவிட்டாள்.

பாடசாலைக்குக் கீழே ஒரு காய்கறித் தோட்டம். பிள்ளைகளுக்குத் தோட்டவேலையும் தெரிந்திருக்க வேண்டுமாம்! தோட்டத்திலிருந்து படிக்கவரும் பிள்ளைகளுக்குத் தோட்ட வேலையே தெரியாதல்லவா! ஆகவே தோட்டவேலை செய்யச் சொல்லிக் கொடுக்கின்றார்கள். டைம் டேபிளில் தோட்ட வேலையும் இருக்கிறது. இன்ஸ்பெக்டர் அதற்கும் சேர்த்துத் தான் 'மார்க்ஸ்' போடுவார்.

பாடசாலைக் குறுக்கில் இருமருங்கிலும் பூத்துக் குலுங்குகின்றன டெய்சிப் பூக்கள். அதில் ஒன்றைக்கிள்ளி தலையில் குத்திக் கொண்டு நடக்கின்றாள் பாலாயி.

அரைச் சுவற்றுக்கு மேலாக அவளுடைய தலை தென்பட்டதோ இல்லையோ மாணவ மாணவிகள் கப்சிப்பென்றிருக்கின்றனர். பாதையில் அவளைக்கண்டால் மண்ணைவாறித் தூவியும் மறைந்தோடிப் போய் நோண்டிவிட்டும் வேடிக்கை பார்க்கும் அதே சிறுவர்கள் தான். இன்று ஆசிரியர் இருக்கிறார் அல்லவா? அது தான் அமைதி.

ஒரு பையன் மெதுவாகக் கூறுகின்றான் ''சார் சார்.. கிறுக்கி சார்.. இங்கே தான் சார் வர்றா...''

''சரி சரி சத்தம் போடாமல் இரு..''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கி அதட்டினாலும் உள்ளூரப் பயமாய்த்தான் இருக்கிறது. ஒரு நாளும் பாடசாலைக்கு வரமாட்டாளே.. யாரையாவது ஏதாவது செய்து விட்டாள் என்றால்...

''போய் சுருக்குணா கண்டக்டரய்யா கிட்ட சொல்லு... ஓடு..'' என்று மொனிட்டரை விரட்டுகிறார்.

பையன் வெளியே ஓடவும் பாலாயி உள்ளே வரவும் சரியாக இருக்கிறது.

''அறிவோம் நன்றாக குரு வாழ்க குருவே துணை... ம்ம்.. சொல்லுங்க.. அறிவோம்...''

எல்லாப் பிள்ளைகளும் சிரிக்கின்றனர்.

''இஹ்ஹிஹ்ஹி.. இளிச்சுடுங்க இளிச்சிட்டால் போதாது. அழத் தெரியணும் அப்பத்தான் பாடம் வரும்..''

பிள்ளைகள் பலமாகச் சிரிக்கின்றனர். ஆசிரியர் சத்தம் போடத்தோன்றாமல் சிரிப்புக் கூடுதலாக எழும் இடத்தை முறைக்கின்றார்.

மேசையில் கிடந்த பிரம்பை எடுத்து 'பட்பட்'டென்று மேசைமேல் தட்டி வாயில் விரலைவைத்து ''ஷ்'' என்கின்றாள் பாலாயி.

ஆசிரியர் நாற்காலியுடன் பின்னால் நகர்கின்றார். எழுந்து அப்பால் போகவும் பயம். அவள் நாற்காலியில் உட்கார்ந்து விட்டால்..!

சாக்பீசை எடுத்து கரும்பலகையில் ஒரு முட்டை போடுகின்றாள் வெண்கட்டி கரும்பலகையில் வழுக்கிக் கொண்டோடுகிறது.

''இது என்ன...!'' முதல் பெஞ்சில் உள்ள பெண்ணைக் கேட்கின்றாள். அவள் மௌனமாக நிற்கின்றாள்.

ஆசிரியர் றோட்டைப் பார்க்கின்றார், போன பையன் வருகின்றானா என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சொல் லேண்டி சோத்து மாடே'' கத்துகின்றாள் கிழவி.

'முட்டை' பயந்துவிட்ட சிறுமி கூறுகின்றாள்.

'உம் மண்டை..! வட்டம் என்னது... வட்டம். எங்கே தொடங்குது எங்கே முடியுதுன்னு தெரியுமா?''

ஆசிரியர் கூரையைப் பார்க்கின்றார், போன பையன் ஓடிவருகின்றான். ஒரு ஆளையும் ஒரு பென்ஷன் கிழவியையும் கூடவே கூட்டிக் கொண்டு கண்டக்டரய்யா வருகின்றார்.

''ஏனைசே துரைகிட்டச் சொல்லி இதை அங்கொடைக்கு அனுப்பிடவேண்டியதுதானே. பெரிய கறைச்சல் தோட்டத்திலே...''

சாக்பீசையும் பிரம்பையும் மேசைமேல் வைத்து விட்டு மாஸ்டரய்யாவின் கால்களைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டு ''குரு வாழ்க குருவே துணை'' என்று நிமிர்ந்த கிழவி கேட்கின்றாள்.

''ஏஞ்சாமி நீங்க படிச்சவங்க நாலும் தெரிஞ்சவங்க நான் எதுக்கு அங்கொடைக்குப் போகணும். எனக்கென்ன பைத்தியமா புடிச்சிருக்கு... நீங்களே சொல்லுங்க சீலையைக் கிழிச்சுப் போடுறேனா? இல்லே சிவனேன்னு போறவங்களுக்கு கல்லடிக்கிறேனா ஏவூட்டு அவரைக்காணோம் தேடி அலையிறேன். ஏவூட்டு தெய்வத்தைக் காணோம் ஏங்கி நின்னு வாடுறேன்..'' என்றவள் அழுதபடியே பாடுகின்றாள்.

''ஏ... சவுக்கு மரமே. எஞ்சாயி தொரை தேயிலையே.
நெருப்புக்குச்சி மரமே - நான் நின்னு முகம் வாடுறனே..'' அப்படி ஏன் சொன்னோம் என்றாகிவிட்டது ஆசிரியருக்கு.

''சரி சரிபோ..'' கண்டக்டரய்யா பிரம்பால் தள்ளுகின்றார்.

பென்ஷன் கிழவி அவளை அணைத்து அழைத்துப் போகும் போது சொல்லுகின்றாள். ''பாவம் இப்புடியா இருந்தாள்!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

ஆமாம் இப்படியா இருந்தாள்! பாலால் ஆகி வந்ததால் தான் இவளுக்கு பாலாயி என்று பெயர் வந்ததோ என்று கூறுமாப் போல் இருந்தாள்.

பளிங்காய் மின்னும் உடலின் துணிமூடாத பாகங்களில் - முன் கை கழுத்து - இத்தியாதிகளில் பச்சையாய்த் தெரியும் உள்ளே ஓடும் நரம்புகள்.

கண்படைத்த பாவத்துக்காக என்று இன்று அவளது திறந்து கிடக்கும் உடலை மூடிவிட்டு போகும் இதே தோட்டத் தவர்கள் கண்படைத்த பயனுக்காக அவளுடைய கணுக்காலை யும்; இடுப்பையும்; கழுத்தையும் கண்டு பூரித்ததுண்டு அது ஒரு காலம்!

எரிக்கும் சூரியனை மேற்கு மலைத்தொடர்கள் தங்களுக் குள் இழுத்துக் கொள்ளும் இளமாலை நேரங்களில் தான் அவள் குளிக்கக் கிளம்புவாள். அப்போது எத்தனை வாலிபர் கள் சுற்றி வந்திருக்க மாட்டார்கள். மேலும் கீழுமாய்! கழுத்தி லிருந்து -(குளிப்பதற்காக இறக்கிக்கட்டிய சேலை வரை) - மார்புவரையாவது பார்த்து விடமாட்டோமா அந்தப்பொன்மே னியை என்று.

பட்டணத்துப்பெண்கள் என்றால் பஸ்ஸிலும் பாதையி லுமே பார்த்து விடலாம் பாதி மார்பையும் முக்கால்வாசி முதுகையும்.

ஈரச்சேலை நடையை இழுத்துத் தடுக்க அவள் அடி எடுத்து வரும் அழகிருக்கிறதே! அது ஒரு மோக வடிவு.

காதளவோடி சுருண்ட கேசத்தை உச்சியிலிருந்து பிடரி வரை கோடிழுத்து இரண்டாய்ப் பின்னி கட்டிய மல்லிகைப் பூவை காதண்டை செருகி சடையை முன்னிழுத்து திரண்டு நிற்கும் மார்பின் மேல் புரளவிட்டு; மஞ்சள் பூசி மின்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியில் ஆணித்தலையளவு குங்குமப் பொட்டை அழகாக இட்டு பாதையில் இறங்கினால் என்றால்-

இன்றுபெரிய துரையாய் இருப்பவர் கூட இந்த டிவிஷனில் அப்போது சின்னதுரையாய் இருந்தபோது இவளைக் காண நேர்கையில் நின்று ஒரு முறை திரும்பிப் பார்த்து முனகிக்கொள்வாராம் ''டாம் டீசண்ட் கேர்ள்'' என்று.

இப்போதைய குமர்களும் தான் பூ வைக்கின்றன. பொட்டிடுகின்றன.

தோட்டத்தில் குண்டுமல்லிகைச் செடி குலுங்கி நிற்கும். இவர்கள் சம்பளத்து வாசலில் வாங்கி வந்த பிளாஸ்டிக் மல்லிகையை வளைத்து வைத்துக் கொள்வார்கள்.

காய்ச்சிவைத்த பொட்டு கொட்டங்காய்ச்சி கொள்ளாமல் ஒட்டடை பூத்துக்கிடக்கும் மூலையில். இவர்கள் மைசூர் பருப்பை 'கம்' தொட்டு நெற்றியில் இட்டுக் கொள்வார்கள்.

இல்லாமையால் ஒருவன் செய்வதை நாகரீகம் என்றெண்ணி இருப்பவனும் செய்து கொள்ளும் போலித்தனம்.

பாலாயியின் அத்தை மகன் அடுத்த காம்பிராவில் இருந்தான்

தோட்டமே உலகம் என்றிராமல் தோட்டத்துக்கு வெளியேயும் நடப்பவைகளை அறிந்து கொள்ளும் ஆர்வம் கொண்டவன்.

நாட்டுக்குப் போய் கள்குடிப்பதையும்;நாசுக்காக பீடி இழுப்பதையும் விரும்பாதவன்.

இந்த நல்ல வாலிபன் பாலாயியைப் பார்க்கும் பார்வை இருக்கிறதே! அது உளிபோல் அவள் மனதைச் செதுக்கியது! மின்னல் போல் அவள் மனதுள்ளே ஊடுருவியது. அந்தப் பிஞ்சு மனதைப் பிசைந்து அதனுள்ளே அவனுருவைப் பிடித்து வைத்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் இருவரும் பார்த்துக் கொள்ளும் பார்வை; சிரித்துக் கொள்ளும் விதம்: மேலிமைக்குள் விழி செருக அவன் கிரங்கிவிடும் கோலம்: நீரில் விழுந்த சிட்டாய் அவளு டைய இமைகள் படபடக்கும் பாவம்-

திரை விலகி தெரியவந்தது பெரியவர்களுக்கு.

சிரித்துக் கொண்டார்கள்.

இரண்டு வீட்டுக்கும் சேர்ந்தாற்போல் பந்தல் எழுந்தது!

எல்லா வீடுகளுக்கும் கேட்குமாப்போல் லவுட்ஸ்பீக்கரில் பாட்டெழுந்தது.

அத்தை மகன் பாலாயியின் அவரானான். கொழுந்தெடுக்க வென்று அவள் மலையேறியதே மணமான பிறகு தான்.

புதுப்புது அனுபவங்கள் வாழ்வின் மாயைகள் வளர்த்துவி டும் ஜாலங்கள். தண்ணிலவு பொழியும் குளிர்ச்சிகள் தகிக்கும் அனற்பொறிகள்.

புதிதாகப் பெயர் பதிந்தவள் எத்தனையோ சம்பளம் வாங்கிவிட்டாள்.

ஜன்னலுக்குப் பின்னால் அவள் பார்த்து வளர்த்த வாழை தொண்டையும் பூவுமாய் கனக்கிறது.

அவளுக்குப் பின் ஒருவனுக்குக் கழுத்தை நீட்டிய அவ ளது தங்கை ஐந்தைப் பெற்றுவிட்டாள்-நான்கு வருடத்தில்.

இவளுக்கோ வயிறு திறபடவே இல்லை.

ஊர்க்கடவுள்கள் ஒன்று பாக்கியில்லை. புற்றுக்குப் பாலா பிஷேகம். அரசமரச் சுற்று. ஒரு நாள் உபவாசம். இப்படி எல்லாம் செய்து செய்து மரத்துவிட்டது.

நம்பிக்கை ஒளிவிட உள்ளத்தில் ஒன்றுமில்லை.

ஆறைப் பெற்று அவதிப்படும் தங்கை நினைத்துச் செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியமா என்று அங்கலாய்த்துக் கொண்ட போது குடும்பக்கட்டுபாடு பற்றி அதன் முறைகள் பற்றி நன்மை பற்றி எல்லாம் தனக்குத் தெரிந்த தமிழில் உளறிக் கொட்டிவிட்டுப் போகும் தோட்டத்து டிஸ்பென்சர் மலடாய் நின்று கொண்டு மனம் வெதும்பும் பாலாயியைக் கண்டும் காணாதது போல் மறுபக்கம் பார்த்துக் கொண்டு போய்விடுகின்றாரே ஏன்?

மனிதனின் பலவீனத்தை அவ்வப்போது சமயம் வாய்க்கையில் எல்லாம் அவனுக்குணர்த்தி வைக்கும் இறைவனின் திறனே திறன்.

''கல்யாணமாகி ஐந்துவருடத்துக்கு மேல் ஆகிவிட்டாலும் உனக்கு முக்கி முக்கி இருபத்து மூணு வயசுதானே ஆகிறது. ஒரு பெரிய டாக்டரிடம் சென்று பரிசோதனை செய்து பாரேன்'' ஆயம்மாதான் கூறினார்கள்.

அதைப்போய் அவள் யாரிடம் கூறுவாள். நம்மவர்களைப் பற்றித் தெரியும்தானே!

'காலாகாலத்துல ஒரு கல்யாணத்தைக் கட்டி வை... கல்யாணத்தைக் கட்டி வை' என்பார்கள். எதற்காகக் கல்யாணம் என்பதுபற்றி ஒருவருடன் மற்றவர் மனம் திறந்து பேசமாட்டார்கள் —

''நானு என்னங்கம்மா பண்ணட்டும்'' என்று மழுப்பிய பாலாயியை அர்த்த புஷ்டியுடன் பார்த்த ஆயம்மா அவளுடைய கணவனிடம் இந்த யோசனையைக் கூறினார்கள்.

மருந்து, மாத்திரை, ஊசி, என்று அதுவும் நடந்துவிட்டது. ஒன்றும் ஆகவில்லை.

தங்கச்சியின் பிள்ளைகளை பெற்றவளை விடவும் பெரிதாக நேசித்தாள் பாலாயி. சம்பளத்து வாசலில் இருந்து வரும்போது பிஸ்கட்; சீனிபோலை; கடலை; பெலூன் என்று அதுகளுக்கு ஏதாவது வாங்காமல் வரவே மாட்டாள்.

தீபாவளிக்குப் பட்டாசு, பொங்கலுக்கு புதுச்சட்டை, பலகாரம் அது இதென்று பிள்ளைகளைத் திணறடிப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அகத்தி ஆயிரம் காய்ச்சாலும் பொறத்தி பொறத்தி தானே'' என்று எதிர் வயத்துக் கிழவி தாவாயை தோளில் இடித்துக் கொள்ளும் போதெல்லாம் இவளுக்கு சுருக்கென்று மனதைத் தைக்கும்.

காகிதத்தைப் போட்டு நெருப்பை மூடிவைப்பது போல் அந்தப் பிள்ளைகளைப் பராமரிப்பதன் மூலம் தனது ஏக்கத்தை மறைக்க எண்ணும் அவளுடைய பேதை நெஞ்சம் குமுறிக் கொண்டு எரியும், கொழுந்து விட்டு.

அன்று தவறணைமலை கொழுந்து, தவறணையிலே தேயிலைக் கன்றுகளை பிறந்த பிள்ளைகளைக் காப்பது போல் பாதுகாத்து வளர்க்கின்றனர். பெயர்த்தெடுத்து பத்திரமாக மலையில் நடும்வரை அக்கன்றுகளுக்குக் கிடைக்கும். பாதுகா வல்...!

நாற்றாங்காலில் நெற்பயிர் தளதளத்து நிற்பது போலத் தான் தவறணையில் தேயிலைக் கன்றுகள் பாத்தி பாத்தியாக தளதளத்து நிற்கும்.

இவைகள் எல்லாம் வங்கிக் கன்றுகள் — ஆனால் விதைகளில் இருந்து முளைப்பவை அல்ல. தேயிலையையே கூட இளம் கிளையை வெட்டி ஊன்றி ஒரு புது உயிரைக் கொண்டு வந்து விடுகின்றார்கள். இவைகளுக்குக் கூடுதலான கவனம் தேவை.

இது கடவுளின் விளையாட்டல்ல! மனிதனின் விளை யாட்டு! என்பது மனிதனின் எண்ணம்.

ஒரு புது உயிர் என்பது மனிதனின் விளையாட்டல்ல! கடவுளின் விளையர்ட்டு!

மழை ஊற்றுகிறது! ஓ வென்று ஊற்றுகிறது!

மலையடியில், கானில், ரோட்டில், குறுக்கில் எங்கு பார்த்தாலும் ஒரே மழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணும் சேறுமாகக் குழம்பிக் கொண்டு மஞ்சளாக ஓடுகிறது மழை நீர்.

சிரித்து நிற்கிறது தேயிலை. சிலிர்த்து நிற்கின்றாள் மண் மாதா.

கற்பாறை வெடிப்புகளுக்குள்ளும் சலசலத்தோடுகிறது நீர், குடுகுடுவென்று.

பாலாயி பாலில் குளித்து நிற்கின்றாள் — பரவசம்.

இத்தனை வருடங்களுக்குப் பிறகு அவள் இந்த மாதம் விலகவில்லை.

''வெள்ளைக்காரன் கண்ணுதான் எம்புள்ளைக்கு விடியு தில்லே'' என்று கரித்துக் கொட்டிக் கொண்டிருந்த பாலாயியின் தாய் ''பாவம் தொரை மவராசன் நல்லாயிருக்கணும்'' என்று வாபஸ் பெறுகின்றாள். பூஜை புனஸ்காரங்கள் குறைவின்றி நடக்கின்றன.

எல்லாரும் அவளை உட்கார்த்தி வைத்துக் கவனிக்கின்ற னர்.

நீ மலைக்கே போக வேண்டாம் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டான் பாலாயின் கணவன்.

அவனுக்கு மட்டும் ஆசையாக இருக்காதா பின்னே! தான் தகப்பனாகப் போகின்ற மகிழ்வு! படித்துப் பெறும் பட்டமா அது! அன்று விலை கொடுத்து வாங்கும் பண்டமா?

ஆயிற்று.

பட்டியில் கட்டியிருக்கும் கிடாரியை மெதுவாகத் தடவிக் கொடுத்துத் தாஜா பண்ணி அடிவயிற்றில் கை வைத்துப் பார்க்கின்றான் அவன் — கன்று முட்டுகிறதா? என்று.

ஆயம்மாவும் பாலாயின் அடி வயிற்றில் கைவைத்துப் பார்க்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீட் ரூட் கிழங்கு அரை டசனும். நோக்கல் கிழங்கு அரை டசனும் பிடுங்கி அலசி நீர் சொட்டச் சொட்ட இலை நொருங்க சடம்புக் கயிற்றால் இறுகக் கட்டித் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு தோட்டத்து ஆஸ்பத்திரியை அடைகின்றான் பாலா யின் கணவன்.

சின்ன டாக்டரய்யா மருந்து கலக்கிக் கொண்டிருக் கின் றார்.

பெரியவர் கொடுத்த மருந்துத் துண்டுடனும், போத்தலேந் திய கரங்களுடனும் கியூவாகப் போய் ஜன்னலண்டைக் குழுமி நிற்கின்றனர் நோயாளிகள்.

மருத்துவ சாலைகளுக்கே உரிய அந்த மணம் - பலதரப் பட்ட மருந்துகளின் நெடி குப்பென்று மூக்கில் ஏறி மூளை யைக் குடைகிறது.

ஆஸ்பத்திரியில் அய்யா நிறுத்தியிட்ட நோயாளிகளில் எழுந்திருக்க முடியாமல் அல்லது சோம்பேறித் தனமாகப் படுத்துக் கிடப்பவர்கள் போக மற்றையோர் சிமிந்திக் கட்டில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கின்றனர். உட்கார்ந்து கொண்டி ருக்கும் நோயாளிகளை ஒதுக்கி - ஒதுக்கி தோளில் கிழங்கு மூட்டையுடன் கால் வைத்துத் தாண்டி ஆஸ்பத்திரியின் உள் வராந்தையைத் தாண்டி ஆயம்மாவின் 'ரூமை' அடைகின்றான் பாலாயின் கணவன்.

''நீங்க தாம்மா சாமி மாதிரி, உண்டாகலியேன்னு தவம் கிடந்து, இப்ப உண்டாகி வளந்த சீவன் உருப்படியா வெளியே வறனுமேன்னு தவம் கெடக்குறோம். ஒண்ணா இருக்குற வளை தாயும் பிள்ளையுமா எங்கிட்ட ஒப்படைக்க வேண்டி யது நீங்கதாம்மா...''

அவன் கண்கலங்குகின்றான். ஆயம்மா தேற்றுகின்றார்.

''எல்லாருக்குமே உங்களைத்தாம்மா நம்பி இருக்கேன். நான் வர்றேன்மா'' என்றவன் கிழங்குகளை பேப்பர் கூடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் அருகே வைத்துவிட்டு பாலாயியைப் பார்க்கப் போகின்றான்.

மனைவியைப் பார்த்துப் பேசி ஆறுதலாக அவளுக்கு ஒரு நாலு வார்த்தைகள் கூறிவிட்டு வெளியிறங்கி நடந்தான்.

ரோட்டில் மண்ணெல்லாம் கழுவிக் கொண்டு போய் விட்ட படியால் பாதை 'பல்லைக் காட்டிக்' கொண்டிருக்கிறது - கரடு முரடாய்.-

பதவிசாய்க் காலூன்றி நடக்கின்றான். தோளில் சுமை இல்லாவிட்டாலும் மனதிலே சுமை.

மனைவி சுகமாகப் பெற்றுப் பிழைத்து வரவேண்டுமே என்ற மனச்சுமை.

திருமணமான நாள் தொட்டு இந்நாள்வரை 'ஐயோ ஒன்றில்லையே' என்ற கவலை!

மனைவி உண்டாகி இருக்கின்றாள் என்பது தெரிந்த பிறகு 'அய்யோ அவள் பெற்றுப் பிழைக்க வேண்டுமே' என்னும் கவலை.

பெற்றுப் பிழைத்து வந்த பிறகு ஒன்றன்பின் ஒன்றாய் ஓராயிம் கவலைகள்.

வாழ்விலே கவலை என்பது போய் கவலையே வாழ்வாகி விட்ட இன்றைய நிலையில் இளைஞர்கள் கெட்டிக்காரர்கள். ''கோட்டையின் வெளியே உள்ளவர்கள் உள்ளே போகத் துடிக்கின்றார்கள்'' என்பதைக் கூடுமானவரை பொய்யாக்கி விடுகின்றனர்.

மனைவியின் இன்றைய நிலை நீண்ட காலத்துக்குப் பிறகு அவள் கருவுற்றிருப்பதால் நடக்கக் கூடாதது ஏதும் நடந்து விடுமோ என்ற அச்சம். இத்தியாதி நினைவுகளுடனே நடந்து கொண்டிருந்தவன் லயத்து மேட்டில் ஏறுகின்றான்.

''ஊர்லேருந்து கடுதாசி வந்திருக்கு பெரியப்பா...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலாயியின் தங்கை மகள் பாவாடையுமில்லாமல் ஒன்றுமில்லாமல் தனது குஞ்சுப் பாதங்களால் லயத்துக் கான்கட்டைத் தாண்டி ஓடி வருகின்றாள்.

சிவப்பு முத்திரையுடன் அந்த இளநீலச் சதுரக் கூட்டை பார்க்கையிலேயே தெரிகிறது இந்தியக் கடிதம் என்று.

குழந்தையையும் தூக்கிக் கொண்டு கடிதத்தையும் வாங்கிக் கொண்டு உள்ளே நுழைகின்றான்.

ஊரிலிருந்து யார் எழுதுவார்கள் என்பது தெரிந்ததுதான்.

'இலங்கைப் பிரஜா உரிமைக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்' என்ற சட்டம் வந்த அந்த ஆதிமுதல் நாளிலேயே ''நான் ஊருக்குப் போயிடறேன்டாப்பா'' என்று இளைய மகனையும் இழுத்துக் கொண்டு கடல் தாண்டிவிட்ட அவனுடைய தாயிடம் இருந்துதான் கடிதம் வந்திருக்கும். தம்பிதான் எழுதியிருப்பான்.

யூகம் பிழைக்கவில்லை! தம்பி தான் எழுதியிருக்கின்றான்.

இவன் ஏன் இப்படி இடிந்து போகவேண்டும்! நாட்டெருமை புகுந்த தேயிலை மலைபோல் இவனுடைய முகம் ஏன் நசுங்கிப் பிய்கிறது!

முழுக்கடிதத்தையுமே மூன்றாவது முறையாக வாசிக்கின்றான் என்றாலும் ஒரு சில வரிகள் கண்ணில் கோர்த்து நிற்கின்றன.

'..... இப்பவும் இங்கே ஆயாளுக்கு ரொம்ப வருத்தம். ஆச்சி போச்சின்னு கிடக்குது...' அவங்க படும் கயிஸ்டத்தைப் பாத்தா இறந்துடறது தேவலாம்னு தோணுது... ராசா வந்துட்டானா... ராசா வந்துட்டானான்னு எந்த நேரமும் பெனாத்திக்கிட்டே கெடக்குது. நீ வந்து ஒரு கரண்டி பால் ஊத்தாட்டி உயிரு போவாதாம். என்னால் அதைப் பார்த்துக் கொண்டு இருக்க முடியதில்லை. உடனே வந்துசேரு. மயிற்றவைகளை நேரில் பேசிக்கிறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாலைந்து வரிகள் அவனை வெகுவாகக் குழப்பி விட்டன.

இவனை அவள் மலையில் தான் பெற்றாளாம். பிறகு லொறியில் ஏற்றி ஆசுபத்திரிக்கு கொண்டு போனார்களாம்.

பத்து மாதம் இவனையும் சுமந்து கொண்டு, குடிகாரக் கணவனின் கொடுமைகளையும் உடன் சுமந்து, மனச் சுமையும் வயிற்றுச் சுமையும் போதாதென்று - வயிற்றுச் சுமை வழிந்தி றங்கும் அந்த கடைசி நிமிடம் வரை தலையில் கொழுந்துக்கூ டையையும் சுமந்திருக்கின்றாள்.

உருட்டி விடும் கற்கள்: வழுக்கிவிடும் மலைக்குறுக்கு கள்; ஒடிந்து நிற்கும் ஒற்றையடிப் பாதைகள்; உயர்ந்த மலை உச்சிகள்; படுபள்ளங்கள்; இத்தனையிலும் ஒரு நிறைமாதப் பிள்ளைத்தாய்ச்சி எப்படி ஏறி இறங்கி வேலை செய்தாளோ?

ஒரு மாதம் இரண்டு மாதம் வரை அல்ல ஒன்பதாவது மாதக் கடைசி வரை!

ஓடிப்போய் பார்த்துவிட்டு ''ஐயய்யோ ஓடியாங்களேன்'' என்று பக்கத்து நிரைப் பெண்கள் கூச்சலிட்ட இறுதி நிமிடம் வரை!

இப்போதைய பெண்களும்தான் இருக்கின்றார்களே!

பெறுகின்றார்கள் தான் இல்லை என்று சொல்ல வர வில்லை. இரண்டாவது மாதத்திலேயே இஞ்செக்ஷன் தொடங் கும். பிறகு கால் வீக்கம். கை வீக்கம். ஐந்தாவது மாதத்தில் அம்மா வீடு போக வேண்டும் என்னும் மன வீக்கம். எழுந்தால் நாற்காலி. விழுந்தால் கட்டில். ஒன்பதாவது மாதத்தில் ஆஸ்பத் திரி. என்ன செய்வேன்... எப்படிப் பெறுவேன் என்னும் மன ஓலம்...

ஓடிவிட்ட காலத்தை இன்றையதுடன் ஒப்பிடும் போது எல்லா ரீதியிலுமே ஒரு பலவீனம் தென்படத் தான் செய்கிறது - உலகம் முதுமை அடைகிறதோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதாய் அங்கே, துடித்துக் கிடக்கும் கோலம் இவனைக் குழப்புகிறது.

தொண்டைக்கும் நெஞ்சுக்குமாக 'கர்கர்' ரென்று இழுத்துக் கொண்டு கிடக்கும் உயிர்; அந்த உயிரின் அணுவில் தெறித்து விழுந்த இவனுக்காக - அந்த இரத்தத்தில் ஊறிக் கிடந்த இவனுக்காக ஒரு கணம் எண்ணி கணம் எண்ணிக் காத்துக் கிடக்கிறது.

இந்த நிமிடம் வரை பெறக் கிடக்கும் மனைவிதான் அவன் மனம் முழுக்க வலம் வந்து கொண்டிருந்தாள்.

பெற்றுப் போட்டவள் அங்கே எமனுடன் போராடிக் கொண்டிருக்கும் அவலம் மனைவியின் நினைவை மனதில் இருந்து கழுவிவிட்டு விட்டது.

ஆணாகப் பிறந்தவனுக்கு எத்தனையோ உலகங்கள்.

தன் வீடு - தன் மனைவி - தன் குடும்பம் - அது ஒரு உலகம்.

தொழில் பார்க்கும் இடம் -அது ஒரு உலகம். உத்தியோகம் பார்க்காத ஆணை ஆண் என்று யார் ஒத்துக் கொள்வார். புருஷ லட்சணம் உத்தியோகமாயிற்றே!

தொழில் பார்க்கும் இடத்தில் ஒரு கவலை என்றால் அது அவனுடைய கவலை. மகிழ்வென்றால் அது அவனுடைய மகிழ்வு. இல்லை என்றால் அவன் ஒரு பொறுப்புள்ள - உண்மையான ஊழியனாக இருக்க முடியாது.

பெற்றோர்; உற்றார் - உறவினர் - அது ஒரு உலகம்.

நண்பர் கூட்டம் - அது ஒரு உலகம். இன்னும் எத்தனையோ உண்டு. அத்தனையிலும் அவன் முக்கிய அங்கம் வகிக்க வேண்டியவனாகின்றான்.

அத்தனையிலும் வரும் தொல்லைகளுக்கு ஏதாவது பரிகாரம் - பொறுப்புகளுக்குத் தோள் - மகிழ்ச்சிகளுக்கு ஒரு இன்முகம் அவன் கொடுக்கத்தான் வேண்டி இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கென்றால் - அதுவும் நம் பெண்களுக்கென் றால் - அப்படி இல்லை. அவர்களுக்கு உலகமே ஒன்று!

தன் கணவன் - தன் வீடு; தன் குடும்பம்.

தொல்லைகள், துயரங்கள் மகிழ்ச்சிகள் எல்லாம் அதிலி ருந்துதான்.

ஆகவே ஆணாகிய அவன் தன் மனைவியின் நினைவை ஒரு நொடி மறந்து விட்டது குற்றமாகாது!

அதற்காக அவனுக்கு மனைவியிடம் அன்பில்லை என் றும் ஆகாது!

அவனுக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. எல்லாமே மரத்து விட்டன.

அங்கே இருந்து வா எனறால் இங்கே இருந்து போய் விட முடியுமா?

என்னதான் தாய் சேய் உறவென்றாலும் அங்கிருப்போ ருக்கு இங்கத்தைய நிலை புரிவதேயில்லை.

எமனே இந்தியாவில் இருந்துகொண்டு இங்கிருப்பவனு டைய உயிரைப் பிடிக்க முடியாதே...!

இவனால் எப்படிப் போக முடியும்! அதுவும் உடனடி யாக! தனது தாயின் மரணத்துக்கு முன்னால் பத்து மாதம் சுமந்து பெற்ற அவளுக்குக் கடைசி பாலூற்ற!

இந்தியாவுக்குப் போக வேண்டும் என்ற நினைவு - நிர்ப்பந்தம் - என்று ஒருவனுக்கு ஏற்படுகின்றதோ அன்றே அவனுக்கு 'பொக்' கென்று தலை நரைத்துப் போகும்.

அப்பேற்பட்ட பிரச்சனையாயிற்றே அது!

இதை எல்லாம் எண்ணிப் பார்க்கும் நிலையில் அவன் இல்லை.

இப்போது பார்க்காவிட்டால் இனி எப்போது பார்க்க முடியும்! அந்தக் கோவிலில் இனி எப்போது வழிபட முடியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு சிரமப்பட்டாமல் வேறு எதற்கு சிரமப்படப் போகின்றான்.

எப்படிப் போவது என்ற எண்ணமே அவனுள் எழ வில்லை. எப்படியாவது போயாக வேண்டும்.

பக்கத்து லயத்துக்கு அடிக்கடி வந்துபோகும் அந்த முதலா ளியின் நினைவு ஏன் திடீரெனத் தோன்றுகிறது.

வெகு நேரக் குழப்பத்திற்குப் பிறகு சட்டையை மாற்றிக் கொண்டு றோட்டுக்கிறங்கினான்.

மேற்கு மலைத் தொடர்களுக்கப்பால் வானம் சிவந்து குழம்புகிறது. பூந்தோட்டம் போல் அழகாக.

பதுளைக்குப் போகவென்று பஸ்ஸுக்காகக் காத்து நிற் கும் அவனுடைய மனதும் குழம்பித்தான் கிடக்கிறது.

மலைக்கன்னியின் மடியில் சூரியன் புதைந்துவிட்ட பிற கும் இளங்கதிர்கள் பொன்னாய் மின்னுகின்றன.

வானம் இருள்கிறது. தேயிலை கருக்கிறது. பஸ் வர வில்லை.

நைட் ஸ்கூல் பையன்கள் ஒரு லயத்திலிருந்து இன்னொரு லயத்துக்கு நடை போடுகின்றனர்.

தோட்டத்து றோட்டில் ஓடுவது ஒரே ஒரு பஸ். 'அரை றாத்தல் பான்' என்று அழகாக அந்தப் பகுதி மக்களால் பெயர் சூட்டப்பட்ட அந்தக் குட்டி பஸ் மேலும் கீழுமாய் எட்டு நடை ஓடும். மேலே போயிருக்கும் டிரைவர் நினைத்தால்தான் பஸ் இனிக் கீழே வரும்.

அரசாங்க சேவை தானே!

இருட்டி விட்டது! டிரைவர் நினைத்தால் வருவான். இல்லாவிட்டால் நல்ல புத்தகம் புதுக்கள்ளாக இரண்டு போத் தல் அடித்து விட்டு அங்கு உலவும் சிலை நிகர் சிங்கள பெண்களை நாகரீகமில்லாமல் முறைத்துப் பார்த்துக் கொண் டும் கேலி செய்து கொண்டும் உட்கார்ந்து விடுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பெண்களும் கடைந்தெடுத்த தங்கள் அழகை இவன் ரசிப்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்வார்கள்.

லேட்டஸ்ட் நாகரீக ஆடைகளுடன் மிகவும் குரங்குத்தன மாக அவன் இருப்பதே அதற்குக் காரணம்.

மார்பு விம்ம வாய்க்கு நூறு 'மாத்தியா' போடுவார்கள். பிறகு அவனுக்கு பஸ் ஓட்டும் நினைவா எழும்!

மேல் வளைவில் ஒரு வெளிச்சம் பளிச்சிடுகிறது!

''பஸ்தான்... இல்லை இல்லை துரையின் காராக இருந்தாலும் இருக்கலாம்... கையை கிய்யை நீட்டிவிட்டால் தொலைந்தது...''

மனவோட்டத்துடன் கண்களைக் கூர்மையாக்கி பார்வையை ஓட்டினான்.

வாடகைக் கார்தான்! கையை நீட்டி ஏறிக் கொண்டான்.

★★★

**''போ**கலாம்.. முடியாமல் என்ன! எத்தனை பேர் போகலே வரல்லே... ஆனா யாருக்கும் தெரியக் கூடாது நீ எங்கே போறேன்னு. கண்டிக்கோ கொழும்புக்கோ போறதாகச் சொல்லிவிட்டு கௌம்பிறு. நாளைக்கு இங்கே கிளம்பிட்டா நாளன்னிக்கு தோணில ஏறிடலாம்... சுருக்குன்னு வந்துடனும்ன்னியே அது உன் கையில் இருக்கு. போனதும் சட்டுபுட்டுன்னு வேலையை முடிச்சுக்கிட்டு கௌம்பிட்டா சரி.. மூட்டை முடிச்சு ஒண்ணும் வச்சுக்கப்புடாது.. நாளைக்கு இன்னேரம் இங்கே இருக்கணும்...''

உருண்டு விழுந்து விடுவதுபோல் கீழிறங்கிய விழிகளுடன் மிகவும் மெதுவாகப் பேசுகின்றார் முதலாளி.

பெரிய டக்டரய்யா காலில் விழுந்தாயிற்று ''நீங்கதான் சகலமும்'' என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயம்மாவின் கைகளைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டாகி விட்டது. ''உங்களை நம்பித்தான் இவளை விட்டுப் போகின்றேன்'' என்று.

முன்புறம் வளர்ந்து ஆடித்துவளும் வயிற்றுடன் முதுகை சப்பைட்டையாக சுவற்றில் சாய்த்துக் கொண்டு நிற்கும் பாலாயியை வைத்த கண் வாங்காமல் ஆழமாகப் பார்க்கின்றான்.

''போங்க நீங்க ஒரு பக்கம்... இப்படியா பாப்பாங்க...'' என்றவள் குன்னிப் போகின்றாள்.

அவளருகே நெருங்கி வந்தவன் இலேசாக அவளுடைய வயிற்றைத் தடவுகிறான்.

''இவன் வெளியே விழுவதற்கும் ஓடி வந்துடுறேன்.''

அவள் காதுக்குள் கூறியபடி மிகவும் தொள தொளப்பாகக் கட்டியுள்ள அந்த சேலைக்கு மேலாக - அவிழ்ந்து விழுந்து விடுமோ என்று அவள் பயந்து பிடித்துக் கொள்ளும் அளவு வெறி பிடித்தவன் போல் மேலும் கீழுமாக அந்த வயிற்றைத் தடவி கண்களில் ஒற்றிக்கொண்டு கைக்கு முத்தம் கொடுக்கின்றான்.

தொட்டில் பார்த்தபின் அச் சிசுவை கட்டியணைத்து முத்தமிடமாட்டானோ!

வெறித்தனமாகவும் அவசரத்துடனும் தனது வயிற்றை அவன் தடவவும் அவனை ஏறிட்டு நோக்கினாள் பாலாயி.

லொட் லொட்டென்று சூடான நீர் அவளுடைய வயிற்றின் மேல் முத்து முத்தாக உதிர்கிறது.

அதிர்ந்து போனாள் பாலாயி.

''ஆண்கள் அழலாமா... கவலைப்படாதீங்க.. எனக்கு ஒண்ணும் ஆவாது. ஆயம்மா எவ்வளவு நல்லவங்க தெரியுமா.. அதான் நாலைஞ்சு நாள்ல வந்துறுவேன்று சொல்றீங்களே... கொழும்பு அம்மாந் தொலைங்களா... ரொம்ப முக்கியமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்டிங்கிங்களா... இல்லாட்டி போவீங்களா.. நீங்க பயப்பு டாமெ போனாத் தானே நானும் பயப்புடாமெ இருப்பேன்...'' என்று அவனைத் தேற்றியவள் கீழுதட்டைக் கடித்து குமுறிக் கிளம்பும் துயரத்தைக் கட்டுப் படுத்திக் கொள்ளுகின்றாள்.

சிவந்து தடித்த கண்களுடன் சிலம்பு விற்கச் சென்ற கோவலன் போல் அவன் வெளியே நடக்கின்றான்.

அவன் தலை மறைந்ததும் தட்டுப்படுத்திய துயரம் அத்த னையும் பீரிட்டுக் கொண்டு கிளம்பியது.

ஓ வென்று கதறியழுதாள் பாலாயி.

உறவு என்று எத்தனையோ இருந்தும் அவனில்லை என்றதும் தனிமை உணர்வு தட்டுகிறது அவளுக்கு.

ஊருக்குப் பயந்து கொண்டு அவன் மனைவியிடம் பொய் கூறவில்லை. வாயும் வயிறுமாக இருக்கும் அவள் அதிர்ச்சிய டைந்து விடக் கூடாதே என்ற பயத்தில்தான் பொய் கூறிக்கிளம் பினான்.

மூத்த மகன் வந்து பாலூற்றட்டும் என்று அந்தத் தாயின் உயிர் பார்த்துக் கொண்டிருக்கவில்லை.

வேளை வந்தது போய் விட்டது.

இவனுக்கும் தான் வேளை வந்து கொண்டிருக்கின்றது.

பெற்றவள் அக்கரையில்.

பெறக்கிடப்பவள் இக்கரையில்.

ஓங்கி அடிக்கும் அலைகள் உறுமும் காற்று. ஒருவர் மேல் ஒருவர் விழுகின்றனர். ஒரு சிலர் வாந்தியும் எடுக்கின்றனர்.

வந்தது மட்டுமா? போவதற்கும் கூட நல்ல தோணி இல்லை!

பளீர் என ஒரு மின்னல். ஒளிக்கீற்று இருளைக் கிழிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுமில்: டுமில்: என்று கர்ணகடூரமாய் வெடிச்சத்தம்.

அய்யோ! அய்யோ அம்மா! என்ற அலங்கோலக் கூச்சலு டன் ஐயோ பாலாயி என்ற சத்தமும் கேட்கிறது.

செத்துப்போன உடலைச் சுற்றி நின்று கொண்டு தப்படிப் பதும் தமுறடிப்பதுமாக ஒரு கூட்டம்.

நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுது ஆர்ப்பாட்டம் செய்யும் ஒரு கும்பல்.

கடைசி வெற்றிலை நான் வைத்திருக்க வேண்டும்; கோடி நான் போட்டிருக்க வேண்டும்; குளிப்பாட்ட நான் தூக்கியி ருக்க வேண்டும் என்று சம்பிரதாயம் பேசும் ஒரு கூட்டம்.

இந்த ஊமைச் சடங்குகள் தான் எத்தனை போலி யானவை!

அடித்துக் கொள்ள; அழ; அரிசிபோட வேண்டிய அவசி யமே இல்லாமல் போய் விட்டது.

கடல் மீன்கள் பசியாறி விட்டுப் போகட்டும் - பாவம்!

இன்று, நாளை; என்று நாளை எண்ணிய பாலாயி எத்தனையோ நாளை எண்ணிவிட்டாள்.

அவர் வரவே இல்லை!

பாலறியாமல் வயிற்றில் கிடந்த ஜீவன் பெண்பாலாய் மண்ணில் விழுந்த மகிழ்ச்சி கூட பகிர்ந்து கொள்ள அவரில்லா மல் மடிந்து விடுகிறது.

குமுறும் நெஞ்சுடன் கொந்தளிக்கும் கண்களுடன் குழந் தையைப் பார்க்கின்றாள்.

'கொழு கொழு வென்று அவர் போலவே' என்ற எண் ணம் அவர் எங்கே' என்ற ஓலத்துடன் ஓடி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

ஆமாம்! ''அவர் எங்கே''? என்ற ஓலத்துடன் தான் ஓடி வந்தாள்.

கேள்வி கேள்வியாகவே நின்றுவிட்டது கடைசி வரை.

''குழந்தை குழந்தை என்று அடித்துக் கொண்டாரே என் தொரை இதோ கொண்டாந்திருக்கேன்! எங்கே ..ஏ.. ஏ... என் ராசா...?'' என்று அழத் தொடங்கியவள் தான் அதன் பிறகு சிரிக்கவே இல்லை.

குழந்தை - சித்திரம் போல் படுத்திருக்கும் அந்த சின்ன அழகு.

மெத்தென்ற உடலுடன் புத்தம் புது வைக்கோலில் படுத்திருக்கும் பசுங்கன்று போல் - துவங்கும் ஒரு சம்மனசு போல் தான் இருக்கிறது.

சின்ன அழகுதான் - சித்திரம்தான் என்றாலும் கண்ணில்லாமல் என்ன சித்திரம் வேண்டிக்கிடக்கின்றது.

குழந்தை விறுவிறு வென்று கத்தும். பார்க்க மாட்டாள் - தூக்கமாட்டாள் பால் கொடுக்கமாட்டாள்.

'என் தொரை வந்து இந்தா பால் குடுன்னாத்தான் குடுப்பேன்...'' என்று நடந்து விடுவாள்.

யார் யாரோ என்னென்னவோ சொல்லியும் - செய்தும் பயனில்லை.

அந்தப் பச்சைச் சிசுவும் எத்தனை நாளைக்குத்தான் கத்தும் - தாக்குப் பிடிக்கும் - போய்ச் சேர்ந்துவிட்டது.

பாட்டி போன உலகத்துக்கு அய்யாவும் போயிருக்கும் உலகத்துக்கு. அம்மாவால் இன்னும் போகமுடியாத அந்த உலகத்துக்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''போடா கண்ணே போ. போய் என் ராசாவையும் கூட்டிக்குனு வந்துடுவே இல்லே..'' என்று அழுதபடியே நீளக் குரலெடுத்துப் பாடுகின்றாள்.

''கண்டி இரு காதம்.

கதிர் கொழும்பு முக்காதம்.

எக்காலம் வருவாரோ...''

பைத்தியம் பைத்தியம் என்று பத்துப் பேர் சொல்லியே அவளைப் பைத்தியம் ஆக்கிவிட்டார்கள்.

அதற்கப்புறம்...!

அவள் சிட்டுக்குருவிதான்! நினைத்ததைச் செய்வாள். நினைத்த இடத்தில் படுப்பாள்.

யாருக்கும் பயப்படமாட்டாள். யாரையும் பயமுறுத்தவும் மாட்டாள். அவர்களாகவே பயந்து கொண்டால் உண்டு.

சேலையில் கொழுந்தெடுக்கக் கூடாது. கடையில் தான் எடுக்க வேண்டும் என்னும் சட்டம் எல்லாம் இவள் வரையில் மட்டம்.

நினைத்த மலையில் கொழுந்தெடுப்பாள். கவ்வாத்தும் வெட்டுவாள். புல்லும் வெட்டுவாள்.

கொழுந்து கூடையைத் தலையில் போட்டுக் கொண்டு மலையில் உள்ள கல்லைப் பொறுக்கிப் போட்டு நிரப்புவாள்.

'ஏண்டி பாலாயி இந்தக் கல்லு'' என்று யாராவது கேட்டு விட்டால் ''அடி மூதேவி ஒனக்குத் தெரியாதா? ஓஹோ நான் ஒனக்குச் சொல்லலையோ.. என் ராசா வர்றாருல்லே.. தனியா வீடு கட்டிக்கப் போறோம்.. இந்தத் தோசிப்பய லயம் வேணாம்னுட்டேன்...'' என்பாள்.

நடந்து கொண்டிருக்கும் போது எங்காவது மலைக்குள் சரசரவென்று சத்தம் கேட்டால் அங்கே பாம்பு நெளியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலாயி நின்று கொண்டிருப்பாள். பச்சையாய் எச்சில் ஒழுகும் வாயுடன்.

''ஏழு குருதை பூட்டுன தேருல என் தொரை ஏறி வரயில சலாம் போடுங்கடான்னா கட்டயில போறவனுகளுக்கெல்லாம் சலாம் போடுது கயிதேக..'' என்று கோபமாகக் கூறியபடி பெறட்டுக் களத்தை நோக்கிக் கோபமாக நடக்கின்றாள் பாலாயி.

பலாமரத்தடியில் குளிர் காய்ந்து கொண்டிருக்கும் ரேடியோ பெட்டரியைப் பார்த்ததும் ''லைசன் எல்லாம் வைச்சில்லாட்டி புடிச்சிக்கிறுவேன்'' என்றவாறு மரப்பாலத்தில் ஏறிவஞடைய காதுகள் விண்ணென்று நிமிர்கின்றன.

'மேல் றோட்டில் பெரிய துரை வருகின்றாராம்''

'மேல் றோட்டில் பெரிய துரை?'

'மேல் றோட்டில் பெரிய துரை'

பாதை நெடுக, லயத்துக்கு லயம் ஆளுக்கு ஆள் இதே பேச்சுத்தான்.

''ஆ.. ஏன் தொரை வந்துட்டாரா? என் ராசா வந்துட்டாரா? எனக்குத் தெரியுமே: என் தொரை என்னை வுட்டுட்டு இருக்க மாட்டாருன்னு...''

கத்தியபடியே வெறி பிடித்தவள் போல் மேல் றோட்டை நோக்கி ஓடுகின்றாள்.

மலையில் நின்ற பெரிய துரை றோட்டுக்கிறங்குகின்றார்.

துரை எங்கெங்கே நிற்கின்றார் - ஏறுகின்றார் - இறங்குகின்றார் என்று எட்டி எட்டிப் பார்த்த வண்ணம் காரை ஓட்டிக் கொண்டிருந்த டிரைவர் மேல் வளைவில் திரும்பியதும் கீழ் றோட்டில் துரைக் காருக்காகப் பார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்டான்.

ஆக்ஸிலேட்டரில் காலழுந்தியது. பாதையைத் தின்று கொண்டு பறந்து வந்தது கார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதோ நிற்கின்றார் துரை.

அதற்குள்ளாக-

குறுக்குள் வெறிபிடித்தவள் போல் ஓடிவந்த பாலாயி பளீரென றோட்டில் ஏறிவிட்டாள்.

படீரென மோதுண்டு மோதிய வேகத்தில் எதிர் வாங்கி யின் கல்லில் விசிரியடிபட்டு பெரிய துரையின் காலடியில் வந்து விழுந்தாள் பாலாயி.

எங்கெங்கிருந்தெல்லாமோ இரத்தம் வழிகிறது.

கடை வாயில் இருந்து பச்சையும் சிவப்புமாய் எச்சில் இழைகிறது.

செய்வதறியாது துரை விக்கித்து நின்றுவிட்ட அந்த ஒரு வினாடியில்

''அதோ என் தொரை கூப்பிடுறாரு... என் ராசா... இதோ வந்துட்டேன்... வந்துட்டேன்... வந்துட்...''

பாலாயி போய் விட்டாள்.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலாயி

தெளிவத்தை ஜோசப் இலங்கையின் மலையக எழுத்தாளர்களின் முன்னோடிகளில் ஒருவர். கடந்த நான்கு சதாப்தங்களுக்கு மேலாக எழுதி வருபவர். இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு உட்பட பல்வேறு பரிசுகளும் பாராட்டுகளும் பெற்ற படைப்பாளி.

'காலங்கள் சாவதில்லை' என்ற நாவலும் 'நாமிருக்கும் நாடே' என்னும் சிறுகதைத் தொகுதியும் ஏற்கெனவே வெளிவந்து பாராட்டுப் பெற்றன. 'புதிய காற்று' என்ற ஈழத்துத் திரைப்படம் இவரது கதை, வசனத்தில் உருவானதே. அண்மையில் 'சுபமங்களா'வும் இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவையும் இணைந்து நடத்திய குறுநாவல் போட்டியில் 'குடைநிழல்' பரிசு பெற்றது.

இத் தொகுதியிலுள்ள ஞாயிறு வந்தது கலைமகளில் வெளி வந்து சிறப்படைந்தது. மனம் வெளுக்க, பாலாயி எனும் மற்றிரு குறுநாவல்களும் கூட இலங்கையின் பொருளா தாரத்தின் பலமான தேயிலைத் தோட்டத்து உழைப்பாளர்களின் வாழ்க்கையை யதார்த்தமாகச் சித்தரிப்பன. 'உலகிற் சிறந்தது இலங்கைத் தேயிலை, மணம், நிறம், சுவை மிக்கது' என நாள்தோறும் விளம்பரப்படுத்தி சுவைக்கப் படும் தேநீருள் மறைந்திருக்கும் மனித உழைப்பின் கசப்புணர்வு பற்றிய விழிப்புணர்வையும் இக்குறுநாவல்கள் ஏற்படுத்த வல்லன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org